விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

Registered as a Newspaper in Srilanka

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆடி 02 சனிக்கிழமை (18.07.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 211




# நான் தேசத் துரோகியாம்!

## தன்னை தூற்றுவதாக மகிந்த காட்டம்



(அநுராதபுரம்)


என்னை ஒரு குற்றவாளியாகவும் தேசத் துரோகியாகவும் உருவகித்துள்ளனர். பிரபாகரனை தூற்றாத வார்த்தைகளால் என்னைத் தூற்றுகின்றனர். ஆனால் நாட்டு மக்களுக்குத் தெரியும் நான் யார்? என்று. வடக்கு கிழக்கில் பயங்கரமான நிலை காணப் படுகின்றது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரி வித்தார். அநுராதபுரத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத் திலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர்அங்குமேலும்உரை யாற்றுகையில்,

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவுக்கு இடமளிக்க கூடாது. தேர்தலில் போட்டியிட வேட்புமனு வழங்கக் கூடாது. தனியாக போட்டியிடட்டும் என்றார்கள். ஆனால் மக் களின் ஆதரவால் அவர்கள் தோல்வியடைந்துவிட்டார்கள். விடுதலைப் புலிகளின் தலை வர்பிரபாகரனை கூட தூற்றாத வார்த்தைகளால் என்னை தூற்றினார்கள். என்னை துடைப்பத்தால் பெருக்கி தள்ளவேண்டும். புதைக்க வேண்டும். இல்லாமல்செய்ய வேண்டும் என்றார்கள். பிர பாகரனும் இதையே தான் சொன்னார். அதையே அவர் கள் பிரதிபலிக்கின்றார்கள்.

24 ஆம் பக்கம் பார்க்க

# ஜனாதிபதிக்கு அச்சுறுத்தல்



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தொடர்பில் வெளியிடப்பட்ட கருத்துக் களுக்கு பின்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கொலை செய்வதற்கான வாய்ப் புள்ளதாக எச்சரிக்கப்பட்டுள் ளது.

பிரஜா சக்தி அமைப்பு இந்த எச்சரிக்கையை விடுத்துள் ளது.

அந்த அமைப்பினால் கடந்த தினத்தில் நுகேகொடையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மக்கள் சந்திப்பில் கலந்து கொண்ட, திரைப்பட இயக்கு நர் தர்மசிறி பண்டாரநாயக்க இவ்வாறு குறிப்பிட்டார்.

ஜனாதிபதி அண்மையில் வெளியிட்ட கருத்துக்கள் மிகவும் முக்கியமானது. அது அவரின் இதயத்தில் இருந்து வந்தவை.

இந்த கருத்துகளுக்கு பின்னர் அவரை கொலை செய் வதற்காக ஏதுநிலைகள் காணப்படுகின்றன.

24 ஆம் பக்கம் பார்க்க













நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



"சிவநெறிப்புரவலர்"

## இளையதம்பி பரராஜசிங்கம்

(முன்னாள் தலைவர், போஷகர் – ஈச்சமோட்டை கலட்டிப்புலம் ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தானம்,
ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் – யாழ்.மாநகரசபை, சுகாதாரப் பகுதி)

"சிவநெறிப்புரவலர்" இளையதம்பி பரராஜசிங்கம் அவர்கள் காலமாகிவிட்டார். (முன்னாள் தலைவர், போஷகர் - ஈச்சமோட்டை, கலட்டிப்புலம் ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தானம், ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் - யாழ்.மாநகரசபை, சுகாதாரப் பகுதி)

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - கண்ணம்மா தம்பதிகளின் புதல்வரும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - செல்லம்மா தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும், திருமதி மல்லிகா இரட்ணசிங்கத்தின் பாசமிகு சகோதரனும், பத்மநாதன் (நேசர்), செல்வராணி, பங்கஜவல்லி, காலஞ்சென்ற சிவக்குமார் ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும், ஜெயகுமார் (ஆசிரியர் - யா/புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்), சாந்தகுமார் (கணக்காளர் - SARA Industries), வசந்தகுமார் (Doha - Qatar), உதயகுமார் (Saudi Arabia), கௌரிதேவி (பவானி), சுரேஸ்குமரர் (Canada), பிரேம்குமார் (Doha -Qater), சதீஸ்குமார் (Canada) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயசோதி, ரோகிணி, சுலோச்சனா, வசந்தகுமாரி, லோகசிவம் (CDO/PRO - மாநகரசபை- யாழ்ப்பாணம்), சுகுணாவதி, பிரியதர்ஷினி, சுமந்தினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், மயூரி - இரதீபன், கஸ்தூரி, அனோஜன், ஆரணி, ஆரபி, அஜந்தன், மீரா, குமணன், வைஷ்ணவி, காலஞ்சென்ற ஷைணவி மற்றும் கஜனி - சிவாகுகன், சுஜனி - ஸ்ரீஹரன், ரம்மியா, சரண்யா, பிரவீன், கீர்த்திகா, கிருஷாந் ஆகியோரின் செல்லப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (19.07.2015) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

82/1, செட்டித் தெரு, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

தகவல் : மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
தொ.பே இல ; 0718562025

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1162)

# வர்ணம் பூசிய நரியே தற்போது ஆட்சியில்!

## உதய கம்மன்பில கிண்டல்

(கொழும்பு)

தற்போது ஆட்சியில் இருப்பது வர்ணம் பூசிய நரிதான். தனது இனங்களை கண்டால் நரி ஊழையிடும். இதுபோன்றே அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாட்டு மக்களுக்கு நிகழ்த்தியிருந்த உரையும் அமைந்திருந்தது. இதன்மூலம் அவருடைய உண்மை உருவத்தை கண்டு கொண்டோம். அவருடைய உடலில் பச்சை நிற இரத்தம் ஓடுகிறது என மேல்மாகாண சபை உறுப்பினர் உதய கம்மன் பில தெரிவித்தார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதியின் உரைக்கு தேர்தல் ஆணையாளர் தடை



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த செவ்வாய்க்கிழமை மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக வெளியிட்ட கருத்தை, இலத்திரனியல் ஊடகங்கள் திரும்பத் திரும்ப ஒளிபரப்புவதற்கு தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தடைவிதித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிட்ட கருத்துக்களை அரச தொலைக்காட்சிகள் திரும்பத் திரும்ப ஒளிபரப்பி வருவதாகவும், அது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும், அதன் வேட்பாளர்களுக்கும் அநீதியாக இருப்பதாகவும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர்கள் தேர்தல் ஆணையாளரை சந்தித்து முறையிட்டிருந்தனர்.

23ஆம் பக்கம் பார்க்க....

## கிளிநொச்சி சாந்தபுரத்தில் இளைஞன் குத்திக் கொலை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி சாந்தபுரத்தில் இளைஞர் ஒருவர் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று மாலை இடம் பெற்ற இச் சம்பவத்தில் இலட்சுமணன் காந்தரூபன் (வயது 24) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

உறவினர்களிடையே ஏற்பட்ட தகராறு காரணமாக இக் கொலை இடம்பெற்றதாக தெரியவருகிறது.

கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ரு)

## மகிந்தவின் சலுகைகளை குறைக்கக் கோரி வழக்கு

(கொழும்பு)

நாடாளுமன்றத் தேர்தல் காலப் பகுதியில் மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு உட்பட விசேட சலுகைகளை குறைக்கும்படி உத்தரவிடக்கோரி உச்ச நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நவசமசமாஜக் கட்சியின் தேசியப் பட்டியல் வேட்பாளரான வழக்கறிஞர் சேனக பெரேரா இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். அதில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டுள்ள விசேஷப்பாதுகாப்பு உட்பட சலுகைகளைத் தேர்தல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்திவருவதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதிக்கு இருநூற்றுக்கும் மேற்பட்ட பாதுகாப்பு அதிகாரிகள் உட்பட பல்வேறு விசேஷ சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. இவை தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டு வருவதாக குற்றம் சாட்டிய மனுதாரர் சேனக பெரேரா, இதன்மூலம் ஏனைய வேட்பாளர்களுக்கு பெரும அநீதி இழைக்கப்படுவதாக குற்றம் சாட்டினார்.

அதேபோன்று, முன்னாள்

23ஆம் பக்கம் பார்க்க....

## மகிந்த, கோத்தபாய மீது போர்க் குற்ற அறிக்கை

(கொழும்பு)

கொலைக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளவர்கள் நாட்டில் நல்லாட்சியை நிறுவமுடியுமா? என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச கேள்வி எழுப்பியுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கும் திட்டத்தின் கீழ் முதலாவது பிரசாரக்கூட்டம் நேற்று அநுராதபுரத்தில் இடம்பெற்றது.

இதன்போது உரையாற்றிய விமல் வீரவன்ச, பட்டலந்த ஆணைக்குழு, பட்டலந்த சித்திரவதையில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தொடர்பிருப்பதாக கூறி அவருடைய சிவில் உரிமைகளை பறிக்க பரிந்துரை செய்தது.

இந்த நிலையில் அவ்வாறான ஒருவருக்கு நல்லாட்சியை ஏற்படுத்த முடியுமா? என்று வீரவன்ச கேள்வி எழுப்பினார். (எ-11)

## தேர்தல் களத்தில் பிக்குகள் திணைக்களத்துக்கு நெருக்கடி

(கொழும்பு)

நாடாளுமன்றத் தேர்தலில் 150 இற்கும் அதிகமான பௌத்த பிக்குகளும் போட்டியில் இறங்கியுள்ளதால், வாக்களிப்பு நிலையங்களை அமைப்பதில் தேர்தல்கள் திணைக்களத்துக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் பௌத்த விகாரைகளிலும் வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

ஆனால், இம்முறை 150 இற்கும் அதிகமான பௌத்த பிக்குகளும் போட்டியிடுவதால், அவர்கள் தங்கியுள்ள இடங்களில் வாக்களிப்பு நிலையங்களை அமைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால், வரும் நாடாளுமன்

23ஆம் பக்கம் பார்க்க....

## ரணிலுக்கு 15 மகிந்தவுக்கு 16

(கொழும்பு)

பொது தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் விருப்பு எண் வெளியாகியுள்ளது.

இதற்கிடையில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுகின்ற பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கு கிடைத்துள்ள விருப்பு எண் 15

23ஆம் பக்கம் பார்க்க....

## 2016 இல் தீர்வு சம்பந்தன் தெரிவிப்பு

(திருகோணமலை)

தமிழ் பேசும் மக்கள் வடக்கு, கிழக்கில் இம்முறை நல்லதொரு வெற்றியை ஈட்டித்தருவார்கள். ஆனால் 2016ஆம் ஆண்டு தமிழ் மக்களுக்கான தீர்வை நிச்சயம் பெற்றுத்தருவோம். எமது இலக்கு 20 ஆசனங்களாகும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தல் செயல்முறை தொடர்பில் கட்சியின் திருகோணமலை கிளைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் மத்தியில் விளக்கமளித்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்

23ஆம் பக்கம் பார்க்க....

## பாதுகாப்புச் செயலர் யாழ்.வருகிறார்

(கொழும்பு)

மீள்குடியமர்வு தொடர்பில் ஆராய்வதற்காக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பஸ்நாயக்க இன்று யாழ்ப்பாணம் வரவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

வலி.வடக்கில் மீள்குடியமர்வுக்காக அனுமதிக்கப்பட்ட பகுதிகள் முழுமையாக விடுவிக்கப்படவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் தொடர்ச்சியாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்தது.

கடந்த பயணத்தின் போது வலி.வடக்கில் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்களை அகற்றுவது தொடர்பிலும் மக்களின் தேவைகளுக்கு முக்கிய பாதைகளை விடுவிப்பது தொடர்பிலும் ஆராயப்பட்டிருந்தது. (எ-11)

## வலி.வடக்கில் மேலும் சில பகுதிகளை விடுவிக்க நடவடிக்கை

உயர் பாதுகாப்பு வலயமாக இருக்கும் யாழ்ப்பாணம் வலி.வடக்குப் பிரதேசத்தில் மேலும் சில பகுதிகள் விடுவிக்கப்படும். இது தொடர்பில் இன்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தலைமையில் நடக்கும் கூட்டத்தில் இறுதி செய்யப்படும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதியில் அமைந்துள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமையகத்தில் அவர் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வந்த மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் உயர் பாதுகாப்பு வலயத்தின் பகுதிகளைப் பார்வையிட்டார். இதன்போது அவருக்குப் பல விடயங்களைத் தெளிவுபடுத்தினோம்.

இந்நிலையில் இன்று உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தலைமையில் கூட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் உயர் பாதுகாப்பு வலயத்தில் இருக்கும் பகுதிகள் சிலவற்றை விடுவிப்பது தொடர்பில் ஆராயப்படவுள்ளது என்றார். (எ-11)

## துறைமுக நகரத் திட்டத்தை நிறுத்த இந்தியா அழுத்தம்!

### கோத்தபாய குற்றச்சாட்டு

(கொழும்பு)

சீனாவின் முதலீட்டில் மேற்கொளளப்படும் கொழும்புத் துறைமுக நகரத் திட்டத்தை நிறுத்துமாறு மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்திடம், இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் அழுத்தம் கொடுத்தார் என்று முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடந்த கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இந்த தகவலை வெளியிட்டார்.




இந்தியாவில் பாஜக அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தேன்.

கொழும்புத் துறைமுக நகரத் திட்டத்தை நிறுத்த வேண்டும்

23ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னையைத் தாக்கும் செவ்வண்டும் அதன் நவீன கட்டுப்பாடும்



ஜெ.சத்தியேந்திரன்.
தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்-கிளிநொச்சி
(உதவி முகாமையாளர்- தொழினுட்பம் தென்னைப் பயிர்ச் செய்கைச்சபை)

விஞ்ஞான ரீதியாக, ரின்கோ போரஸ் பெருன்ஜீனஸ் (Rhyncho phorus Ferrungineuse) என அழைக்கப்படும் செவ்வண்டு தென்னை வளரும் இடங்கள் எல்லாவற்றிலும் காணப்படும் 3-15 வருட தென்னைகளைப் பாதிக்கும் அதிமுக்கியத்துவம் வாய்ந்த தீவிரமான பீடை ஆகும். இதன் இனங்கள் பல வகையாகக் காணப்பட்டாலும், பெருன்ஜீனஸ் என்ற இனமே எமது பிரதேசங்களில் கூடுதலாகத் தாக்குகின்றது.

செவ்வண்டுத் தாக்கத்திற்கு ஏதுவான காரணிகள்:-



இளம் தென்னை மரங்களின் புதிய காயங்களில் மட்டுமே முட்டையிடுகின்றன. சில வேளைகளில் அதிக நீர்மட்டம் காரணமாக தண்டுகளில் வேர் உருவாகும் இடத்திலிருந்து காற்று வேர்கள் உருவாக்குவதனால் தண்டு பெரியதாகும் சந்தர்ப்பத்தில் இயற்கை வெடிப்புக்கள் ஏற்படுத்தப்படுகின்றன.

### சேதத்தின் தன்மையும் இனங்காணலும்


சேதம் செவ்வண்டுகளின் குடம்பிப் பருவத்தினால் ஏற்படுத்தப்படுகின்றது. பெருமளவிலான குடம்பிகள் உள் இழையங்களை உண்ணுவதால் மரத்தின் வட்டுப்பகுதி அல்லது அடிப்பகுதி பாதிப்படைந்து இறுதியில் இறந்துவிடுகின்றது.

ஆரம்ப தொற்றுதலின் போது செவ்வண்டுத் தாக்கத்தினை கண்டுபிடிப்பது மிகவும் கஷ்டமானதாகும். அறிகுறிகளாக, வட்டுப்பகுதியில் அல்லது அடிமரத்தில் துளைகள் காணப்படும். இவற்றிலிருந்து வண்டினால் மெல்லப்பட்ட நார்கள் வெளித்தள்ளப்பட்டுக் காணப்படும்.

விடியற் காலைப்பொழுதில் தென்னையின் அடியில் காதினை வைத்து ஒட்டுக் கேட்டால், நற நற என்ற ஒருவித ஒலியைக் கேட்கக் கூடியதாக இருக்கும். இலைகள் மஞ்சளாகும். குருத்துப்பகுதி வாடி வதங்கி காணப்படும். ஓலையின் அடிப்பகுதி மட்டையில் நார்த் தன்மையான புழுக் கூடுகளை அவதானிக்க முடியும்.

### செவ்வண்டு பற்றிய விளக்கம்


நிறைவுடலிவண்டு, சிவப்பு சார்ந்த கபில நிறமாகவும் 36 mm நீளமும், 10 mm அகலமும் உடையதாக இருக்கும். தலையில் காணப்படும் நீண்ட மூக்கினால் வித்தியாசப்படுத்தப்படும். உடலின் பின் நடுப்பகுதியில் கடும் நிறப்புள்ளிகள் காணப்படும். பெண் செவ்வண்டுகள் மரத்திலுள்ள காயங்களிலிருந்து உண்டாகும் திரவத்தின் வாசத்தினால் கவரப் படும். புதிய துவாரங்களில் பெரிய எண்ணிக்கையில் மிகச் சிறிய வெண் ணிற முட்டை வடிவ முட்டைகளை இடும். முட்டைகள் 3-5 நாட்களுக்குள் குடம்பியாகப் பொரித்து அடிமரம் அல்லது அரும்புகளின் நார் இழையங்களை உண்கின்றன. இக்குடம்பி 35 mm நீளம் வரை வளர்ந்து இதன் கபில நிறத் தலையினால், வெண்ணிற கால்களற்ற உடம்பினால் இலகுவாக அடையாளம் காணலாம்.



55 நாட்களின் பின்னர், அடி மரத்தின் வெளிமேற்பரப்புக்கு அருகில் நார் கொண்ட புழுக்கூட்டை உருவாக்குகின்றன. இப்புழுக்கூட்டுக்குள் காணப்படும் கூட்டுப்புழுதான் அதன் ஓய்வு காலம் ஆகும். 20 நாட்களின் பின்னர் நிறைவுடலி வண்டு அடிமரத்தினை அல்லது ஓலைக் காம்பினை வெட்டி துளையிடுவதன் மூலம் வெளியே வருகின்றது. இவ்வாறு தோன்றிய ஆண் வண்டுகள் பெர மோன் சேர்க்கையினை வெளிவிடுகின்றன. இச்சேர்வையினால் ஆண், பெண் வண்டுகள் கவர்ந்திழுக்கப்பட்டு தொற்றுக்குள்ளான மரத்திலேயே இரண்டாவது சந்ததியின் இனப்பெருக்கமும் ஆரம்பிக்கப்படுகின்றது. இதன் விளைவு தென்னையின் வட்டு சரிந்து விழுந்து இறப்பு ஏற்படும்.

### செவ்வண்டுத் தாக்கத்தினை தடுத்தல்

செவ்வண்டு முட்டையிடலைத் தடுப்பதற்காக, எல்லா இளம் தென்னை மரங்களின் அடிப்பகுதிக்கு அல்லது இலைக் காம்புகளின் புதிய காயங்களுக்கு நிலக்கரித்தார் அல்லது என்ஜின் ஒயில் பூசுதல் வேண்டும்.







சில சமயங்களில் செவ்வண்டுத்தாக்கத்திற்கு உள்ளான மரங்கள் ஏற்கனவே கருவண்டினால் பாதிப்படைந்து இருந்தால் அந்தக் காயங்களில் செவ்வண்டு முட்டையிட வாய்ப்புண்டு.

கருவண்டுத்தாக்கத்தினைத் தடுப்பதற்கு உக்கிய மரக்குற்றிகளை காணியில் இருந்து அகற்றி விடவும் அல்லது எரித்துவிடவும்.

இளம் தென்னைகளில் காயங்களை ஏற்படுத்துவதனை தவிர்க்க வேண்டும்.

ஷெல் பட்ட மரங்களிலுள்ள துவாரங்களை தார் அல்லது களிமண் கொண்டு அடைத்துவிடலாம்.


மிக உக்கிரமாகத் தாக்கப்பட்டு குணமடையாத நிலையிலுள்ள மரங்களை தறித்து உடன் எரித்துவிடுதல் வேண்டும்.

### செவ்வண்டினைக் கட்டுப்படுத்தும் முறைகள்

இதனைக் கட்டுப்படுத்த கடந்த காலங்களில் பரிந்துரைக்கப்பட்ட பூச்சி நாசினி மொறோகுரோடோபொஸ் ஆகும். ஆனால், தற்சமயம், இப்பூச்சி நாசினி தடை செய்யப்பட்டுள்ளது.

முறைI: பெரமோன் பொறியினைப் பாவித்தல்- 5 ஏக்கரினை விடக் கூடிய தென்னந்தோட்டங்களுக்கு இப் பெரமோன் பொறி வைத்தல் சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

முறைII: இரசாயன முறை- செவ்வண்டுத் தாக்கத்தினைக் கட்டுப்படுத்த புதிய வகையான கிருமி நாசினியை தென்னை ஆராய்ச்சி நிலையம் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த கிருமி நாசினியினை உபயோகித்து தென்னைச் செய்கையாளர்கள் பூரண பலனை அடைய முடியும்.



சந்தைப்பெயர்:- Virtako -வேட்டக்கோ

அளவு:- 60 மில்லிலீற்றர்.

வேறுபெயர்கள்:-Thayamenokasam 20 %

Clorentraniphol 20 %

**புதியதாக செவ்வண்டுத் தாக்கத்தினைக் கட்டுப்படுத்த அறிமுகப் படுத்தப்படும் வேட்டக்கோ பூச்சி நாசினியினை பாவிக்கும் முறை**

4 g பக்கட் அளவில் பெற்றுக்கொள்ள முடியும். இதில் இருக்கும் 4 g தூளை 250 ml (மில்லி லீற்றர்) (1/4 லீற்றர்) நீரில் கரைத்து, 60 ml (மில்லி லீற்றர்) இனை ஒரு மரத்திற்கு செலுத்த முடியும். மரத்தின் உயரம் 5 அடி அல்லது அதற்கு குறைந்தால் மரத்தின் உயரத்திற்கு ஏற்றவாறு செலுத்தலாம்.

உதாரணமாக:- மரத்தின் உயரம் 5 அடி எனில் முதலாவது துளையினை 1-2 அடி உயரத்திலும், 2 ஆவது துளையினை 4 அடி உயரத்திலும் இடலாம். 1 ஆவது துளையிட்ட எதிர்ப்பாகத்திற்கு 2 ஆவது துளையினை இடவும்.

5 அடிக்கு மேல உயரமுள்ள மரமாயின், மேற்குறித்த முறையில் துளையிட்டு 5 அடியினை விட உயரத்தில் இருபுறமும் இரு துளையினை மேலதிகமாக இடல்வேண்டும்.

### பூச்சி நாசினி உட்செலுத்தும் முறை

4 g பக்கட் தூளை போத்தலில் இட்டு 1/4 லீற்றர் நீரில் கரைக்கவும்.

மரத்தின் உயரத்திற்கு ஏற்ப 5 cm ஆழத்தில் $45^{0}$ கோணத்தில துறப்பணத்தின் உதவி கொண்டு துளையினை இடலாம். (இதற்கு மின்சார துளையிடு கருவியினையும் பாவிக்கலாம்) இவ்வாறு துளையிடும் போது- கறுப்பு அல்லது ஊதா நிறத்தில் துறப்பணம் காணப்பட்டால் அவ்விடத்தில் பூச்சிநாசினி உட்செலுத்தக்கூடாது. வெள்ளை சார்ந்த நிறமாக இருந்தால், பூச்சிநாசினி உட்செலுத்த உகந்த பிரதேசம் ஆகும்.

சிறிஞ் (ஊசி) ஒன்றை கொள்வனது செய்து (5 ml அளவு) பூச்சி நாசினியை அளந்து எடுக்கவும். சிறிஞ்சின் அளவு 5 ml ஆக இருப்பின், மெதுவாக மொத்த அளவு 60 ml உட்செலுத்த முடியும்.

பூச்சிநாசினி செலுத்திய பின்பு, தென்னை மரத்திற்கு ஏற்படுத்தப்பட்ட துளைகளை களிமண் அல்லது சீமெந்தினால் மூடிவிடவேண்டும்.

பூச்சிநாசினி செலுத்திய பின்பு மரத்திலிருந்து நீர்வடிதல் போன்ற அறிகுறிகள் தென்பட்டால், 2 கிழமைகளின் பின்பு மீண்டும் இதே செயன்முறையினைத் தொடர வேண்டும் (1முறை)

பூச்சிநாசினிகள் நஞ்சாக இருப்பதனால் மிகவும் அவதானமாக கையுறை பாவித்து இச்செயன்முறையினைச் செய்யவும்.

மேற் கொண்டு செவ்வண்டுத்தாக்கம் பற்றிய விளக்கங்கள் தேவைப்படுவோர், அவ்வப்பிரதேசத்திலுள்ள கமநல சேவை நிலையங்களில் உள்ள தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் காரியாலயங்களில் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தரினைச் சந்தித்து பெற்றுக்கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஜித் மீதான வழக்கு குறித்து ஆதாரம் வழங்க திகதிகுறிப்பு

வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிகளின் நிதியை பயன்படுத்தி, வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சர் சஜித் பிரேமதாஸவினதும் ஐ.தே.க. உறுப்பினர்களினதும் அரசியல் ஆதரவாளர்களுக்கு கடன் வழங்கப்படுவதாக செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு ஜூலை 29ஆம் திகதியில், ஆதாரம்வழங்குமாறு உயர் நீதிமன்றம், நேற்று முன்தினம் வியாழக்கிழமை அறிவித்துள்ளது. நீதியரசர் குழுவில் பிரியந்த ஜயவர்த்தன மற்றும் உபாலி அபேரத்ன ஆகியோர் காணப்பட்டனர். இந்த மனுவை அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உதவியாளர் சங்கமும் அதன் பிரதான உறுப்பினர் இருவரும் தாக்கல் செய்தனர்.

மனுதாரர் சார்பில், ஜனாதிபதி வழக்குரைஞர் மனோகர டி சில்வா ஆஜரானார். சஜித் பிரேமதாஸ சார்பில் ரெமேஷ் டி சில்வா, சாலிய பீரிஸ் சுகத் கல்டெராகவும் ஆஜராகினர். பிரதமர் சார்பில் ஜி.ஜி. அருள் பிரகாசம் வழிப்படுத்தலில் மூன்று பிரபல வழக்குரைஞர்கள் ஆஜராகினர்.

சமுர்த்தி பயனாளிகளுள் தெரிவு செய்யப்பட்ட சிறிய பிணையாளர் குழுவுக்கு வெளியே உள்ளவர்களான, கடன்களுக்கு சிபாரிசு செய்ய அனுமதிக்கும் சுற்றறிக்கை சமுர்த்தி வங்கித் திட்டத்தை அரசியல் சலுகைகள் வழங்க பயன்படுத்த வழிவகுத்துள்ளதென மனுதாரர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்த குற்றச்சாட்டு தொடர்பில் நிதி மோசடி புலனாய்வு பிரிவுக்கு முறையிடச் சென்றபோது, அவர்கள் முறைப்பாட்டை ஏற்க மறுத்து, பிரதமரால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள விசேட புலனாய்வு பிரிவு அனுப்பி வைக்கும் முறைப்பாடுகளை மட்டுமே தாங்கள் ஏற்பதாக கூறியதாக, மனுதாரர் முறையிட்டுள்ளார். (இ-7)

# சிவபூமி பாடசாலை மாணவர்களை வழியனுப்பும் நிகழ்வு

சர்வதேச ரீதியில் அமெரிக்காவில் எதிர்வரும் 26 ஆம் நடைபெறவுள்ள விசேட தேவையுடைய மாணவருக்கான ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொள்ளவுள்ள சிவபூமி பாடசாலை மாணவர்களை வழியனுப்பும் வைபவம் நேற்றுமுன்தினம் கோண்டாவிலில் உள்ள சிவபூமி பாடசாலையில் நடைபெற்றது.

வடமாகாணத்தில் 200 மீற்றர் ஓட்டப்போட்டியில் கலந்துகொண்டு தேசிய மட்டத்தில் சாதனை படைத்து அமெரிக்க லொஸ்ஏஞ்சல் நகரில் நடைபெறவுள்ள சர்வதேச ஒலிம்பிக் போட்டிக்கு சிவபூமி பாடசாலை மாணவர்களான அரசகுலசூரியர் மயூரன் மற்றும் ஜெயச்சந்திரன் மனோஜன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

சிவபூமி பாடசாலையின் தலைவர் ஆறு திருமுருகன் தலைமையில் நடைபெற்ற மாணவர்களை ஆசீர்வதித்து வழியனுப்பும் நிகழ்வில்,

ஆசியுரையை நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளும் வழங்கினார்.

வரவேற்புரையை சிவபூமி அறக்கட்டளையின் உபதலைவர் க.சிவாஜி வழங்கினார்.

வாழ்த்துரையை யாழ்.பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் தி.வேல்நம்பி, யாழ். பல்கலைக்கழக வணிகத்துறை தலைவர் க.தேவராஜா, வட மாகாண விசேட ஒலிம்பிக் பணியாளர்மா.இளம்பிறையன் ஆகி யோர் வழங்கினார்கள்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் ஆ.நடராஜனும் அவரது பாரியாரும் கலந்து கொண்டனர்

கௌரவ விருந்தினராக அமெரிக்காவின் ஒலிம்பிக் ஆலோசகர் நா.எதிர்வீரசிங்கம் கலந்து கொண்டார். (இ-9)






மலேசியாவில் சிறந்த கம்பனியில்

40 பேருக்கு உடனடி வேலைவாய்ப்பு

தொழிற்சாலை ஊழியர்கள் Factory Workers

ஊதியம் 900 RM மேலதிக கொடுப்பனவு உண்டு

*1RM = 42 LKR

நிபந்தனைகள்

- ஒப்பந்த காலம் 3 வருடம் ■ தங்குமிடம், போக்குவரத்து, வைத்திய வசதி நிறுவனத்தினால் வழங்கப்படும்.
- ஒப்பந்த கால முடிவின் போது திரும்பி வருவதற்கான விமான டிக்கட் வழங்கப்படும் ■ உணவுக்கான கொடுப்பனவு வழங்கப்படாது ■வயதெல்லை 20-35. ■ சேவை நேரம் கிழமைக்கு 48 மணித்தியாலம்
- ஏனைய நிபந்தனைகள் அந்நாட்டு சட்டத்திட்டத்திற்கமைய இடம்பெறும்.

*CV Collection Only

20 வருட கால அனுபவத்தை கொண்ட

SIO INTERNATIONAL

Recruitment Agency

No. 77, First Floor, People Park Shopping Complex, Gas Work Street, Colombo-11, Sri Lanka.

T.P : +94 11 5330032, Fax : +94 11 2332977, Hotline : +94 72 2364655, 72 7977977

யாழ்ப்பாணத்தில் தொடர்புகொள்ள : +94 72 2269876, 72 2269874

www.siojobs.com

(1168)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மக்கள் பேரம் பேசும் தேர்தலாக இதனை மாற்றிக் கொள்ள வேண்டும்!

## பொன்.செல்வராசா தெரிவிப்பு

**எதிர்வரும் தேர்தலை தமிழ் மக்கள் தங்களது பிரச்சினைகளை தீர்த்துவைப்பதற்கான பேரம் பேசும் தேர்தலாக மாற்றிக் கொள்ள வேண்டும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட தலைமை வேட்பாளரான பொன்.செல்வராசா தெரிவித்துள்ளார்.**

தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைமை வேட்பாளர் பொன்.செல்வராசாவின் தேர்தல் பிரசாரப் பணிகள் நேற்று முன்தினம் பிற்பகல் மட்டக்களப்பில் ஆரம்பிக்கப்பட்டன.

இதன்போது தமிழ் தேசிய கூட்டமைப்பின் வெற்றிக்கு விசேட பூஜைகள் நடத்தப்பட்டதுடன் அரசடி பெரியதம்பிரான் ஆலயத்தில் பாராளு மன்ற தேர்தலுக்கான முதல் தேர்தல் பிரசாரக்கூட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இங்கு உரையாற்றிய பொன்.செல்வராசா,

கடந்த பத்து ஆண்டுகளாக இந்த நாட்டில் பாரிய நெருக்கடி நிலையொன்று இருந்துவந்தது. யுத்தம் முடிவுக்கு வந்ததன் பின்னர் இந்த நாட்டில் அரச பயங்கரவாதம் ஒன்று இருந்தது.

இந்த அரச பயங்கரவாதம் இந்த ஆண்டு தை மாதம் எட்டாம் திகதி வரை நீடித்திருந்தது. ஜனாதிபதி தேர்தலில் அது முடிவுக்கு கொண்டு வரப்பட்டு இன்று புதிய ஜனாதிபதி நாட்டை ஆட்சிசெய்து வருகின்றார். நாங்கள் இன்று ஓரளவு சமாதானத்துடன் வாழ்கின்றவர்களாக இருக்கின்றோம்.

போர் முடிவுக்கு வந்ததன் பின்னர் தமிழ் மக்களை காப்பாற்றக்கூடியவர்கள் யார் என்ற கேள்வி எழுந்தபோது 2010ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு வடகிழக்கு தமிழ் மக்கள் ஒட்டுமொத்தமாக வாக்களித்து தமிழ் தேசிய கூட்டமைப்பே தமிழ் மக்களுக்கு காவலர்கள் என்பதை உலகுக்கு வெளிக்காட்டினர்.

வடக்கினை விட கிழக்கு மாகாண மக்கள் தமிழ் தேசியத்தில் பற்றுக்கொண்டவர்கள் என்ற காரணத்தினால் இங்கு அனைத்து தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் தமிழ்தேசியகூட்டமைப்பில்இருந்தே தெரிவு செய்யப்பட்டனர்.

அதேபோன்று இந்த ஆண்டு நடைபெறவுள்ள பாராளு மன்ற தேர்தலிலும் தமிழ் தேசிய கூட்டமைப்பினை வெற்றிபெறச் செய்வீர்கள் என எதிர்பார்க்கின்றோம்.

2010ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பு மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்று ஆசனங்களைப் பெற்றது. ஆனால் இந்த முறை ஒரு ஆசனத்தினை கூடுதலாக பெற்று நான்கு ஆசனங்களை தமிழ் தேசிய கூட்டமைப்பு பெற்றுக்கொள்ளும்.

நடைபெறப்போகும் தேர்லானது இந்த நாட்டில் புரையோடிப் போயுள்ள தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணப்போகும் பாராளுமன்றமாக இருக்கப் போகின்றது.

கடந்த காலத்தில் அரசாங்கததுடன் பல தொடர் பேச்சு வார்த்தைகளை நடத்தினாலும் கூட அந்தபேச்சு வார்த்தைகள் வெற்றியளிக்கவில்லை. 'ராஜபக்ஷ அரசாங்கம் எமது கட்சியை புறக்கணித்தது. பேச்சுவார்தையினை தொடர்ந்து முன்செல்வதை தடுத்தது. முறித்தது. ஆனால் துவண்டு செல்லவில்லை.

சர்வதேசத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தி ஐரோப்பிய நாடுகள் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக எடுத்துக் கொண்ட பிரேரணை சர்வதேசத்தினை விழிப்படைய செய்த பிரேரணையாக இருந்தது. நாங்கள் மூன்று தடவைகள் சர்வதேச ரீதியாக வெற்றியடைந்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அரசியலிலிருந்து விலகவேமாட்டேன்

## மஹிந்த அமரவீர உறுதி

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆற்றிய உரை காரணமாக அரசியலில் இருந்து விலகுவதாக கூறிய முன்னாள் அமைச்சர் மஹிந்த அமரவீர அரசியலில் நீடிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தான் அரசியலில் இருந்து விலகுவதற்கு மேற்கொண்ட தீர்மானத்தை இராஜினாமா செய்து கொள்வதாக குறிப்பிட்டுள்ளார்.

மக்களின் அழுத்தம் காரணமாக நான் இத்தீர்மானத்தை மேற்கொண்டதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# மரண அறிவித்தல்

## திருமதி சிவக்கொழுந்து சண்முகரட்ணம்

**மண்ணில்: 01.12.1946**
**விண்ணில்: 14.07.2015**



*யாழ்.கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட சிவக்கொழுந்து சண்முகரட்ணம் அவர்கள் 14.07.2015 அன்று காலமானார்.*

*அன்னார் சண்முகரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும் கனகம்மா அவர்களின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற முருகேசு அவர்களின் மைத்துனியும் நிரந்தன் (கனடா), நிர்மலன் (அவுஸ்திரேலியா), நிரஞ்சனா (கனடா), நிசாந்தினி (கனடா), நிரோசினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் கிருத்தீபன், தயாபரன், சுதன், வாணி, ரூபி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சாகித்தியா, சங்கீத், சாருஷ், ஆதிஷ், திசான், சண்விகா, நிகேஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.*

*அன்னாரின் பூதவுடல்* Mahinda Funeral Directors & Florists, No.591, Galle Road, Mount Lavinia *வில் சனிக்கிழமை 18.07.2015 இன்று பிற்பகல் ஒரு மணி முதல் 6 மணிவரை பார்வைக்காக வைக்கப்படும்.*

*அன்னாரின் இறுதிக் கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை 19.07.2015 நாளை முற்பகல் 10 மணியளவில் ஆசையா வீடு, கரவெட்டி மத்தி, கரவெட்டியில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.*

*இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.*

**தகவல்: வீ.சண்முகரட்ணம்**
**தொடர்பு: 077 761 2167**

# 85 வீதமான வீதி அபிவிருத்திப் பணிகள் வடமாகாணத்தில் பூர்த்தியடைந்துள்ளன

வடக்கு மாகாணத்தில் இந்த வருடம் 85 வீதமான வீதி அபிவிருத்திப் பணிகள் பூர்த்தி அடைந்துள்ளதாக வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் 2015ஆம் ஆண்டுக்கான திட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் கடந்த புதன்கிழமை நண்பகல் யாழ்ப்பாணத்தில் உள்ள வீதி அபிவிருத்தி அமைச்சரின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

அதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வட மாகாணத்தில் வீதி அபிவிருத்திப்பணிகள் 85 வீதம் பூர்த்தி அடைந்தமைக்கு என்து வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு, சில மாவட்டங்களில் வீதி அபிவிருத்திப் பணிக்கு கிரவல் அகழ்தல் பாரிய பிரச்சினையாக இருப்பதால் அபிவிருத்திப் பணிகள் தாமதமடைவதாக அதிகாரிகள் தெரிவித்ததற்கமைய கிரவல் அகழ்தல் தொடர்பாக சம்பந்தப்பட்ட அரச அதிபர்களுடன் ஏற்கனவே சந்திப்புக்கள் இடம்பெற்றுள்ளதாகவும் விரைவில் அது தொடர்பாக சுமுகமான முடிவு எட்டப்படும் எனவும் அத்துடன் மிகுதி பணிகளை விரைவாக முடிக்குமாறும் சகல பொறியியலாளர்களுக்கும் பணிப்பாளருக்கும் பணிப்புரை விடுத்தார்.

இக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் டி.சிவராசலிங்கம், வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களின் வீதி அபிவிருத்தி திணைக்கள பிரதம பொறியியலாளர்கள், மாவட்ட பொறியியலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-9)

# ராசி பலன்

18.07.2015
(ஆடி 02, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.01 மணிவரை
துதியை முற்பகல் 9.20மணிவரை
ஆயிலியம் முன்னிரவு 7.21 மணிவரை
இராகுகாலம் 9.00-10.30 மணிவரை
சுபநேரம்-3.00-4.30மணிவரை

| | | | |
|---|---|---|---|
| கேது | | | செவ் |
| | மாலை 3.31ற்கு சிங்-சந் | | சூரி, சந், புதன் |
| | | | குரு சுக் |
| | | சனி | ராகு |

வளவன்

**மேடம்:** கொடுக்கல் வாங்கல்கள் சுமுகமாக அமையும்,தொட்ட காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், வீட்டை அழகு படுத்தும் எண்ணம் உருவாகும், பயணங்களால் பலனுண்டு.

**இடபம்:** சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், மூத்த சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**மிதுனம்:** நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், கடினமான வேலைகளைக் கூட நயமாகப் பேசி முடித்துக் கொள்வீர்கள், வெளியூர் பயணங்களால் ஆதாயமுண்டு.

**கடகம்:** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபடவேண்டிய நாள், நண்பர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு

**சிம்மம்:** வேலைச்சுமை அதிகரிக்கும் நாள், செலவுகள் அதிகரிக்கும், பயணங்களின்போது விழிப்புணர்ச்சி அவசியம், கோபத்தை குறைத்து செயலில் தீவிரம் காட்டுவது நல்லது.

**கன்னி:** பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**துலாம்:** சொல்லை செயலாக்கி காட்ட முற்படுவீர்கள், தொழிலில் புதிய முதலீடுகள் செய்யும் எண்ணம் உருவாகும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.

**விருச்சிகம்:** வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் வெற்றிதரும், விருந்தினர் [illegible] யோக[illegible] மகிழ்வீர்கள்.

**தனுசு:** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் ஏற்படும் வாய்ப்புண்டு, பிரயாணங்களின்போது விழிப்புணர்ச்சி அவசியம், செலவுகள் அதிகமாகும்.

**மகரம்:** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு

**கும்பம்:** சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள், போசன நன்மையுண்டு.

**மீனம்:** புண்ணிய காரியங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவுக்கு இருவர் மட்டும் பாதுகாப்பு வழங்குவார்கள்!

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றம் சென்றால் இரண்டு பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் ஒரு வாகனமும் வழங்கப்படும் என அமைச்சரவை பேச்சாளர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றிற்கு தெரிவு செய்யப்பட்டால், முன்னாள் ஜனாதிபதிக்கான சகல வரப்பிரசாதங்களும் இரத்து செய்யப்படும். அன்று நாட்டின் தலைவராக பதவி வகித்தவர் இன்று பியோன் (காரியாலய உதவியாளர்) பதவிக்காக போராடுவது ஏன்என்பது புரியவில்லை. மகிந்த ராஜபக்ஷ அதிகார மோகத்தில் வீங்கிப் போயுள்ளார். எப்படியவாது நாடாளுமன்றிற்குள் செல்ல முயற்சிக்கின்றார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க பதவியை விட்டு ஓய்வுபெற்றுக் கொண்ட போது அவருக்கான வரப்பிரசாதங்களை குறைக்கும் நோக்கில் மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவானால அவருக்கு கடந்த கால வரப்பிரசாதங்கள்கிடைகாது என்ற திருத்தத்தை கொண்டு வந்திருந்தார். அந்த திருத்தத்தின் அடிப்படையில மகிந்த நாடாளுமனற உறுப்பினராகி னால் முன்னாள் ஜனாதிபதிக்கான சகல வரப்பிரசாதங்களையும் இழக்க நேரிடும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-7)

september 12 யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் வகுப்புக்கள்




**Speciality of our course**

- Special attention to Advanced Grammar
- 12 Practice tests with explanation
- Unlimited hours for listening practice
- Speaking practice

வகுப்புக்கள் 20-07-2015 ல் ஆரம்பம

**COURSE SCHEDULE**

| | Saturday & Sunday | Mon,Tues,Wed,Thur |
|---|---|---|
| Duaration | 8 Week | 8 Week |
| Time | 8.00 - 11.00 | 8.30 - 11.00, 5.00 -7.00 |

வகுப்புகள் இப்பொழுது நடைபெறுகின்றன.

IELTS

**BRITISH COLLEGE OF ENGLISH**

No 192, Navalar Road, Jaffna. (பெருமாள் கோவிலுக்குச் சமீபமாக)

Tel : 021 222 0384 தொ.பே : 0778803887

இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 27 உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: அரச தொழில்<br>தொ.இ: B/4738 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 51 செவ் 1 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BA<br>தொ.இ: G/4772 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 45 செவ் 12 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில் O/L/ இத்தாலி PR<br>தொ.இ: B/4739 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகைசூரிசெவ் 8 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: O/L<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் முக்கியம்<br>தொ.இ: G/4773 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 19 செவ் 12 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: BSC, NCE/ அரச தொழில்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: B/4740 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 26<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: பட்டதாரி/ ஆசிரியர்<br>தொ.இ: G/4774 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 31 சூரிசெவ் 8 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L/ லண்டன் NOT PR<br>தொ.இ: B/4741 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 28 உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: HNDA, BSC/ அரச தொழில்<br>தொ.இ: G/4777 |

**கல்யாண மாலை**

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

# புனித இன்ப பெருநாளான ஈதுல் பித்ரே வருக

புனித ரமழான் பூராகவும் பகல் முழுவதும் நோன்பு நோற்று, இரவெல்லாம் வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டு வந்த முஸ்லிம்கள் ஷவ்வால் மாத தலைப் பிறை தென்பட்டவுடன் ஈதுல் பித்ர் எனும் ஈகைத் திருநாளை குதூகலமாக கொண்டாடுகின்றனர். இறை அருளையும் பாவ விமோசனத்தையும் அடைய நேற்று வரை தூண்டிக் கொண்டிருந்த ரமழான் எனும் விசேட மகத்துவமான மாதத்தை வழியனுப்பி வைத்து கவலையில் ஆழ்ந்த இறை விசுவாசிகளுக்கு ஆறுதலாகவும் மகிழ்ச்சியாகவும் இறைவன் வழங்கிய மாண்புமிக்க தினமே புனித நோன்புப் பெருநாள் தினமாகும்.

ஈதுல் பித்ர் பெருநாளில் அதிகமானளவு நன்மை களை செய்ய நாம் முன்வர வேண்டும் நாம்மட்டும்பெருநாளைக் கொண்டாட அயல் வீட டார் பெருநாளைக கொண்டாட வசதியற்றவ னாக இருப்பானேயானால் நாம் கொண்டாடும் பெரு நாளில் என்ன தாற்பரியம் உண்டு என்பதை நாம்ஒவ்வொருவரும்உணர வேண்டும்.

நோன்புப் பெருநாளுக்கு ஒவ்வொரு முஸ்லிமும் தயாராகும் போது பித்ரா (தர்மம்) கொடுப்பதைக் கொண்டே தயாராக வேண்டும் என்று நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். நோன்புப் பெருநாள் தர்மம் நோன்பின் போது ஏற்பட்ட தவறுகளுக்குப் பரிகாரமாகவும் ஏழை, எளியவர்கள் பெருநாள் தினதத்தில் பசி, பட்டினியோடு இருக்கக் கூடாது என்ற நோக்கங்களின் அடிப்படையிலும் கடமையாக்கப்பட்டுள்ளது.

ஒருவருக்கு இருக்கும் உரிமைகளும் மத, கலாசார கொள்கைச் சுதந்திரங்களும் இன்னுமொருவருக்கு இடைஞ்சலாக இருக்க முடியாது என்பது ஜனநாயக தத்துவங்களில் ஒன்றாகும். இதை அல்லாஹ்தான் அவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும்.

இஸ்லாம் இம்மை, மறுமை பயன்களை அடைந்து கொள்ளக் கூடிய வகையில் பெருநாளைக் கொண்டாட வழிகாட்டியுள்ளது. நபி (ஸல்) அவர்கள் பெருநாள் தினத்தில் பள்ளிவாசலுக்குச் செல்லும்போது ஒரு வழியால் சென்று மற்றுமொரு வழியால் திரும்பி வருவார்கள். இதன் மூலம் பலரை சந்திக்கவும் ஏழைகளுக்கு உதவி புரியவும் கூடிய வாய்ப்பைப் பெற்றா ர்கள்.

பெருநாள் தினத்தில் வீண் கேளிக்கை, விளையாட்டுக்களை தவிர்த்து சகோதர மதத்தவர்களுடன் புரிந்துணர்வு கருதிய ஒன்றுகூடல்களை நடத்தலாம். இதன் மூலம் இரு சாரார் மத்தியில் நிலவும் தப்பபிப்பிராயங்கள் நீங்கி பிரதேச மற்றும் தேசிய அமைதிக்கு வழியேற்படும்.

பெருநாள் தினத்தன்று சகல முஸ்லிம்களும் சந்தோசமாக உண்டு மகிழ வேண்டும், எவரும் பசியுடன் இருக்கக் கூடாது என்ற சமுதாய நோக்கு முதலாவதாகவும், பித்ராவை வழங்கும் ஒவ்வொருவரும் ரமழான் மாதத்தில் விட்ட பிழைகளுக்குப் பரிகாரமாகவும் ஸகாதுல் பித்ர் இருப்பதனால் நோன்பாளிகள் பரிசுத்தவான்களாக மாறுவதனால் தனியார்கள் நன்மை பெறுவது இரண்டாவது நோக்கமாகவும் திகழ்கின்றது.


பெருநாள் தினத்தில் நாங்கள் எல்லோரும் அதிகாலையில் குளித்து, புத்தாடைகள் அணிந்து, நறுமணம் பூசி, அறுசுவை உணவுகளை உண்டு மகிழ்கின்றோம் அல்லவா? இதேபோன்று அன்றைய தினத்தில் நாம் பின்பற்றி நடக்க வேண்டிய நபி வழியில் வந்த செயற்பாடுகளும் உண்டு. ஒரு ஊரில் அல்லது மஹல்லாவில் வாழும் முஸ்லிம்கள் தனித்தனியாக அல்லது குழுக்களாக பிரியாமல் [illegible] ஒன்று சேர்ந்து ஒரு திறந்த வெளியில் அல்லது மைதானத்தில், இது முடியாத போது ஒரு பள்ளிவாசலில் பெருநாள் தொழுகையை நடத்த வேண்டும்.

பெருநாள்தொழுகை முடிந்ததும் தான் சந்திக்கும் சகோதரர்களுக்கு "தகப்பலல்லாஹு மின்னிவமின்க" உங்களுடையதும் என்னுடையதும் நற்செயல்களையும் வாழ்த்துக்களையும் அல்லாஹ் அங்கீகரிப்பானாக! என்று கூறி வாழ்த்து தெரிவிப்பது சுன்னத்தாகும்.

மேலும் இலங்கையில் வாழும் சிறுபான்மை முஸ்லிம்களாகிய நாம் பெரும்பான்மையினருடனும் ஏனைய சிறுபான்மை சமூகங்களுடனும் பிரச்சினைகளிலிருந்து நீங்கி சமாதானமும் சகவாழ்வும் இனங்களுக்கிடையே சகிப்புத் தன்மையும் புரிந்துணர்வும் ஏற்படவும் அல்லாஹ் அருள் புரிவானாக. இலங்கையில் வாழும் முஸ்லிம்களாகிய நாம் ஏனைய சமூகங்களுடன் *பிரச்சினையின்றி வாழவும் மஸ்ஜிதுல் அக்ஸா முஸ்லிம்கள் வசம் வரவும் ரோஹிங்கியா முஸ்லிம்களுக்கு பிரஜாவுரிமை கிடைக்கவும் இந்நன்னாளில் அல்லாஹ்விடம் பிரார்த்திப்போம். ஆமீன்!!

**அல்ஹாஜ் எம்.எப்.எம். [illegible]**
**யாழ்ப்பாணம்**

# ஈத் பெருநாள் வாழ்த்து



நோன்புப் பெருநாளை கொண்டாடும் அனைத்துலக முஸ்லிம்களுக்கும் ஈத்முபாரக் இனிய பெருநாள் வாழ்த்தை தெரிவிப்பதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

இதே போன்று நீங்களும் முடிந்த வரை உங்கள் உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் பெருநாள் வாழ்த்துக்களை பரிமாறி இரத்த பந்துக்கள் வீடுகளுக்கு விஜயம் செய்து பயனுள்ள பல செயல்களை செய்து இந்த நல்ல நாளை எதிர்கொள்ளுங்கள். உங்கள் பெற்றோருடன் சிலமணி நேரங்களை கழித்து அவர்கள் உள்ளங்களை மகிழ்வடையச் செய்து அவர்கள் துஆ பரக்கத்தை பெற்றுக் கொள்ளுங்கள்.

அத்தோடு மாற்று மத நண்பர்களையும் அன்புடன் அளவலாவி உண்டு மகிழ அவர்களுக்கும் விருந்து படையுங்கள். மேலும் நீங்கள் தொழும் பெருநாள் தொழுகையிலும் பர்ளு தொழுகையிலும் உலக முஸ்லிம்களுக்காகவும் சர்வதேச அமைதிக்காகவும் துஆச் செய்து தேவையற்ற விவாதங்களை தவிர்த்து சாந்தி சமாதானத்துடன் வாழும் வழியினை ஏவுங்கள்.

எமது உடலிலும் உள்ளத்திலும் உள்ள குறைகளை நீக்கி முழுமையான முஃமின்களாக வாழ்வதற்கான உந்துசக்தியை பெற்றுக் கொள்ள அல்லாஹ் இந்த சந்தர்ப்பத்தை தந்தது பெரும் பாக்கியம்.

அதை செயற்படுத்த நாம் இந்த புனித மாதத்தை அடைந் தது அதைவிட பெரும்பாக் கியம். அதனால் ரமழானின் சுவையை உணர்ந்துள்ள நாம் எம்நுகர்வை நகர் வாக்கி நன்மைகளை பன் மடங்காக்கும். எதிர்வரும் நாட்களில் எல்லாப்புகழும் இறைவனுக்கே அல்ஹம் துலில்லாஹ்! -ஈத்முபாரக்-

**அல்ஹாஜ்**
**மௌலவி**
**ஏ.எம்.ஏ.அஸீஸ்**
**(ஹாஸிமி)**
**யாழ்/கிளி.மாவட்ட**
**உலமாசபை தலைவர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு நீதிமன்றுக்கு சமுகமளிக்குமாறு வர்த்தக உரிமையாளர்களுக்கு அழைப்பாணை

(மல்லாவி)

**ஏ-9வீதி மாங்குளம் நகரப்பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்கள், உணவகங்கள் ஆகியவற்றில் 21 வயதிற்குட்பட்டவர்களுக்கு புகைத்தல் பொருட்கள் விற்பனை செய்த நான்கு வர்த்தக நிலையங்களைச் சேர்ந்த உரிமையா ளர்களுக்கு முல்லைத்தீவு நீதிமன்றிற்கு சமுகம் தருமாறு அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளது.**

இது தொடர்பில் தெரியவருவதாவது,

ஏ-9 வீதியிலுள்ள மாங்குளம் நகரப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்கள், உணவ கங்கள் ஆகியவற்றின் மீது நேற்று முன்தி னம் வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நுகர்வோர் பாதுகாப்பு அதி கார சபையினர் அதிகாரிகளினால் திடீர் பரிசோதனையொன்று நடத்தப்பட்டது.

இதன்போது 21 வயதிற்குட்பட்டவர்களு க்கு புகைத்தல் பொருட்கள் விற்பனை செய்த மூன்று வர்த்தக நிலைய உரிமையாளர்களும் ஒரு உணவகத்தின் உரிமையாளரும் சிக்கிக்கொண்டனர்.

இவர்கள் தொடர்பான குற்றத்தைப் பதிவு செய்த அதிகாரிகள் எதிர்வரும் 22 ஆம் திகதி புதன் கிழமை காலை முல்லைத்தீவு நீதிமன்றிற்கு சமுகம் தருமாறு அழைப்பாணை வழங்கியுள்ளனர். (2-15)

## பேருந்து சில்லில் சிக்குண்டு குடும்பஸ்தர் ஸ்தலத்தில் மரணம்

(மல்லாவி)

மன்னார் தனியார் பேருந்து நிலையத்திலிருந்து புறப்பட்ட தனியார் பேருந்து ஒன்றில் பின்புறமாகவுள்ள மிதி பலகையில் பயணத்தை மேற்கொண்ட பயணியொருவர் தவறி விழுந்தபோது பேருந்தின் பின்பக்கச் சில்லு தலைமீது ஏறியதையடுத்து குடும்பஸ்தர் மரணமடைந்துள்ளார்.

இச்சம்பவம் கடந்த 15 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் மேற்படி பேருந்தில் பயணத்தை மேற்கொள்ள முற்பட்ட மன்னார் நகர சபையின் சுத்திகரிப்பு பணியாளராக கடமையாற்றும் மன்னார் சாவற்காட்டு கிராமத்தைச் சேர்ந்த எஸ்.பஞ்சநாதன் (வயது-49) எனும் குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

சம்பவ இடத்திற்கு விரைந்த மன்னார் பொலிஸார் விபத்தை ஏற்படுத்திய பேருந்தின் சாரதியைக் கைது செய்ததுடன் சடலத்தை மீட்டு மன்னார் பொது வைத்திய சாலையில் ஒப்படைத்து மரண விசாரணைகளை மேற் கொண்டனர். (2-15)




## சோமசுந்தரப் புலவர் திருவுருவச்சிலைக்கு முன்பாக ஆடிப்பிறப்புக் கொண்டாட்டம்




(குருமன்காடு)

வவுனியா, தர்மலிங்கம் வீதியில் உள்ள நவாலியூர் சோமசுந்தரப் புலவர் திருவுருவச் சிலை முன்னால் ஆடிப்பிறப்பு கொண்டாட்ட நிகழ்வு நேற்றுக்காலை இடம்பெற்றது.

வவுனியா வரியிறுப்பாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந் நிகழ்வில் ஆடிப்பிறப்பு நிகழ்வு தொடர்பாகவும், நவாலி யூர் சோமசுந்தரப் புலவர் பாடிய **ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே** என்ற பாடலை நினைவுபடுத்திய கருத்துரைகள் இடம்பெற்றது.

அத்துடன் ஆடிக் கூழ் காய்ச்சப்பட்டு நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு பரிமாறப்பட்டது.

இந் நிகழ்வில் வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா, கலாசார உத்தியோகத்தர் நித்தியானந்தம், வவுனியா நகரசபை செயலாளர் க.சத்தியசீலன், கூட்டமைப்பின் முன்னாள் எம்.பியும் வேட்பாளருமான சிவசக்தி ஆனந்தன், வடமாகாண சபை உறுப்பினரும் கூட்டமைப்பின் வேட்பாளருமான சிவமோகன், கூட்டமைப்பு வேட்பாளர்களான செல்லத்துரை, றோய் ஜெயக்குமார், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் வேட்பாளர் எஸ்.என்.ஜி.நாதன், நகர கிராம அலுவலர் ஜெகசோதிநாதன், வரியிறுப்பாளர் சங்க தலைவர் செ.சந்திரகுமார் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

## சிறையில் இருந்து தப்பியோடிய கைதி பொலிஸாரிடம் மாட்டினார்

(குருமன்காடு)

அநுராதபுர சிறையிலிருந்து கடந்த 25ஆம் திகதி தப்பியோடிய கைதி வவுனியா பொலிஸாரினால் வவுனியாவில் கைது செய்யப்பட்டார்.

இது குறித்து தெரியவருவதாவது,

பல திருட்டு குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டு அநுராதபுரம் சிறைச்சாலையில் தண்டனை அனுபவித்த நிலையில் வவுனியா கற்குழியைச் சேர்ந்த ஜெயராசா தர்சன் என்பவர் தப்பிச் சென்றுள்ளார்.

இந்நிலையில் குற்றவாளியின் வீட்டிலிருந்து நேற்று அதிகாலை வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் நேற்றையதினமே நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டதாக வவுனியா பொலிஸார் தெரிவிக்கின்றனர். (2-250)

## கணித உபகரண பயன்பாடு குறித்த வலுவூட்டும் வதிவிட செயலமர்வு

(மல்லாவி)

மத்திய கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் மத்திய மற்றும் மாகாண அமைச்சுக்களின் கீழுள்ள பாடசாலைகளில் தரம்-6 தொடக்கம் தரம்11 வரையில் கணித பாடத்தை கற்பிக்கின்ற ஆசிரியர்களில் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கான கணித உபகரண பயன்பாடு தொடர்பாக வலுவூட்டும் வதிவிடச்செயலமர்வு எதிர்வரும் 23,24, 25,26ஆகிய நான்கு தினங்கள் குருதென்னிய கல்வி அபிவிருத்தி நிலையத்தில் நடைபெறுமென மத்திய கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர்(கல்வி பண்பு விருத்தி எச்.யு.பிரேமதிலக்க அறிவித்துள்ளார். இது தொடர்பில் தெரியவருவதாவது,

பாடசாலைகளில் தொழில்நுட்ப ஆய்வு கூடங்கள் துரிதகதியில் அமைக்கப்பட்டு வருகின்றது. அத்தொழில்நுட்ப ஆய்வு கூடத்தில் கணித ஆய்வு கூடம் பிரதான இடத்தை வகிக்கின்றது. கணித பாடத்தின் அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கு கணித ஆய்வு கூடம் மற்றும் கணித உபகரணங்கள் தொடர்பாக கணித ஆசிரியர்களிடத்தில் ஆழமான அறிவு அவசியமாகின்றது. ஆகையால் கணித உபகரணப்பயன்பாடு தொடர்பாக கணித ஆசிரியர்களை வலுவூட்டும் செயலமர்வு மேற்படி தினங்களில் ஒருநாள் கணித முகாம் உள்ளடங்குமாறு நான்கு நாட்கள் வதிவிடசெயலமர்வாக நடைபெறவுள்ளது

கற்றல் நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்காக செயலமர்விற்கு வருகை தருகின்ற ஆசிரியர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உபகரணங்களுடன் வருகை தரவேண்டும்.

மேலும் தங்குமிடவசதி மற்றும் செயலமர்வு தொடர்பாக மேலதிக விடயங்களை அறிந்துகொள்வதற்கு உதவிக்கல்விப்பணிப்பாளர் (கணிதம்), திருமதி.தர்சி வைத்தியதிலக்க 0719154349 எனும் தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பினை ஏற்படுத்தி பெற்றுக்கொள்ள முடியுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

## சிறுவர் மனவிருத்தி பாடசாலை அமைப்பதற்கு அடிக்கல் நாட்டல்



சிறுவர் மனவிருத்திப் பாடசாலை ஒன்று கிளிநொச்சி பண்ணை வீதியில் புகையிரத நிலையத்துக்கு அருகாமையில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சிவபூமி அறக்கட்டளை தலைவர் கலாநிதி ஆறுதிருமுருகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வன்னிப்பகுதியில் மனவளர்ச்சி குன்றிய மாணவர்கள் அதிகம் காணப்படுகின்றனர். அவர்களுக்குரிய பாடசாலை ஒன்றை அப்பகுதியில் ஆரம்பிக்க வேண்டும் என்ற மக்களின் வேண்டுகோளிற் கிண ங்க இப்பாடசாலை ஆரம்பிக்கப்படவுள்ளது. 10 மில்லியன் ரூபாய் செலவில் நவீனமுறையில் 2மாடிகளை கொண்ட பாடசாலையாக அமைக்கப்படவுள்ளது.

இக்கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் விழா நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயிகளின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்த மானிய உதவித்தொகை

(கிளிநொச்சி)

விவசாயிகளின் நலன் கருதி அவர்க ளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகை யில் காகிள்ஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் பல கிராம ங்களை ஒன்றிணைத்து சங்கங் கள் அமை க்கப்பட்டுள்ளன.

பசன்புரூட், தக்காளி நீத்துப்பூசணி ஆகிய வற்றின் விதைகளும் வாழைக் குட் டிகள் என்பன ஒவ்வொன்றும் அரை ஏக் கருக்கு குறையாமல் பயிரிட வேண்டும். அதிலிருந்து கிடைக்கப்பெறும் உற்பத்திப் பொருட்களை கிளிநொச்சி அறிவியல் நகரில் இயங்கி வரு கின்ற காகிள்ஸ் நிறுவ னமானது நியாயமான விலையில் கொள் வனவு செய்யும் நடவடி க்கையில் ஈடுபட்டு வருகின்றது.



இதனடிப்படையில் இச் சங்கங்களின் அமைப்பில் இணைந்து மேற்படி பயிர்ச் செய் கையை மேற்கொள்ளும் விவசாயிக ளுக்கு குழாய் கிணறு அமைத்தல், அல் லது கிணறு அமைத்தல், நீர்ப்பம்பி மற்றும் அதனோடு தொடர்பான பொருட்களை கொள் வனவு செய்வதற்கு 75 ஆயிரம் ரூபா வரை யிலான மானிய உதவித் தொகை வழங்கப் பட்டுள்ளது.

இதேவேளை உதவித்தொகை வழங்கப் படாதுள்ள விவசாயிகளுக்கும் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இது தொடர்பான விளக்கங்களையும் விவசாயிகளுக்கிடையில் காணப்படும் குறை நிறைகளையும் கேட்டறியும் முகமாகவும் கடந்த 15 ஆம் திகதி பிற்பகல் 2 மணியள வில் கிருஷ்ணபுரம் பொது நோக்கு மண்டப த்தில் காகிள்ஸ் நிறுவன உயரதிகாரிகள் வருகை தந்து விவசாயிகளுக்கான கூட்ட த்தை நடத்தியிருந்தனர்.

அத்துடன் இந்நிறுவனத்தின் வங்கி யொன்று கிளிநொச்சி மாவட்டத்தில் ஆரம் பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வரு வதாகவும் அதனூடாக குறித்த சங்கங்க ளைச் சேர்ந்த அங்கத்தவர்கள் விவசாய உற்பத்தி தேவைக்குரிய கடனை இலகு வான முறையில், குறைந்த வட்டியுடன் பெற்றுக் கொ வதற்கு ஆவன செய்யப்ப டுமெனவும் அவர் கள் தெரிவித்தனர்.

பால் பண்ணையாளர்களின் பால் உற் பத்தி களை நியாயமான விலையில் பெற்றுக் கொள் வதற்கும் நல்லினப் பசுக்களைக் கொள்வ னவு செய்வதற்கும் ஒத்துழைப்பு வழங்குவ தாகவும் அவர்கள் தெரிவித்தனர். (2-254)

## கோட்ட மட்டம்

# அனர்த்த பாதுகாப்பு வினாவிடைப்போட்டி

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கோட்ட மட்டத்திலான அனர்த்த பாதுகாப்பு தொடர்பான வினா-விடை போட்டி இன்று சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை நடைபெறவுள்ளது என துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய துணுக்காய் கல்வி வலய கோட்டமட்ட பாடசாலை மாணவர்களுக்கு மு/ மல்லாவி மத்திய கல்லூரியிலும் மாந்தை கிழக்கு கல்விக்கோட்ட பாடசாலை மாணவ ர்களுக்கு மு/பாலிநகர் மகா வித்தியாலயத்தி லும் ஒட்டுசுட்டான் கல்வி கோட்ட பாடசாலை மாணவர்களுக்கு மு/மாங்குளம் மகா வித்தி யாலயம், மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம் ஆகியவற்றில் நடைபெறும்.

மேற்படி போட்டிக்கு பாடசாலை ரீதியாக தெரிவு செய்யப்பட்ட பிரிவுகளுக்குரிய மாண வர்களு டன் பொறுப்பாசிரியரையும் தவறாது அனு ப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளார். (2-15)

# யானை தாக்குதலுக்கு இலக்கான குடும்பஸ்தர் வைத்தியசாலையில்!

(முள்ளியவளை)

யானை தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் ஆபத் தான நிலையில் வவுனியா வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை வவுனியா நெடுங்கேணி பட்டிக்குடியிருப்பு கிராமத்தில் நடை பெற்றுள்ளது.

இதில் வைத்திலிங்கம் தர்மலிங்கம் (வயது 58) என்ற குடும்பஸ்தரே யானை தாக்குதலு க்கு இலக்கானவர் ஆவார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

நெடுங்கேணி பட்டிக்குடியிருப்பு கிராம த்தில் தனது வயலில் காவலிற்காக தங்கி நின்ற விவசாயியை நேற்று அதிகாலை யானை ஒன்று அவரது நெஞ்சுப் பகுதியிலும் காலிலும் தாக்கியது. இதனையடுத்து அயலில் தங்கி நின்ற விவசாயிகளால் அவர் மீட்கப்பட்டு நெடுங்கேணி வைத்தியசாலை யில் அனுமதிக் கப்பட்டார்.

பின்னர் அவர் மேலதிக சிகிச்சைக்காக உடனடியாக நோயாளர் காவு வண்டி மூலம் வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். (2-302)




# யாத்திரை தல திருவிழா

கிளாலி தூய சந்தியோகுமையோர் யாத் திரைத்தலத் திருவிழா நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நவநாட் கள் நடைபெற்று வருகின்றன.

இதற்கான ஆயத்த வழிபாடுகள் தின மும் 4.30 மணிக்கு திருச்செபமாலை யுடன் ஆரம்பமாகி நடைபெறும்.

எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கி ழமை பிற்பகல் 5 மணிக்கு நற்கருணைப் பெருவிழா இடம்பெறும்.

திருவிழா திருப்பலி எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை 6.15 மணிக்கு நடை பெறும். அதன்பின்னர் திருச்சொரூபப் பவனி நடைபெற்று ஆசீர்வாதம் இடம்பெறும் .(2)

# கால்களை இழந்த இளைஞர்களுக்கு தொழிலை மேற்கொள்வதற்கு உதவி

வன்னி இறுதி யுத்தத்தில் கால்களை இழந்த மூன்று இளைஞர்களுக்கு தமிழர் கலா சார வட்டம் கைல்புறோன் ஜேர்மனி யைச் சேர் ந்த அமைப்பு தொலைபேசி திருத்தும் கடை யொன்றை ஏற்படுத்திக் கொடுத்துள் ளது.

சுமார் மூன்று இலட்சத்து எழுபத்தை யாயிரம் ரூபா செலவில் இவர்களுக்கான தொழில்முயற்சியை மேற்கொள்வதற்கு ஏது வாக அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. இந் தத் தொழில் முயற்சி இதயங்கள் அமைப்பி னூடாக வலி. வடக்கு பிரதேசசபை துணைத்த வி சாளர் ச.சஜீவனினால் வழங்கப்பட்டுள்ளது.



கிளிநொச்சி தொழில் நுட்பக்கல்லூரியில் கைத் தொலைபேசியை திருத் தும் பயிற்சியை முடித்திருந்தும் அவர் களுக்கு கைகொடுக்க யாரும் முன் வரவில்லை. இந்நிலையில இவ் இளைஞர்களால உதவும இதயங்கள் அமைப்பிடம் விடுத்த வேண்டு கோளுக் கிணங்க தொழில் முய ற்சி ஒன்றை மேற்கொள் வதற்கு முயற்சிகள் எடுக் கப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (2-25)

# வரலாறு பாட கணிப்பீடு தொடர்பான செயலமர்வு

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம்-6 தொடக்கம் 11 வரை யிலான வகுப்புக்களில் வரலாறு பாடம் கற்பி க்கின்ற ஆசிரியர்களுக்கு வரலாறு பாட கணி ப்பீடு தொடர்பான செயலமர்வொ ன்று இன்று சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 5.30 மணி வரை துணுக்காய் கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடை பெறுமென துணுக்காய் வலயக்கல்விப் பணிப் பாளர் எல். மாலினி வெனிற்றன் அறிவித் துள்ளார்.

இது தொடர் பில் அவர் தெரிவிக்கையில், மேற்படி செயல மர்விற்கு ஆசிரியர்கள் வரு கைதரும் போது தரம்-6 தொடக்கம் தரம்-11 வரை யிலான வரலாறு பாடநூல்கள் தரம் 10,11 ஆசிரியர் அறிவுரை கையேடு, தரம்-6 தொடக் கம் தரம்-11 வரையிலான வரலாறு பாட கணிப் பீட்டுக் கருவி, [illegible] புள்ளி பதிவேடு [illegible] மாறு அவர் கேட்டுள்ளார். (2-15)

# 21 கிலோ மரை இறைச்சி பொலிஸாரிடம் சிக்கியது

முல்லைத்தீவு மாங்குளம் பொலிஸாரால் 21 கிலோ மரை இறைச்சி கைப்பற்றப்பட் டுள்ளது.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தக வலை அடுதது சோதனை மேற்கொண்ட போது குறித்த மரை இறைச்சியையும் சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்துள் ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

[illegible]மான், மரை, உடும்பு உள்ளிட்ட காட்டு விலங்குகளை வேட்டையாடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் சட்ட விரோதமாக குறித்த மரையினை வேட் டையாடி விற்பனை செய்ய முற்பட்ட போதே பொலிஸாரினால் பிடிக்கப்பட்டதாக தெரிவிக் கப்படுகின்றது.

கிளிநொச்சி, முல் லைத்தீவு, வவுனியா உள்ளிட்ட பகுதிக ளில் இவ்வாறு சட்டவிரோ தமாக காட்டு விலங்குகளை வேட்டையா டும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகி ன்றமை குறிப்பிடத்தக்கதாகும். (2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# தானம்

அக்பர் சபையில் அமர்ந்து ஆலோசனை நடத்திக் கொண்டிருக்கும் போது ஒரு விநோதமான எண்ணம் தோன்றியது.

உடனே அமர்ந்திருந்த அமைச்சர்களை நோக்கி, பொதுவாக ஒருவர் தானம் கொடுக்கின்றார் என்றால் அவரது கை உயர்ந்தும், வாங்குபவரின் கை தாழ்ந்தும் இருப்பது உண்மை!

ஆனால் தானம் தரும் சமயத்தில் கை தாழ்ந்தும் பெறுபவரின் கை உயர்ந்தும் இருப்பது எந்த சமயத்தில்? இதற்கு சரியான விளக்கம் கூறுங்கள் என்றார் அக்பர்.

சக்ரவர்த்தி கேட்ட கேள்விக்கு அமைச்சர்கள் எவ்வளவு யோசித்தும் விடை சரியாகக் கிடைக்கவில்லை.

ஆதலால் மன்னனின் கேள்விக்கு பதில் சொல்லாது மௌனமாக இருந்தனர்.

அச்சமயம் பீரபால் சபையில் வந்து அமர்ந்தார் மற்ற அமைச்சர்களிடம் கேட்ட அதே கேள்வியை பீரபாலிடம் அக்பர் கேட்டார்.

பீரபால் சிரித்துக் கொண்டே சக்ரவர்த்தி அவர்களே எல்லோரும் எளிதாகப் பதில் சொல்லி விடுவார்கள்.

இதற்கு விடையளிக்க வேண்டும் என்பதினால் விடையளிக்கிறேன். ஒருவர் மூக்குப் பொடி டப்பியைத் திறந்து மூக்குக்குப் பொடி போடும்போது மற்றொருவர் கொஞ்சம் மூக்குப் பொடி தாருங்கள் என்று கேட்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள்.

அச்சமயம் அவர அந்த டப்பியை அவர் முன நீட்டுவார்.

மூக்குப் பொடியை எடுப்பவர் கொடுப்பவரின் கையைவிட எடுப்பவரின் கை சற்று மேலே இருக்கும். ஆகையினால் மூக்குப் பொடி தானம் தரும் சமயம் கொடுப்பவரின் கை கீழேயும் வாங்குபவரின் கை மேலேயும் உயர்ந்திருக்கும் என்றார் பீரபால்.

இந்த சின்ன விடயம் கூட நமது அறிவுக்கு எட்டவில்லை என்று மற்ற அமைச்சர்கள் வருத்தப்பட்டனர். தன்னுடைய கேள்விக்கு சட்டென்று பதில் சொன்ன பீரபாலை அக்பர் மிகவும் பாராட்டினார்.



## நெல்சன் மண்டேலா



தென்னாப்ரிக்காவில் மட்டுமல்லாமல் உலக அளவில் அனைவராலும் விரும்பப்படும் ஒரு நபராக விளங்கியவர் நெல்சன் மண்டேலா.

நெல்சன் மண்டேலாவின் இயற பெயர் நெல்சன் ரோபிசலா மண்டேலா என்பது. 1918 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18 ஆம் திகதி பழங்குடி இனத் தலைவருக்கு மகனாகப் பிறந்த நெல் சன் மண்டேலா, இனவெறி ஆட்சியில் ஊறிக் கிடந்த தென்னா ப்ரிக்காவை மக்களாட்சியின் ஒளிமயமான பாதைக்குக் கொண்டு சென்ற மகத்தான தலைவர்.

குத்துச் சண்டையிலும், போர்க் கலையிலும் வல்லவராகத் திகழ்ந்த மண்டேலாவுக்கு அவரது ஆசிரியர் சூட்டிய பெயரே நெல்சன் என்பது. பழங்குடியினத்தில் பிறந்திருந்தாலும், படிப்பறிவைப் பெறுவதில் பெரும் நாட்டம் கொண்டிருந்தார் மண்டேலா. லண்டன், தென்னாப்ரிக்க பல்கலைகளில் பட்டப் படிப்பை முடித்து தென்னாப்ரிக்காவில் சட்டக் கல்வியையும் பெற்றார் மண்டேலா.

தென்னாப்ரிக்காவில் சிறுபான்மையினராக இருந்த வெள்ளையர்களிடமே ஆட்சி அதிகாரம் இருந்தது. அவர்களது அடக்குமுறை கருப்பின மக்கள் மீது திணிக்கப்பட்டது.

இதனால் வெகுண்டு எழுந்து, தென்னாப்பிரிக்காவில் நிறவெறிக்கு எதிராகப் போராடிய தலைவர்களில் முக்கியமானவராக விளங்கினார் மண்டேலா. அவர் முதலில் காந்திய முறையில் அகிம்சை வழியில் தான் தனது போராட்டத்தைத் துவக்கினார். ஆனால், பிறகு அவரே ஆப்ரிக்க தேசிய காங்கிரஸின் ராணுவப் பிரிவுக்கும் தலைமை தாங்கி போராட்டத்தை வழிநடத்தினார். இதன் மூலம், நிறவெறி அரசுக்கு எதிராக மிகக் கடுமையான கெரில்லாப் போர் முறைத் தாக்குதலையும் நடத்தினார்.

இதனால், 1962 ஆம் ஆண்டு அவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். நிறவெறி அரசு, 27 ஆண்டு காலம் மிகச் சிறிய அறையில் அவரை சிறை வைத்து தனது நிறவெறியை வெளிக் காட்டியது. ராபன் தீவுப் பகுதியில் அமைந்த திறந்த வெளி சிறிய சிறை அறையில் தனது பெரும்பாலான வாழ்நாளைக் கழித்த மண்டேலா, சிறைக் காலத்தில் அனுபவித்த கொடுமைகள் சொல்லில் அடங்காதவை. எனினும், அவரது போராட்ட உணர்வு மட்டும் சோர்ந்து போகவில்லை.

உலக வரலாற்றிலேயே மண்டேலாவைப் போல இத்தனை காலம் சிறையில் கழித்த தலைவர் யாரும் இல்லை எனலாம்.

மண்டேலாவை விடுதலை செய்ய உலகம் முழுவதிலும் இருந்து ஏராளமான கோரிக்கைகள் வலுத்தன. அவரது மனைவி சார்பில் தென்னாப்ரிக்காவில் போராட்டம் வலுத்தது. இதையடுத்து, 1990 ஆம் ஆண்டு பிப்ரவரி 11 ஆம் திகதி மண்டேலா விடுதலை செய்யப்பட்டார். அப்போது அவருக்கு வயது 71.

1990 ஆம் ஆண்டு நெல்சன் மண்டேலா விடுதலையானதை உலகமே வரவேற்றது. தென்னாப்பிரிக்காவில் குடியரசு மலரவும் மண்டேலா காரணமானார். அதோடு, தென்னாப்பிரிக்காவின் முதல் கறுப்பின அதிபராகவும் 1994 ஆம் ஆண்டு பொறுப்பேற்றுக் கொண்டார் நெல்சன் மண்டேலா. அவரது பதவிக் காலம் முடிந்ததும், 2 ஆவது முறையாக அதிபர் பதவிக்கு போட்டியிட மறுத்துவிட்டார். 2008 ஆம் ஆண்டு பொது வாழ்க்கையிலிருந்து விலகுவதாக அறிவித்தார் மண்டேலா.

அப்போதும் ஓயாமல், பல்வேறு நலப் பணிகளுக்காக மக்கள சேவையைத் தொடர்ந்து செய்து கொண்டிருந்தார் மண்டேலா. பிறகு உடல்நலம் பாதிக்கப்பட்ட நெல்சன் மண்டேலா தனது 95 ஆவது வயதில் 2013 ஆம் ஆண்டு டிசம்பர் 5 ஆம் திகதி உலக மக்களை எல்லாம் சோகத்தில் ஆழ்த்திவிட்டு மரணம் அடைந்தார்.

## 07.2015 18 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 64 - உரோமில் பெரும் தீ பரவி நகரின் வர்த்தக மையத்தில் பெரும் சேதம் ஏற்பட்டது. அப்போது நீரோ மன்னன் பிடில் வாசித்துக் கொண்டிருந்தான் என்று சொல்லப்படுகிறது.
- 1656 - போலந்து, மற்றும் லித்துவேனியப் படைகள் வார்சாவில் சுவீடனின் படைகளுடன் போரை ஆரம்பித்தன. சுவீடிஷ் படைகள் இப்போரில் வெற்றி பெற்றனர்.
- 1872 - ஐக்கிய இராச்சியத்திலும் அயர்லாந்திலும் இரகசிய வாக்கெடுப்பு முறை நடைமுறைப் படுத்தப்பட்டது.
- 1916 - யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பெரும் சூறாவளியில் பலர் கொல்லப்பட்டனர். வீடுகள், மற்றும் பல தொலைத்தொடர்பு சாதனங்கள் சேதமடைந்தன.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: போரில் ஏற்பட்ட பல தோல்விகளை அடுத்து ஜப்பானியப் பிரதமர் ஹிடெக்கி டோஜோ பதவியைத் துறந்தார்.
- 1965 - சோவியத்தின் சோண்ட் 3 விண்கலம் ஏவப்பட்டது.
- 1966 - நாசாவின் ஜெமினி 10 விண்கலம் ஏவப்பட்டது.
- 1977 - வியட்நாம் ஐக்கிய நாடுகள் அவையில் இணைந்தது.
- 1995 - கரிபியன் தீவான மொன்செராட்டில் சௌபியரே மலை வெடித்துச் சிதறியதன் காரணமாக- மொன்செராட்டின் தலைநகரம் அழிக்கப்பட்டதுடன் மண்டலத்தின் மக்கட்தொகையின் மூன்றில் இரண்டு பகுதியினர் தீவை விட்டு வெளியேறினர்.
- 1997 - மும்பாயில் 10 சிறுவர்கள் காவற்துறையினரால் கொல்லப்பட்ட நிகழ்வுக்குப் பின்னர் சுமார் 8000 தலித் மக்கள் கலகத்தில் ஈடுபட்டனர்.

### பிறப்புகள்

- 1909 - அந்திரே குரோமிக்கோ, சோவியத் ஜனாதிபதி (இ. 1989)
- **1918 - நெல்சன் மண்டேலா, தென்னாப்பிரிக்காவின் கறுப்பினத் தலைவர், நோபல் பரிசு பெற்றவர். (இ. 2013)**
- 1935 - ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள், இந்து ஆன்மிகத் தலைவர்.
- 1950 - சேர் றிச்சர்ட் பிரான்சன், உலகின் பெரும் பணக்காரர்களுள் ஒருவர்

### இறப்புகள்

- 1817 - ஜேன் ஆஸ்டின், ஆங்கில நாவலாசிரியை (பி. 1775)
- 1892 - தோமஸ் குக், ஆங்கிலேய பிரயாண முகவர் (பி. 1808)
- 1968 - கோர்னெல் ஹேமன்ஸ், நோபல் பரிசு பெற்றவர்.
- 2013 - வாலி, கவிஞர் (பி. 1931)

### சிறப்பு நாள்

- **நெல்சன் மண்டேலா தினம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தின் "கதை சொல்லப் போகிறோம்" வீதி நாடகம்

## ஓர் விமர்சனப் பார்வை







ஒரு வரலாற்றின் மகத்துவத்தை மட்டுமன்றி செயற்பாட்டின் மகத்துவத்தையும் பாமர மக்களிற்கும் பிரதேசத்திற்கும் இலகுவாகப் புரிய வைப்பதிலும் விளங்க வைப பதிலும் தெளிவுபடுத்துவதிலும் முதன்மை வாய்ந்ததாக வீதி நாடகங்கள் அமையும் என்பது சொல்லித தெரிய வேண்டியதொன்றல்ல.

ஆயின் இன்றைய நிலையில் தொலைக்காட்சி, இன்ரநெற் போன்ற நவீனத்துவத்தின் பங்களிப்புக்கள் இவற்றின் செல்வாக்கினை மழுங்கடிக்கச் செய்துள்ளன.

சம காலத்து இளைஞர்களிற் பலர் இக்கூத்துக்களின் வலிமையை அறிந்திராமையும் கூட இதில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

இந்நிலையில் இக்கூத்தின் வல்லமை எல்லோர் மனதையும் கவர்ந்து எதற்காகச் செய்தோமோ அதற்கான நோக்கத்தை நிறைவு செய்ய ஆவன செய்யும் என்பது நிறுத்திட்டமான உண்மை என்பது அனுபவம் தந்த பட்டறிவாகும்.

இந்நிலையில் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் வரலாற்றையும் அதன் பெருமையையும் கட்டியம் கூறுவதாகவும், தொலைக்காட்சி நாடகம், மதுபாவனை, ஒலிபெருக்கிப் பாவனை, கல்விச் செயற்பாட்டில் பெற்றோரின் முட்டுக்கட்டை, ஆர்வமின்மை, சிறுவர் துஸ்பிரயோகம் என்பவற்றை இசக்குப் பிசக்கன்றி வெளிக்கொணர்ந்து சமூக மட்டத்தில் விழிப்புணர்வை மேம்படுத்தும் வகையில் பாடசாலையின் ஏந்து பிரதேசங்களில் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் கூட்டாக இணைந்து "கதை சொல்லப் போகிறோம்" என்ற வீதி நாடகத்தை நடாத்தி வருகின்றமை வரவேற்கத்தக்கதாகவும், காலத்தின் தேவையாகவும், யதார்த்தத்துக்குப் பொருத்தமான பொறிமுறையாகவும் அமைந்துள்ளமை சுட்டிக் காட்டத்தக்கதாகும்.

நடைமுறையில் சந்திக்கும் இடர்பாடுகளை இசக்குப் பிசக்கின்றி காத்திரமாக வெளிக்கொணரும் முறை பல்வேறு தரப்பினரையும் கவர்ந்துள்ளது.

ஒரு பிள்ளையின் தந்தையாகிய பின் தாயாக பாத்திரப் பொறுப்பை சரிவரச் செய்யும் வித்தியாலய ஆசிரியரின் துல்லியமான நடிப்பு பார்வையாளரின் அரவணைப்பை வெளிக்கொணரத் தவறவில்லை.

மாணவ பாத்திரத்தை தாங்கி நடித்த மாணவர்களும் கல்வியின் பெருமையையும் சிறப்பையும் உணர்ந்து தம்மைச் சுதாகரித்தவாறு பெற்றோர்களே எங்களைப் படிப்பியுங்கள், எங்களுக்கான தேவையை உதாசீனம் செய்யாதீர்கள் என்று கூட்டமாக பெற்றோர்களின் காலில் விழுந்து வணங்கி தமது கோரிக்கைகளை முன்வைத்தமை பார்த்தவரின் கல்நெஞ்சையும் கரைய வைத்தது.

பூப்புனித விழாவுக்கும், பிறந்த நாள் விழாவுக்கும் ஒலிபெருக்கியைப் பாவியுங்கள். அதேவேளை அடக்கமாகப் பாவியுங்கள் மாறாக "ஓ" வென்ற சத்தத்துடன் பிரதேசத்தையே அலறவிடாதீர்கள்.


விழாவிற்கு முன் மூன்று நாட்கள் பின் மூன்று நாட்கள் இதை அலறவிட்டு எங்கள் படிப்பை சிதற வைக்காதீர்கள். எங்களைக் கொச்சைப்படுத்தாதீர்கள்.

கோவில்களில் காலையும் மாலையும் கூட கடவுளை வணங்குவதை விடுத்து காலையும் மாலையும் ஏட்டிக்குப் போட்டியாக ஒலிபெருக்கி கதறுவது ஏன்? ஒன்றுமே புரியவில்லை என்ற ஆதங்கம் விஞ்சி நின்றது.

இரவு வந்தால் அம்மாவுக்கு நாடகவெறி, அப்பாவுக்கு மதுவெறி, அக்காவிற்கு பேஸ்புக் வெறி, அண்ணாவிற்கு கைத்தொலைபேசி வெறி, தங்கைக்கு நித்திரை வெறி. என்ன செய்ய எங்களுக்கோ படிப்பு வெறி. படிப்பால் உயர்வோம். வாழ்வில் சிறப்போம்.

இவ்வீதி நாடகங்களை நடாத்துவதற்கு அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுக்கு உந்து சக்தியாகவும், பக்கபலமாகவும் கோப்பாய்க் கோட்ட கல்வி அலுவலகர், யாழ் வலயக்கல்விப் பணிப்பாளர். இப்பகுதி கிராம சேவையாளர்கள், சனசமூக நிலைய நிர்வாகிகள், ஆலய நிர்வாக சபையினர் அனைவரும் தமது அனுசரணையையும் ஆதரவையும் வழங்குகின்றமையும் இப்பகுதி வாழ் மக்களில் பெரும்பாலானோர் வயது வேறுபாடின்றி, இருபாலாரும் இந்நிகழ்வைப் பார்வையிடுவது சிலாகிக்கத்தக்கதுடன் இவ்வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் பலரது பாராட்டையும் பெறுவது மகிழ்ச்சிக்குரியது.

**மு.வி.வரன்**



# கருவாச்சி காவியம்

**வைரமுத்து–191**

...அய்... அய்... அய்... மொனங்கிக்கிட்டே இருந்தான்; தல தொங்கிப் போச்சு; அனாதிக் காட்ல உசுரும் போயிருச்சு. பாவிப்பய அய்யோன்னு சொல்ல வந்தானோ? அய்யக்கான்னு சொல்ல வந்தானோ? அது அவனோடய அடங்கிப் போச்சு.

சேதி தெரிஞ்சதும் மகனே கொண்ணவாயான்னு கதறுனா பாருங்க கருவாச்சி... ஆத்தா செத்தன்னைக்கிக்கூட அவ அந்தக் கத்துக் கத்தல.

என்னியத் தூக்கிப் போடத்தானடா ஒன்னிய நான் வளத்து வச்சேன்; ஒன்னியத் தூக்கிப் போட விதிவச்சிருச்சே என்னிய.

கொண்ணவாயனப் பொதச்சுட்டு ஊரே பட்டினி கெடந்துச்சு ஒருநாள் முழுக்க. பாதி வீட்ல ஒல வைக்கல; பாதி வீட்ல ஒல வைக்க ஒண்ணுமே இல்ல.

அஞ்சாறு நாளா அழுதழுது கண்ணு வீங்கிப் போன கருவாச்சி லேசா இடுப்பப் புடிச்ச எந்திரிச்சா.

கொண்ணவாயன் கடைசியாத் தோண்டிக் குடுத்த இருங்கச் சோளத்த ஒரல்ல போட்டுக் குத்துனா.

அவ குத்தக் குத்த நெஞ்சில இருந்த பாரமெல்லாம் ஒலக்கையில எறங்குது; ஒரல்ல விழுகுது ஒரு சொட்டுத் கண்ணீரு. சோள அரிசியையும் பயறையும் ஒரு மொடாவுல போட்டுக் காய்ச்சினா.

மொடாவத் தூக்கித் தெருவுல வச்சுக்கிட்டு வந்தசனம் போன சனத்தையெல்லாம் கூப்பிட்டுக் கூப்பிட்டுச் சொல்றா: குடிங்க மக்கா குடிங்க... எம்பிள்ள கொண்ணவாயன் குடுத்த கஞ்சி.

அழுத கண்ணு அடங்காம, மோந்து மோந்து ஆளுக்கொரு அகப்பையா ஊத்திக்கிட்டேயிருக்கா கருவாச்சி. வகுறு வெறும் வகுறாத்தான் கெடக்கு. ஆனா அவளுக்கு மட்டும் பசிக்கல. நெஞ்ச அடைச்ச துக்கம் இறங்கி இறங்கி வயித்தையும் நெப்பிருச்சு பாவம்.

அப்பத்தான்...

வெயில்ல வேர்த்து விறுவிறுத்து முதுகுல ஒரு கோணிப்பையும் சொமந்து ஒரு சடைமுடிச் சாமியாரு விசாரிச்சுக்கிட்டே சொக்கத்தேவன் பட்டிக்குள்ள வாராரு;

இந்த ஊரில் கருவாச்சி என்பாளின் குடில் எது காட்டுங்கள்.

கருவாச்சியத் தேடி வந்த சாமியாரு ஏதோ பஞ்சத்துக்கு ஆண்டியான பரதேசி இல்ல; சம்சாரத்தக் கட்டி மேய்க்க முடியாம சந்நியாசி ஆனவரும் இல்ல. பழுத்த படிப்பாளி; சகல மொழிகள்லயும் சடுகுடுபாடி வெளையாடுவாரு; வெளிவேசங்காட்டாத அறிவாளி. சுருளிமலையிலருந்து இமய மல வரைக்கும் நடந்தே கடந்த ஆளு.

பொறப்புன்னா என்னா? பொழப்புன்னா என்னா? நான்னா என்னா? பூமி சுத்துற பூர்வீகம் என்னா? பிரிஞ்சு போற ஆத்மா இன்னொரு சரீரம் சேருமா?

உண்மையான ஞானகுரு யாரு? எல்லாக் கேள்விக்கும் பதில இந்தான்னு எட்டிப்புடிச்சிட்டாரு.

ஒரே ஒரு கேள்விக்கான பதில் மட்டுந்தான் அம்பத்தாறு தேசம் அலஞ்சும் அகப்படல.

ஞானம்ங்றது அறிவா? அனுபவமா?


(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டணியின் வேட்புமனுவை பசில் ராஜபக்ஷ தயாரித்தார்

## மேர்வின் சில்வா குற்றச்சாட்டு



ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியின் வேட்புமனு முற்றிலுமாக பசில் ராஜபக்ஷவுக்கு அவசியமான வகையில் தயாரிக்கப்பட்டதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். தான் தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்புமனு கிடைக்காமையினால் மிகவும் மன வேதனையடைந்துள்ளதாகவும், அதற்கு பசில், கோத்தபாய மற்றும் மகிந்த ராஜபக்ஷவே காரணம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இரவு நேரங்களில் சுசில் வீட்டிற்கு பசில் சென்று இதனையே செய்தார்.

சரண குணவர்தன, துமிந்த சில்வா மற்றும் சஜின் வாஸ் குணவர்தனவுக்கு வேட்புமனு வழங்கினால் தனக்கும் வழங்க நேரிடும் என்ற காரணத்தினாலே அவர்களுக்கும் வழங்கவில்லை.

தான் ஒருபோதும் இலஞ்ச ஊழல்களில் ஈடுபடவில்லை. எனக்கு வேட்புமனு வழங்கியிருக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த நாட்டின் அடுத்த பிரதமர் யார் என மேர்வின் சில்வாவிடம் வினவிய போது,

இந்த அரசியல் பூமியில் பொருத்தமான ஒருவர் என்றால் அது ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே என அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# விசேட தேவையுடையோரை நாம் பாதுகாக்க வேண்டும்

## யாழ்.இந்தியத் தூதுவர் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

**விசேட தேவையுடைய குழந்தைகளை எமக்கு சமமாக வைத்து அவர்களை பாதுகாக்க வேண்டியது நம் ஒவ்வொருவருடைய கடமையாகும் என யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் ஆ.நடராஜன் தெரிவித்துள்ளார்.**

அமெரிக்காவில் எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறவுள்ள விசேட தேவையுடையவர்களுக்கான ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொள்ளவுள்ள சிவபூமி பாடசாலை மாணவர்களான அ.மயூரன், ஜெ.மனோஜன் ஆகியோரை ஆசீர்வதித்து வழியனுப்பும் வைபவம் நேற்று முன்தினம் சிவபூமி பாடசாலையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வட மாகாணத்திலிருந்து அமெரிக்க நாட்டிற்கு ஒலிம்பிக் போட்டிக்கு எமது மாணவர்கள் செல்வது மிகப் பெரிய சாதனையாகும்.

ஆண்டாண்டு காலமாக யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இடத்திலிருந்து இந்த மாணவர்கள் இன்னொரு நாட்டிற்கு போட்டியிடுவதற்காக செல்வது அனைவராலும் வரவேற்கத்தக்க விடயம் ஆகும்.

விசேட தேவையுடையவர்களை சிலர் நேரடியாகவே அவர்களை பாதிக்கின்ற வார்த்தைகளை சொல்லி அழைப்பார்கள், அவ்வாறான வார்த்தைகளை ஒழித்துவிட்டு அவர்களை எமது செல்லக்குழந்தைகள் போல் நாம் பார்க்கவேண்டும்.

விசேட தேவையுடைய குழந்தைகளுக்கு கல்வியை வழங்குவதும் கல்விக்கான உதவிகளை செய்வ்தும் எமது கடமையாகும். இவ்வாறான உதவிகளை செய்பவர்கள் மனிதர் வடிவில் வாழும் தெய்வங்கள் ஆவர்.

அத்துடன் எமது இந்தியத் துணைத்தூதரகத்தின் ஊடாக சிவபூமி பாடசாலை மாணவர்களுக்கு 14 வகையான இசை வாத்தியங்களை வழங்குவதற்காக திட்டமிட்டுள்ளேன். அவற்றை வழங்குவதில் மிகவும் மகிழ்ச்சியடைவதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# பெண்ணின் சடலத்தை பொறுப்பேற்கவும்

(யாழ்ப்பாணம்)

பொலிகண்டி மேற்கு கிராம அலுவலரால் தொண்டைமானாறு செல்வச் சந்நிதி கோவிலில் இருந்து எடுத்துவரப்பட்ட உரிமை கோரப்படாத சடலம் ஒன்று பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கெரவலப்பிட்டிய றோட், கந்தளவத்தலயைச் சேர்ந்த திருமதி வைத்திலிங்கம் ஜெயந்தி (வயது-65) என்பவரது சடலமே உரிமை கோரப்படாத நிலையிலுள்ளது.

எனவே இச்சடலத்தை யாராவது உறவினர்கள் பொறுப்பேற்குமாறு பருத்தித்துறை வைத்தியசாலை அத்தியட்சகர் டாக்டர்.வி.ஜெயராஜ் அறிவித்துள்ளார். (இ-3)

## மைத்திரி அரசின் மீதும் அதிருப்தி


# பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் திட்டம் கடந்த 7மாதங்களில் முன்வைக்கவில்லை

## சரத்பொன்சேகா தெரிவிப்பு

நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான திட்டம், கடந்த ஏழு மாதங்களில் முன்வைக்க்வில்லை என ஜனநாயக கட்சி தலைவர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கெக்கிராவ பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற மக்கள், சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார.

இதுவரையில் நாட்டின் பொருளாதாரத்தில் சரிவு நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



அரசியல்வாதிகள் தலைகுனியாமல் சுய மரியாதையுடன் வாழ கூடிய நாட்டை கட்டியெழுப்ப அர்ப்பணிக்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.

ஊழல் மோசடிகாரர்களுக்கு மீண்டும் ஆட்சி அதிகாரத்தை பெற்றுக் கொள்ள இடமளிக்க வேண்டாம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# நூல் வெளியீடும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று இடம்பெறும்

(யாழ்ப்பாணம்)


யாழ்.ஆனைக்கோட்டை றோ.க.த.க.பாடசாலையின் நூல்வெளியீடும் பரிசளிப்பு விழாவும் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி நவலட்சுமி சந்திரகுமார் தலைமையில், நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வலிகாமம் வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

நூல்வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக வணிகத் துறைத் தலைவர் பேராசிரியர் க.தேவராசா நிகழ்த்துவார் என விழா ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ-3)

# திருமணத்திற்கு காரணம் என்ன?

## ஹிருணிகா விளக்கம்



சில தினங்களுக்கு முன்னர் திருமண பந்தத்தில் இணைந்த மேல் மாகாண சபை உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர தொடர்பில் வதந்திகள் பரவி வருகின்றன. இந்த நிலையில் தனியார் ஊடகம் ஒன்றுக்கு ஹிருணிகா கருத்து தெரிவித்திருந்தார். அவர் தெரிவித்ததாவது,

திரும்ணத்துக்கு முன்னரே தான் கர்ப்பம் தரித்ததாக சிலர் வதந்திகளைப் பரப்பி வருகின்றனர். அவ்வாறு கூறுபவர்கள், இன்னும் ஒன்பது மாதங்களில் உண்மையை அறிந்து கொள்வார்கள்.

இவ்வாறு தெரிவித்தவர்களுக்கு நான் ஒரே ஒரு விடயத்தை மாத்திரமே சொல்ல விரும்புகின்றேன். ஒன்பது மாதங்களில் பார்த்துக் கொள்ளுங்கள் எது உண்மை என்று.

ஹிரான் என்னுடைய மூன்றாவது காதலன். என் தந்தையைப்போல் என்னைப் பார்த்துக்கொள்ளும் ஒருவரையே நான் இதுவரை காலமும் தேடிக்கொண்டிருந்தேன். அது தற்போது நிறைவேறியுள்ளது.

எங்களுடைய திருமண வாழ்க்கையை எண்ணி நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன் எனத் தெரிவித்துள்ளார். (இ-7)

# பவானி முன்பள்ளியின் விளையாட்டு நிகழ்வு

(உடுப்பிட்டி)

தொண்டைமானாறு பவானி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு தலைவர் த.மோகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலக மாகாண சமூக சேவை உத்தியோகத்தர் ப.சர்மிலன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக அம்பிகை முன்பள்ளியின் முன்னாள் நிர்வாகி திருமதி.மு.தேவசிரோன்மணி, யாழ்.உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆசிரியர்கள் பா.அன்னராணி, ஆ.விணோதன் மற்றும் தொண்டைமானாறு வீரகத்திப் பிள்ளை மகா வித்தியாலய ஆசிரியர் திருமதி. நி.ஜெனனி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5-52)

# கதிர்காமத்திற்கு பாதயாத்திரை சென்றவர் பரிதாபமாக மரணம்

கதிர்காம முருகன் ஆலய உற்சவ தினத்தினை முன்னிட்டு பாத யாத்திரை சென்ற யாத்திரிகர் ஒருவர் நெஞ்சுவலி காரணமாக மூச்சுத்திணறல் ஏற்பட்டு உயிரிழந்துள்ளதாக உறவினர்கள் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு வாழைச்சேனை விநாயகபுரத்தினை சேர்ந்த திருமதி மேகவல்லி ரவிச்சந்திரன் (வயது-43) என்ற குடும்பநல உத்தியோகத்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவித்தனர்.

இவர் கடந்த புதன்கிழமை காலை பிரதேசத்திலுள்ள கதிர்காம யாத்திரிகர் குழுவினருடன் பேருந்து ஒன்றில் யாத்திரை மேற்கொண்டதாகவும், பின்னர் உகந்மை முருகன் ஆலயத்தில் அன்றைய தினம் மாலை தரித்து நின்று மறுநாள் வியாழக்கிழமை காட்டுவழியாக யாத்திரை குழுவினருடன் யாத்திரை மேற்கொண்டுள்ளார்.

இதன்போது பெருவெட்டை எனும் இடத்தில் உடலில் சோர்வு ஏற்பட்டதனை தொடர்ந்து அங்கு கடமையில் இருந்த இராணுவத்தினரின் உதவியுடன் பாணம வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இதன்போது அவருக்கு வழங்கப்பட்ட சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக உறவினர்கள் தெரிவித்தனர்.

தற்போது சடலம் பாணம வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. மரண விசாரணைகளின் பின்னர் சொந்த இடத்திற்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை உறவினர்கள் மேற்கொண்டுள்ளனர்.

தற்போது கதிர்காம உற்சவ விழா இடம்பெறுவதனால் நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் யாத்திரிகர்கள் கதிர்காமத்திற்கு யாத்திரை மேற்கொண்டுள்ளனர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலின் நோக்கம் குறித்து சிலருக்கு விழிப்புணர்வில்லை

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

நாடாளுமன்ற தேர்தல் நடத்துவதற்கான உண்மையான நோக்கம் குறித்து ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி பிரிநிதிகளுக்கு விழிப்புணர்வில்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாத்தாண்டிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரி விக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாடாளுமன்ற தேர்தல் தனி ஒரு நபரை மாத்திரம் முன்னிலைப்படுத்தி நடத்தப்படுவதில்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சுட்டிக் காட்டியுள்ளார். இதே வேளை, நிக்கவரெட்டிய பிரதேசத்தில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த பிரதமர்,

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணி பிரதிநிதிகள் பிரதமர் வேட்பாளர் யார் என்பது குறித்து பிரச்சினையில் சிக்கியுள்ளதாக மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# ஐக்கிய தேசிய முன்னணியில் சந்திரிகாவும் இணையவாய்ப்பு

இலங்கையின் அரசியலில் புதிதாக தோற்றுவிக்கப்பட்டுள்ள நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவும் இணைவார் என்று எதிர பார்க்கப்பபடுகிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின்வேட்புமனு மகிந்த ராஜபக்ஷவுக்கு வழுங்கப்பட்டமையை அடுத்து சந்திரிகா லண்டன் புறப்பட்டுச் செனறார்.

எனினும் அவர் தமது குடும்ப அலுவல் நிமித்தமே சென்றதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில் அவர் எதிர் வரும் 19ஆம் திகதியன்று அவர் நாடு திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுவதாக சந்திரிகாவின் பிரத்யேக செயலாளர் பி.திஸநாயக்க தெரிவித்துள்ளார.

இதனையடுத்து அவர், நல்லாட்சிக்கான ஐக்கிய தேசியமுன்னணிக்கு ஆதரவை வெளியிடுவார் என்றும் எதிர் வரும் பொதுத்தேர்தலில் கம்பஹாவில் போட்டியிடும் அர்ஜுன ரணதுங்கவின் வெற்றிக்கு துணையாக இருப்பார் என்றும தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 | 50 | 60 | 70 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 90 | 90 | 50 | 90 |
| பச்சைமிளகாய் | 400 | 350 | 300 | 350 | 280 | 350 |
| தக்காளி | 200 | 160 | 90 | 160 | 140 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 40 | 60 | 50 | 60 |
| கோவா | 100 | 80 | 100 | 100 | 80 | 90 |
| கரட் | 120 | 140 | 150 | 240 | 300 | 150 |
| பூசணி | 30 | 40 | 40 | 40 | 30 | 40 |
| புடோல் | 60 | 50 | 70 | 80 | 50 | 50 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 40 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 200 | 160 | 150 | 200 | 180 | 150 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 120 | 100 | 90 | 100 |
| பாகற்காய் | 200 | 200 | 150 | 120 | 160 | 140 |
| வெண்டிக்காய் | 100 | 80 | 90 | 120 | 80 | 100 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 100 | 140 | 100 | 120 |
| பயற்றங்காய் | 120 | 100 | 100 | 60 | 70 | 80 |
| லீக்ஸ் | 120 | 120 | 100 | 160 | 160 | 100 |
| பீற்றூட் | 120 | 130 | 120 | 120 | 100 | 120 |
| கறிமிளகாய் | 120 | 200 | 200 | 200 | 120 | 140 |
| முருங்கைக்காய் | 150 | 250 | 300 | 160 | 200 | 200 |
| போஞ்சி | 250 | 180 | 170 | 200 | 200 | 180 |
| கத்தரிதம்புள்ள | 30 | 50 | 40 | 40 | - | 40 |
| கீரை - 1 பிடி | 30 | 30 | 20 | 20 | 30 | 15 |
| தேசிக்காய் | 60 | 80 | 70 | 80 | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 40 | 30-40 | 60 | 50 |
| இராசவள்ளி | — | 140 | 160 | — | — | 120 |
| வெங்காயப்பூ | — | 200 | 200 | 240 | 180 | 200 |
| முள்ளங்கி | 50 | 60 | 50 | 80 | 60 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 20 | 30 | 30 | 25 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 | 10 | 25 |

# வீதி போக்குவரத்து ஸ்தம்பித நிலையில்

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி அந்தோனியார் சந்திப் பகுதியில் இருந்து கட்டைக்காடு வரைக்குமான வீதியின் போக்குவரத்து ஸ்தம்பித நிலையில் உள்ளதாக பொதுமக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. வீதித்திருத்தவேலைகளுக்காக வீதியின் இரு பக்கங்களிலும் பறிக்கப்பட்டுள்ள களிமண் கும்பிகளும் புளுதிப்படலங்களுமே இவ்வாறு வீதிப் போக்குவரத்திற்கு இடையூறாகக் காணப்படுகின்றது.

சுமார் 3 கிலோமீற்றர் தூரமான மேற்படி வீதியானது நீண்டகாலமாக திருத்தப்பாது சேதமடைந்த நிலையில் காணப்படுகிறது.

இந்நிலையில் இவ்வீதித்திருத்த வேலைகளுக்காக பருத்தித்துறை வீதி அபிவிருத்தி திணைக்களத்தினால் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு திருத்தவேலைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இதற்காக வீதியானது மோட்டார் கிறைண்டரினால் வெட்டப்பட்டு சமப்படுத்தப்பட்டது. இருப்பினும் தற்போது வெட்டப்பட்ட வீதியில் இருந்து புளுதிப் படலங்கள் வெளிக்கிளம்பி வீதிப்போக்குவரத்திற்கு இடையூறினை ஏற்படுத்துகின்றது.

3 கிழமைகளுக்கு முன்னர் வீதியில் பறிக்கப்பட்ட களிமண் கும்பிகள் இதுவரை வீதித் திருத்த வேலைகளுக்கு நிரப்பப்படவில்லை.

இத்தகைய நிலைமைகளால் போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறான நிலைமை தொடர்ச்சியாக அதிகரிக்கும் பட்சத்தில் அதிக இடையூறுகளையும் விபத்துக்களையும் சந்திக்கும் வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனவே குறித்த வீதியில் போக்குவரத்தினை திருப்திகரமாக மேற்கொள்ள உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை ஒன்றினை பருத்தித்துறை வீதி அபிவிருத்தி திணைக்களத்திடம் விடுத்துள்ளனர். (இ-5-64)


# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 435

Search for people, places and things
Nagendram Home


லதா குமார்

சேர்ப்பது மிகக் கடினம்
செலவு செய்வது மிக எளிது
பணம் மட்டும் அல்ல
அடுத்தவர் உள்ளத்தில்
நாம் சேர்த்து வைக்கும்
நல்லெண்ணமும் கூட!

மாஸ் ரவி




ராகுலன் தவராசா




வதனி வதனிகா





மரியதாஸ் அந்தோனி




சுலக்சனா இராஜதுரை

நீ என் தோழியா? காதலியா? யாரடி சொல் பெண்ணே



குடிச்சிட்டு வந்தா மனைவி முகம் கூட மறந்துட்டாய்யா...

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook [illegible] பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுத்தேர்தலில் புதிய ஜனாதிபதியின் நிலைப்பாடு என்ன?

**05.07.2015 அன்று சண்டே ரைம்ஸ் பத்திரிகையில் ஜனாதிபதி வெள்ளைக்கொடியுடன் சரணடைகிறாரா? எனும் தலைப்பில் வெளியான ஆசிரியர் தலையங்கத்தின் தமிழாக்கம் ....**

...அடுத்தமாத தேர்தலேதான் அவரது எதிர்பார்ப்பாக இல்லாவிடினுங்கூட தனது அரசாங்கத்தை எவருடன் சேர்ந்து நடத்துவது நலமாயிருக்கும் என அவர் சிந்திக்க வேண்டியவராயிருக்கிறார். அவரது நிறைவேற்று அதிகாரங்கள் சிலவற்றை 19 ஆவது திருத்தம் வெட்டிக் குறைத்திருந்தாலுங்கூட அவரே அரச தலைவராகவும் அமைச்சரவை தலைவராகவும் தொடர்ந்துமிருக்கிறார் என்பதே உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பாகவுமிருக்கிறது.

எமது தற்போதைய பிரதம மந்திரியாகிய 'UNP' தலைவரிலும் பார்க்க தாம் எவ்விதம் கூடுதல் நம்பிக்கைக்குரியவராக இருந்திருக் கக்கூடும் என ராஜபக்ச அவர்கள் தம்மிடம் கூறியதாக எமது கடந்தவாரக் கட்டுரை ஆசிரியர் குறிப்பிட்டுக் கூறியிருந்தார். ஜனாதிபதியவர்கள் இங்கு பதிலொன்றை எதிர்பார்த்தவராகவே இருந்திருக்க வேண்டும். வருகின்ற தேர்தல் அதிகப்படியான ஆசனங்களை பெற்றுக்கொள்வதற்கு 'UNP'யால் முடியுமானால் சிறிசேன அவர்கள் சேர்ந்திணைந்து செயற்படக்கூடியதும் பல்வேறு எதிர்க்கருத்துக்கள் கொண்டதுமான அரசாங்கமொன்றை நிர்வகிக்கும் ஜனாதிபதியாக இருப்பார். ஆனாலும், அவரது பதவியையும் பொறுப்பையும் உறுதிப்படுத்திய ஒரு ஆளும் கட்சிதான் அது. அவரது சொந்த கட்சியான 'SLFP' கட்சி அடுத்த பாராளுமன்ற ஆட்சியை கைப்பற்றுமானால், கடந்த மாதங்களாக அவர் முகங்கொடுத்துக் கொண்டிருக்கும் சிக்கலான எதிர்போக்குகள் மத்தியில் அமிழ்ந்து இறுதியில் அடங்கிப் போய்விடுவதே அவரது முடிவாக இருக்கும். அதுவா? இதுவா? என்று தெரியாமல் எதுவுமே இல்லாது போகக்கூடிய ஒரு இருத்தலைக் கொள்ளியெறும்பின் நிலையே அது. எவருமே திருப்திப்பட்டுக்கொள்ள முடியாத சிக்கல் நிலையேதான்.



வருகின்ற தேர்தலில் நடுநிலை வகுப்பதே அவருக்கு இருக்கக்கூடிய விருப்பிற்குரிய ஒரே தெரிவாகும். அண்மித்த நாட்களில் அவரது வார்த்தைகள் தடம்புரள அவர் அளித்திருந்த வாக்குறுதிகள் அதிகரித்த விதமாக நேர்மை குன்றிப் போய்க்கொண்டிருந்தாலும் மற்றுமொரு ஜனாதிபதித் தேர்தலில் தான் போட்டியிடப் போவதில்லை என அவர் ஏற்கனவே கூறியுமுள்ளார். முடிந்தால் அவர் தன்னை சாதாரணமான அரசியல்வாதி என்ற நிலையிலிருந்து ஒரு நாட்டின் அரசுத் தலைவர் என்ற கௌரவ அந்தஸ்த்திற்கு உயர்த்திக் கொள்ள வேண்டுமென்பதே எல்லோரதும் விருப்பமாகும். ஒரு அரசியல் கட்சியின் தலைவரான நிறைவேற்று அதிகார வலிமை கொண்ட ஆட்சியாளரால் நாட்டு மக்கள் தொகையில் அரைப்பங்கினரான ஏனைய கட்சி ஆதரவாளர்கள் தனிமைப் படுத்தப்பட்டு நாதியற்றவர்களாக விடப்பட்டதால் நீண்டகாலமாகவே நாடு இரண்டாக பிளவுபட்ட நிலையிலிருந்ததே நாட்டின் பாரிய பிரச்சினையொன்றாக இருந்து வந்தது.



ஒரே கட்சிக்கான நிறைவேற்று ஜனாதிபதி முறையையே பாரம்பரிய ஆட்சி முறையாக கொண்ட பிரான்ஸ், அமெரிக்கா போன்ற நாடுகளில் பொருளாதார ரீதியிலோ அல்லது ஜனநாயக ஸ்தாபனங்கள் நிறுவன ரீதியிலோ வெற்றிகரமாகச் செயற்பட்டு அபிவிருத்தி கண்டதுபோல் எமது நாடு இல்லை. இந்தியாவின் ஜனாதிபதி [illegible] பதவி அதிகார[illegible] சிக்கல்களுக்கு அப்பாற்பட்டதாகவே இருந்து வருவதுடன் பிரித்தானியாவிலும் கட்சி அரசியல் பிரச்சினைகள் மத்தியிலும் நாட்டை ஒருமைப்பாட்டிற்குள் கொண்டிருக்கும் ஒரு காரணியாக அரசியின் தனித்துவமான ஆட்சிமுறை இருந்து வருகிறது.

அபேட்சகர்களுக்கான தேடலுடன் ஆரம்பித்த வேட்புமனுத் தாக்கல் நடவடிக்கைகள் கடந்த 13 ஆம் திகதியுடன் நிறைவடைந்தன. ஜனநாயக உலகமெங்கும் காணப்படும் பாராளுமன்றங்களின் செயற்பாடுகளனைத்தும் தரக்குறைவான வெளிப்பாடுகளையே புலப்படுத்துபவையாக மாறிக்கொண்டிருப்பதாகவே தெரிகிறது. ஜனாநாயக ரீதியில் பாராளுமன்றங்களுக்கெல்லாம் தாய் போன்ற எடுத்துக்காட்டான செயற்பாடுகளைக் கொண்டிருக்கும் பிரித்தானியாவிலுங்கூட, கீழ்மட்டத்திலிருந்து அனுபவ ரீதியான சேவை அடிப்படையில் வளர்ந்துவரும் அபேட்சகருக்கான தகமை உரிமை முறை ('தொழில்முறை அரசியல்வாதி'- 'professional politician') தெரிவுகளில் தற்போது கடைப்பிடிக்கப்படுவது குறித்து மனவருத்தம் தெரிவிக்கப்படுகிறது. சட்டத்தரணி டாக்டர், வங்கியாளர், கட்டடத் தொழிலாளி மற்றும் தொழிற்சங்கவாதிகள் போன்ற ஒரு சமூகவர்க்கப் பிரதிநிதிகளையும் உள்ளடக்கும் பாராளுமன்ற முறைமை தற்போது இல்லை, அதற்குப் பதிலாக கட்சித் தொண்டர்கள், வேலையாட்கள் என்ற விதமாக நிலைமை மாறிப்போயிற்று என்பதே அவர்களது வருத்தத்திற்கான காரணம். இந்தியாவிலோவென்றால் குற்றவாளிகளே பாராளுமன்ற சட்ட சபைகளையும் ஆட்சி அதிகார மையங்களையும் கூடுதல் அளவில் நிரப்பும் மக்கள் பிரதிநிதிகளாகும் நிலைமையே உள்ளது. அத்துடன அவர்கள சிறைசெல்ல வேண்டிய சந்தர்ப்பங்களில் அவர்களது மனைவிமார்களே அவர்களது இடத்தை நிரப்பும் அரசியல்வாதிகளாகின்றனர்.

இலங்கையின் விகிதாசாரப் பிரதிநிதித்துவ ('proportional representation') முறை மற்றும் விருப்பத் தெரிவு வாக்களிப்பு முறை ('preferential voting system') போன்ற தேர்தல் முறைகள் மூலம் குற்றவாளிகள், இன- மதவாதிகள் போன்ற சமூக விரோதிகள் அரசியலுக்குள் சர்வசாதாரணமாக நுழையக்கூடியதாக இருக்கிறது. கட்சித் தலைவர்களே பாரிய பொறுப்புக்களை தமது தோள்களில் சுமக்க வேண்டிய சூழ்நிலைகளுக்குத் தள்ளப்படுகிறார்கள். கடந்த தடவை, தொலைக்காட்சி நாடக நடிகையொருவருக்கு 'UNP' வேட்பு மனு அனுமதி கொடுத்திருந்தது. அரசியல் ரீதியாக 13 ஆவது மற்றும 17 ஆவது அரசியல் சட்ட திருத்த வேறுபாடெதுவுமே தெரியாத அந்த நடிகைக்கு வேட்புமனு சிபார்சு செய்த அனுபவம் வாய்ந்த அரசியல்வாதியிலும் பார்க்க நடிகையே கூடுதல் வாக்குகள் பெற்று வெற்றியடைந்தது மட்டுமல்லாது எந்தவித தயக்கமும் இன்றி தனது வாக்காளர்களை நட்டாற்றில் கைவிட்டு ராஜபக்ச அரசுடன் இணைந்துகொண்டார்.

குற்றவாளிகள் மற்றும் சமூக விரோதிகள் போன்ற அநியாயக்காரர்களை கட்சியின் வேட்புமனுப் பட்டியலிலிருந்து நீக்கிவிடுவதாக ஜனாதிபதி சிறிசேன என்னதான் சொல்லியிருந்தபோதிலும் அவரது கட்சியின் நிர்வாக செயலரது கூற்றின்படி கலைக்கப்பட்ட இறுதிப் பாராளுமன்ற பிரதிநிதிகளாயிருந்த அவரது கட்சி உறுப்பினர்களுக்கான வேட்புமனு அனுமதிக்கு நேர்முக தேர்வுப் பரீட்சையெதுவும் தேவையில்லை என்பதால் அவர்கள் வேட்புமனுவுக்கான அனுமதியை இயல்பாகவே பெற்றுக்கொள்வர் என்று கூறியதான பதிவும் ஏற்கனவே உள்ளது. விடயம் இவ்வாறேதான் இருக்குமென்றால் முன்னையது போன்ற ஒரு பிரதிப்பாராளுமன்றத்தை அமைப்பதற்காக முன்னர் இருந்ததைக் கலைத்து 4 பில்லியன் ரூபா பணச் செலவை ஏற்படுத்துவதற்கான தேவைதான் என்ன?

நாட்டிற்கு தொடர்ந்தும் ஏற்படவிருக்கும் துயரநிலை இதுதானா?

(முற்றும்)

-தமிழில்-யோகர்-

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பிரதமர் யார் என்பது குறித்து பிரச்சினை வேண்டாம்-நிமால்

(கொழும்பு)

**அடுத்த பிரதமர் யார் என்பது தொடர்பில் யாரும் பிரச்சினை ஏற்படுத்திக்கொள்ளக் கூடாதென எதிர்க்கட்சி தலைவர் நிமால் சிறிபால டி சில்வா வேண்டுகோள் விடுத்துள்ளார்.**



எதிர்வரும் தேர்தலின் பின்னர் பிரதமர் யார் என்பது தொடர்பில் தீர்மானிக்க முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதுவரையில் பிரதமர் நியமிப்பது தொடர்பில் பிரச்சினை ஏற்படுத்திக்கொள்ள வேண்டாம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுவரையில் கூட்டணியின் பிரதமர் குறித்து பேசுவதற்கு பதிலாக தேர்தலில் வெற்றி பெறுவதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)

# பிரதமரை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதி மைத்திரிக்கு இல்லை

## சரத் என் சில்வா கூறுகிறார்

நாட்டின் பிரதமரை தெரிவு செய்யும் அதிகாரம் ஜனாதிபதிக்கு கிடையாது என முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

பெரும்பான்மை பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவே பிரதமரை தெரிவு செய்வதற்கு தேவையானது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பிரதமர் தெரிவு தொடர்பில் ஜனாதிபதி அண்மையில் வெளியிட்ட கருத்து ஜனநாயக விரோதமானது.

பெரும்பான்மையான நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாரை ஆதரிக்கின்றார்களோ அவரையே பிரதமராக தெரிவு செய்ய வேண்டும்.

அவ்வாறான ஒருவரை நியமிப்பதே ஜனாதிபதியின் கடமையாகும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிழையான முன்னுதாரணத்தை வழங்கியுள்ளார்.


ஜனாதிபதி பதவிப் பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர், பெரும்பான்மை இல்லாத ஒருவரை பிரதமராக தெரிவு செய்தார்.

இது அரசியல் அமைப்பிற்கு முரணான ஓர் நடவடிக்கையாகும்.

அரசியல் அமைப்பை பாதுகாப்பதனை விடவும் ஜனாதிபதி, தம்மை பதவியில் அமர்த்திய தரப்புடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையை பாதுகாத்துக் கொள்ள முயற்சித்தார்.

இது ஜனநாயகமான நாடொன்றிற்கு உசிதமான காரியமல்ல என சரத் என் சில்வா சிங்கள ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார். (இ-7)

## இளைஞர் திறன் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி மைத்திரிக்கு முதலாவது கொடி



சர்வதேச இளைஞர் திறன் தினத்தை முன்னிட்டு, திறன் விருத்தி அமைச்சர் பியசேன கமகேவினால் சர்வதேச இளைஞர் திறன் தினத்தின் முதலாவது கொடி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் வைத்து அணிவிக்கப்பட்டது.

இளைஞர் திறன் அபிவிருத்தியின் முதலீடு அதன் முக்கியத்துவம் பற்றியும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் ஜூலை 15 சர்வதேச இளைஞர் திறன் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டது. (இ-7)

# ஐ.தே.முவின் கொள்கை பிரகடனம் அடுத்த வாரத்தில் வெளியிடப்படும்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணியின் கொள்கைப் பிரகடனம் அடுத்த வாரத்தில் வெளியிடப்பட உள்ளதாக ஊடக அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

ஓராண்டு காலத்திற்குள் பத்து இலட்சம் இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பு வழங்குதல், பாரிய அபிவிருத்தித் திட்டங்கள், மக்களுக்கு பல்வேறு வழிகளில் நிவாரணங்களை வழங்குதல் போன்ற நலத் திட்டங்களை உள்ளடக்கிய ஐக்கிய தேசிய முன்னணியின் கொள்கைப் பிரகடனம் விரைவில் வெளியிடப்படும்.

மேல் மாகாணத்தை நாகரிக வலயமாக மாற்றுதல், 2500 கிராம வீதிகளை புனரமைத்தல், பாரியளவிலான முதலீட்டு திட்டங்களை ஆரம்பித்தல், பெந்தொட்டை முதல் மிரிஸ்ஸ வரையிலான பகுதிகளை சுற்றுலா வலயமாக மாற்றுதல், வாடகை வீடுகளில் வாழ்ந்து வருவோருக்கு சொந்த வீடுகளை வழங்குதல், குருநாகலில் வொக்ஸ் வோகன் கார் உற்பத்தி கைத்தொழிற்சாலை ஒன்றை நிறுவுதல் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து செயற்படக் கூடிய நல்லாட்சி அரசாங்கமொன்றை அமைக்க மக்கள் ஏற்கனவே தீர்மானித்துள்ளனர்.

பிரதமர் முன்னதாக அறிவித்ததற்கு இணங்க ஒட்டுமொத்த நாடாளுமன்றமும் அமைச்சரவையாக கருதப்பட்டு பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என கயந்த கருணாதிலக்க நேற்று முன்தினம் ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையகமான சிறிகொத்தவில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## யார் பெரியவர்?

"ஐந்து விரல்களும் ஒரே மாதிரியாகவா இருக்கிறது?" என்று உதாரணம் சொல்வதுண்டு. அதாவது இந்த உலகத்தில் வேறுபாடுகள் இருக்கத்தான் செய்யும். அதற்காக ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொண்டிருக்கக் கூடாது. ஒரு சமயம் ஐந்து விரல்களுக்கிடையிலும் சண்டை வந்து விட்டதாம். "யார் பெரியவர்?" என்ற சண்டை தான் அது.

கட்டை விரல் முதலில் பேச ஆரம்பித்தது. "நான் குட்டையாக இருக்கிறேன் என்று எல்லோரும் சொல்கிறீர்கள்! அகத்தியர் கூட என்னைப் போல குட்டையாகத் தான் இருந்தார். இருந்தாலும் அவருக்குள்ள சக்தி வேறு யாருக்கு உண்டு?

பரமசிவனுக்கும் பார்வதிக்கும் கல்யாணம் நடந்த சமயத்தில் எல்லோரும் வடக்கே கூடிவிட்டார்கள். பூமியும் வடக்கே தாழ்ந்து தெற்கே உயர்ந்தது. அதை சமநிலையாக்குவதற்கு அகத்தியரை மட்டும் பரமசிவன் தெற்கே அனுப்பி வைத்தார். பூமி சமநிலை ஆகிவிட்டது.

அப்படியானால் அவருடைய வலிமை எப்படியென்று புரிந்து கொள்ள வேண்டும். அதே மாதிரிதான் நானும் இருக்கிறேன். ஏதாவது ஒரு பொருளை தூக்க வேண்டுமென்றால் கூட நான் ஒரு பக்கமும் நீங்கள் நான்கு பேரும் இன்னொரு இருக்க வேண்டியிருக்கிறது. அதனால் நான்தான் பெரியவன்" என்றது கட்டைவிரல்.

இதைக் கேட்டவுடன் மற்றைய நான் விரல்களுக்கும் ஒரு கௌரவப் பிரச்சினை உண்டாயிற்று. அடுத்ததாக ஆட் கட்டி விரல் நிமிர்ந்து நின்றது. "இதோ பாருங்கள்...யாரை சுட்டிக் காட்ட வேண்டுமென்றாலும் நான்தான் தேவைப்படு கிறேன். அதனால் நான்தான் பெரியவன்" என்றது.

அது சொல்வதும் நியாயம் தானே! மேலத் தெருவுக்கு எந்த வழியாகப் போக வேண்டும் என்று கேட்டால் "இதோ இந்த வழியாகப் போங்க" என்று சுட்டுவிரலால் தானே காட்டுகின்றோம்.

அடுத்ததாக நடுவிரல் கொஞ்சம் கூட அலட்டிக் கொள்ளாமல் எழுந்து நின்றது. "எதற்கு வீணாகப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்? எல்லோரும் எழுந்து நில்லுங்கள்! யார் உயரம் என்று அளந்து பார்த்து விடுவோம்! அப்படிப்பார்த்தால் நான் தான் பெரிய வன்!" என்றது.

அடுத்ததாக இருக்கும் மோதிரவிரல் சும்மா இருக்குமா? அதன் மேல் போட்டிருந்த தங்க மோதிரத்தை எல்லோரது கண்ணிலும்படுவது மாதிரி அப்படியும் இப்படியும் திருப்பிக் காட்டியது.

ஒரு மனிதன் தான் பெரிய மனுஷன். வசதியானவன் என்று காட்டிக் கொள்ள மோதிரம் போடுகிறான். அதற்கு உங்களிடம் யார் வருவான்? என்னிடம் தானே வருகிறான்.

விலையுயர்ந்த பொருட்களெல்லாம் நம்பிப்போடுவதற்கு நான் தான் பொருத்தமானவன். அப்படியிருக்கும் போது நீங்கள் அதை புரிந்து கொள்ளவில்லை என்றால் எப்படி?" என்றது மோதிர விரல்.

நான்கு விரல்களும் பொருத்தமான "பொயின்றை" எடுத்து சொல்லியது. கடைசியாக மீதமிருந்தது சுண்டு விரல்தான். அது அழுதுகொண்டே கடவுளிடம் போனது. தனது நிலைமையை கடவுளிடம் சொல்லியது. கடவுளும் காதோடு காதாக ஏதோ ஒன்றை சொல்லி அனுப்பினார்.

சுண்டு விரல் தைரியமாக திரும்பி வந்தது. உங்கள் எல்லோரையும் விட நான் தான் பெரியவன். இதில் உங்களுக்கு சந்தேகமே வர வேண்டியதில்லை. கோவிலுக்குப் போய் இரண்டு கைகளையும் கூப்பி சாமி கும்பிடும்போது நான் தான் உங்கள் எல் லோருக்கும் முன்னால் நிற்கிறேன். அதனால் ஆண்டவனுக்கு மிகவும் நெருக்கமாக பக்கத்தில் இருப்பது நான் தான்!" என்றது.

இந்தக் கருத்தை மற்றைய எல்லா விரல்களும் ஏற்றுக் கொண்டன. யார், இறைவனுக்கு பக்கத்தில் இருக்கிறார்களோ அவர்கள்தான் பெரியவர்கள்!, இதில் ஒரு முக்கிய தத்துவம் என்னவென்றால் சுண்டுவிரலுக்கு நான்தான் பெரியவன் என்ற கர்வம் ஏற்படவில்லை. அதுதான் வெற்றியின் இரகசியம்.

நான்தான் பெரியவர் என்று நினைத்துக் கொண்டிருக்கும் இருவர் வோக்கிங் போகும் போது சந்தித்துக் கொண்டார்கள். அதில் ஒருவர், "ஏனப்பா... நீதான் வோக்கிங் போகிறாய். எதற்கு இந்தக் குரங்குக் குட்டியையும் அழைத்துக் கொண்டு போகிறாய்?" என்றார்.


அடுத்தவருக்கு கோபம் வந்து விட்டது? "உனக்கு கண் தெரியவில்லையா? நன்றாகப் பார். இது குரங்குக் குட்டியல்ல! நாய்க்குட்டி!" என்றார். அதற்கு இவர் "நான் கேட்டது உன்னிடம் அல்ல. அந்த நாய்க்குட்டியிடம்!" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடி மாத இராசி பலன்கள்

## 17.07.2015~17.08.2015



**தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும்! குருவை இராசிநாதனாகப் பெற்றதால் குவலயம் போற்றும் வாழ்க்கையை அமைத்துக்கொண்ட தனுசு இராசி நேயர்களே!**

ஆடிமாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, சந்திராஷ்டமத்தில் மாதம் தொடங்கினாலும் சகல யோகமும் தரும் விதத்தில் குருவின் பார்வை உங்கள் ராசியில் பதிகின்றது. எனவே, 'குரு பார்க்கக் கோடி நன்மை' என்பதற்கேற்ப எடுத்த காரியங்களில் எளிதில வெற்றி காண்பீர்கள். இல்லம் தேடி நல்ல செய்திகள் வந்த வண்ணம் இருக்கும். பொது நலத்தில் இருப்பவர் களுக்கு புதிய பொறுப்புகளும், பதவிகளும் கிடைக்கலாம். நண்பர்கள் நல்ல தகவல்களைக் கொண்டு வந்து சேர்ப்பர்.

நல்ல காரியம் இல்லத்தில் நடைபெறவில்லையே என்ற கவலை இனி அகலும். திருமண வாய்ப்பு, கிரகப்பிரவேசம், கடைதிறப்பு விழாக்கள் போன்றவைகளில் இருந்த தடைகள் அகலும். பொதுவாகவே ராசிநாதன் ராசியைப் பார்க்கும் பொழுது செயறபாடுகளில் வெற்றி கிடைக்கும். தெய்வீக சிந்தனை மேலோங்கும். அயல்நாட்டு யோகம் முதல் அத்தனை விதமான யோகங்களும் வந்து சேரும். பொருளாதார முன்னேற்றம் கருதி எடுத்த புது முயற்சி அனுகூலமாக இருக்கும்.

இதுவரை விரயச் சனியின் ஆதிகத்தில் இருந்த நீங்கள் இப்பொழுது அதிலிருந்து விடுபட்டு லாபச் சனியின் ஆதிக்கத்தை மேற்கொண்டுள்ளீர்கள். காரணம் சனியின் வக்ர இயக்கம்தான். ஒரு சில மாதங்கள், சனி லாப ஸ்தானத்தில் சஞ்சரித்தாலும் உங்கள் ராசி அமைப்பின்படி தனாதிபதியாகவும், சகாய ஸ்தானாதிபதியாகவும் விளங்குவதால் பண வரவில் எந்தத் தடையும் ஏற்படாது. பற்றாக்குறை பட்ஜெட் மாறும். வருமானம் இரு மடங்காக உயரும். வரும் வாய்ப்புகளை உபயோகப்படுத்திக் கொள்வது உங்கள் புத்திசாலித்தனமாகும்.

# தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும்!

பத்தாமிடத்தில் ராகு சஞ்சரிப்பது யோகம் தான். தொழில் ஸ்தானம் வலுப்பெறுகிறது. எனவே மூடுவிழா கண்ட தொழிலில் கூட இனி திறப்பு விழா செய்து பார்ப்பீர்கள். ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும். உள்ளத்தில் ஒன்றும், உதட்டில் ஒன்றும் வைத்துப் பேசியவர்கள் உங்களைவிட்டு விலகுவர். எந்த முயற்சியையும் தெள்ளத் தெளிவாக முடிவெடுத்து திறமை மிக்கவர்களைப் பின்னணியாக வைத்துக் கொண்டு செயறபடுவதன் மூலம் வெற்றிக்கனியை விரைவில் எட்டிப் பிடிக்க முடியும் என்பதை அறிந்து கொள்ளுங்கள். பார்க்கும் சனியால் பாதிப்பு ஏற்படாமல் இருக்க சனிக்கிழமை தோறும் அனுமனை வழிபட்டு வாருங்கள்.

**கடக செவ்வாயின சஞ்சாரம்!**

கடக ராசியில்ஜூலை 31 ஆம் திகதி செவ்வாய் சஞ்சரித்து நீச்சம் பெறப் போகின்றார். இந்த நீச்ச செவ்வாயின் ஆதிக்கம்நிகழ்காலத்தேவைகளைப் பூர்த்தி செய்யும். 12 இறகு அதிபதியான செவ்வாய் நீச்சம் பெறுவதால் விரயங்கள் ஏற்பட்டாலும் சுப காரியங்களுக்கு செலவிடும் விதத்தில் அமையும். வரன்கள் வாயில் தேடி வந்து விட்டுப் போகிறதே என்று கவலைப்பட்டவர்கள் இதுபோன்ற நேரங்களில் குழந்தைகளின் திருமணப் பேச்சுக்களை தீவிரமாகப் பேசி முடித்து தேதி வைத்துக் கொள்வது நல்லது. இழந்தவைகளை எடுத்துக் கொடுக்கும் வாய்ப்பும் வந்து சேரும். எனவே, தொழிலில் ஏற்பட்ட இடையூறுகள் அகலும். புதிய பங்குதாரர்கள் வந்திணைந்து பொருளாதாரத்தை விருத்தி செய்து கொடுப்பர். அங்காரக சேஷத்திரமான வைத்தீஸ்வரன் கோவிலுக்குச் சென்று வழிபட்டு வருவது நல்லது.




**சிம்ம புதனின் சஞ்சாரம்!**

ஆகஸ்ட் 1ஆம திக்தி சிம்ம ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகின்றார். 7, 10 இறகு அதிபதியான புதன் 9 இல் சஞ்சரிப்பது யோகம்தான். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும். தந்தை வழி உடன்பிறப்புகளால் ஏற்பட்ட தகராறுகள் அகலும. மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் விலகும். கடிதம் கனிந்த தகவலைத் தரும். வாகன யோகம் உண்டு. இம்மாதம் வியாழன் தோறும் விரதம் இருந்து குரு கவசம் பாடி குரு தட்சிணாமூர்த்தியை வழிபட்டு வருவது நல்லது.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள**

வாய்ப்புகள் வாயில் கதவைத் தட்டும் மாதமாகும். வளர்ச்சி கூடும. வாரிசுகளின் தொல்லை அகலும். தொழிலில் எதிர்பார்த்தபடியே லாபம் கிடைக்கும். துணையாக இருப்பவர்கள் தோள்கொடுத்து உதவுவர். மனை தேடி மங்கலச் செய்திகள் வந்து சேரும். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும்.

உடன்பிறப்புகளும் உதவிக் கரம் நீட்டுவர். பிள்ளைகள் வழியில் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். பார்க்கும் குருவைப் பலப்படுத்தினால் படிப்படியான முன்னேற்றங்கள் வந்து சேரும். எனவே வியாழன் தோறும் தென்முகக் கடவுளை வழிபட்டு வாருங்கள். கேது பலத்தால் உடல்நலக் குறைவு ஏற்பட்டாலும் மாற்று மருத்துவத்தால் உடல் நலத்தை சீராக்கிக் கொள்ள இயலும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**விரயங்கள் அதிகரிக்கும் நேரம்! சனியை இராசிநாதனாகப் பெற்றதால் எந்தக் காரியத்தையும் நிதானத்தோடு செய்து நிம்மதி காணும் மகர இராசிநேயர்களே!**

ஆடிமாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, குரு அஷ்டமத்தில் அடியெடுத்து வைத்திருக்கிறார். அதனால் கூடுதல் விரயங்கள் உருவாகலாம். என்றாலும், குரு உங்கள் ராசியைப் பொறுத்தவரை 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியாக இருப்பதால் வருமானத்தைப் பொறுத்தே செலவழிக்க வைப்பார்.

இதுபோன்ற காலங்களில் சுபச் செலவுகளை செய்வதன் மூலம் வீண் விரயங்களிலிருந்து தப்பிக்க இயலும்.

'எலி வளை ஆனாலும் தனி வளை வேண்டும்' என்பது பழமொழி. தனித்து வீடு கட்டிக் குடியேற நினைத்தும் அதற்குப் போதுமான பண வசதி இல்லையே என்று கவலைப்பட்டவர்களுக்கு இப்பொழுது வங்கிகளின் ஒத்துழைப் போடும், அரசுவழி அனுகூலத்தோடும் கட்டடங்கள் கட்டும் வாய்ப்புகள் கைகூடிவரலாம்.

வரும் வாய்ப்புகளை உபயோகப்படுத்திக் கொள்ளும் முன் உங்கள் குடும்ப ஜாதகங்களை ஒருமுறை புரட்டிப் பாருங்கள். செவ்வாய் பலம் யாருக்கு இருக்கிறதோ அவர்கள் பெயரில் கட்டுவது உத்தமம்.

சூரியனும், சந்திரனும், புதனும் உங்கள் ராசிக்கு 7 இல் சஞ்சரித்து உங்கள் ராசியைப் பார்க்கிறார்கள். சூரிய பார்வை ஏற்படுவது அவ்வளவு நல்லதல்ல. கோபத்தால் பல நல்ல வாய்ப்புகளை இழக்க நேரிடும்.

எனவே, கோபத்தைக் குறைத்துக் கொண்டு செயறபடுவது நல்லது. தந்தை வழி உறவினர்களின் பகையை வளர்த்துக் கொள்ளாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

என்ன இருந்தாலும் குருவின் பார்வை தன ஸ்தானத்தில் [illegible] தால் தேவைப்பட்ட நேரத்தில் [illegible] ளாதார வசதி வந்து சேர்ந்து விடும்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உடன் பணிபுரிபவர்களால் தொல்லை ஏற்படாமலிருக்க கவனமாக இருப்பது நல்லது. மற்றவர்களைப் பற்றி விமர்சிப்பதன் மூலம் மனக்கசப்புகள் உருவாகலாம்.

எனவே கூடுதல் விழிப்புணர்ச்சியுடன் செயற்படுவதோடு தெய்வ வழிபாடுகளையும் திருப்தியாகச் செய்வது நல்லது. மீண்டும் சனி விருச்சி கத்திற்கு வந்த பின்னர் உங்கள் எண்ணங்கள் ஈடேறும். லாபம் எதிர்பார்த்தபடி வந்து சேரும்.

**கடகச் செவ்வாயின் சஞ்சாரம்!**

ஜூலை 31 ஆம் திகதி கடக ராசியில் செவ்வாய் நீச்சம் பெறுகிறார். இதன் விளைவாக சுக லாபாதிபதி வலிமை இழந்திருப்பதால் ஆரோக்கியத் தொல்லைகள் அதிகரிக்கலாம். அடிக்கடி உடல்நலக் குறைவு ஏற்பட்டு உங்களுக்கோ, உங்கள் குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கோ மருத்துவச் செலவுகள் உருவாகலாம்.

வாகனங்களில் செல்லும்பொழுது விழிப்புணர்ச்சி தேவை. பழைய வாகனங்களைக் கொடுத்துவிட்டுப் [illegible]

தாயின் உடல் நலத்தில் கவனம் தேவை. வீடு கட்டும் முயற்சியில் தடைகளும், குறுக்கீடுகளும் வந்து சேரலாம். நாடு மாற்றங்களால் நன்மை கிடைக்குமா? என்பது சந்தேகம்தான்.

வெளி நாட்டு வேலை விருப்பம் போல் அமையவில்லை என்று தாய்நாடு திரும்பும் சூழ்நிலை உருவாகும். ராசிநாதன் சனியும் வக்ரம் என்பதால் யோசித்துச் செய்யும் செயல்களில் மட்டுமே வெற்றி கிடைக்கும்.

சனிக்கிழமை தோறும் சனி பகவான் வழிபாட்டை மேற்கொள்வதோடு, செவ்வாய் தோறும் வடக்கு நோக்கிய அம்பிகையை வழிபடுவதன் மூலம் வளங்களை உருவாக்கிக் கொள்ள இயலும்.




# விரயங்கள் அதிகரிக்கும் நேரம்

**சிம்ம புதனின் சஞ்சாரம்!**

ஆகஸ்ட் முதல் திகதி சிம்ம ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகின்றார். இது ஓரளவிற்கு நன்மையைச் செய்யும். உங்கள் ராசிக்கு ஆறாமிடத்திற்கு அதிபதியான புதன் இல் மறையும் பொழுது, மறைந்த புதன் நிறைந்த தன லாபத்தை தரும்.

நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். நீடித்த நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் ஒத்துழைப்பு உண்டு. வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும்.

குழந்தைகள் குதூகலமான தகவலைக் கொண்டு வந்து சேர்ப்பர். இம்மாதம் சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய மாதமாகும். அதிகச் செலவு ஏற்படுகிறதே என்று கவலைப்படுவீர்கள். தாய்வழி ஆதரவு கிடைக்கும். சகோதரர்கள் உங்கள் முன்னேற்றத்திற்கு வித்திடுவர்.

பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும். கணவன்-மனைவிக்குள் விட்டுக் கொடுத்து செல்வதன் மூலம் தான் ஒற்றுமையை பலப்படுத்திக் கொள்ள இயலும். குழந்தைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்குவீர்கள்.

குடியிருக்கும் வீட்டால் பிரச்சினைகள் உருவாகலாம். எதையும் நன்கு சிந்திப்பது நல்லது. குரு வழிபாடும், சனி வழிபாடும் இம்மாதத்தை இனிதாக மாற்றும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை சுகாதாரத் தொண்டர்கள் போராட்டம்!

**(யாழ்ப்பாணம்)**

**தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையில் சுகாதாரத் தொண்டர்களாக பணியாற்றிவரும் 35 சுகாதாரத் தொண்டர்கள் தொடர் போரட்டத்தினை நேற்று ஆரம்பித்துள்ளனர்.**



குறித்த போராட்டத்தினை நேற்றுக் காலை 6 மணி முதல் தெல்லிப் பழை வைத்தியசாலை முன்பாக முன்னெடுத்து வருகின்றனர்.

குறித்த 35 சுகாதார தொண்டர்களும் கடந்த 2014 ஆம் ஆண்டு முதல் 6 மாதம் ஒப்பந்த கால அடிப்படையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் கடமைக்கு அமர்த்தப்பட்டனர். 6 மாதகால ஒப்பந்த காலம் முடிவுற்ற நிலையில் மீண்டும் 6 மாதகால ஒப்பந்தத்தில் அமைய அடிப் படையில் பணிக்கு அமர்த்தப்பட்டனர். இரண்டாவது ஒப்பந்த காலமான 6 மாதகாலம் நேற்றுடன் முடிவுற்ற நிலையில் அவர்களை வேறு வேலை பார்க்குமாறு பணிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே அவர்கள் நேற்றைய தினம் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரி தொடர் பேராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நாளொன்றுக்கு 450 ரூபா சம்பளத்துடன் இரவு-பகல் பார்க்காமல் வைத்திய சாலையில் பணியாற்றியிருந்தோம். ஒப்பந்தகால அடிப்படையில் சுகாதார தொண்டர்களாக உள்வாங்கப்படுவதற்கு முன்னர் நீண்டகாலமாக கிராமமட்ட சுகாதார தொண்டர்களாகவும் பணியாற்றி வந்திருந்தோம்.

ஆனால் தற்போது இங்கு வேலை இல்லை. வேறு வேலை பார்க்குமாறு கூறி வெளியேற்றியுள்ளனர் என போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தொண்டர்கள் தெரிவித்ததோடு தமக்கான நிரந்தர நியமனம் கிடைக்கும் வரையில் தொடர்ந்து போராடுவோம் எனவும் தெரிவித்தனர்.

குறித்த தொண்டர்கள் தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையில் சிறந்த சேவையாற்றி வருவதாகவும் இவர்களின் போராட்டம் தொடர்ந்தால் வைத்தியசாலைப் பணிகள் முடங்கி விடும் ஆபத்து காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டிய ஆதார வைத்தியசாலை வைத்தியர்கள் சிலர் இது தொடர்பில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சு விரைவில் நடவடிக்கையெடுக்க வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளனர். (இ-4)

## பெண் பொலிஸின் மரணம் குறித்து புலன்விசாரணை நடத்த உத்தரவு

அச்சுவேலியில் பொலிஸ் பெண்ணொருவர் தீயில் எரிந்து உயிரிழந்த சம்பவம் குறித்து புலன் விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு அச்சுவேலி பொலிஸாருக்கு மல்லாகம் நீதமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

அச்சுவேலி வடக்கினைச் சேர்ந்த ஞானச்சந்திரன் பகிரதி (வயது- 26) என்ற பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கடந்த 11 ஆம் திகதியன்று தீயில் எரிந்த நிலையில் காயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இவரது மரணம் தற்கொலையல்ல கொலையென பெண்ணின் குடும்பஸ்தரால் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதன் பிரகாரம் மல்லாகம் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.

குறித்த வழக்கு விசாரணைகள் நேற்று முன்தினம் மல்லாகம் நீதிமன்ற நீதவான் திருமதி ஜீவராணி முன்னிலையில் எடுத்துக் கொள்ளப் பட்ட போதே நீதவான் குறித்த மரணம் தொடர்பில் புலன் விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

குறித்த வழக்கு மல்லாகம் நீதிமன்றில் நேற்று முன்தினம் எடுத்துச் கொள்ளப்பட்ட போது குறித்து பெண் பொலிஸின் மரண விசாரணையை மீள நடத்தவும் நீதவான் முடிவு செய்துள்ளார். (இ-4)

## நிரந்தர பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சித்தன்கேணியில் நியமிக்கப்படவில்லை

வலிகாமம் மேற்கு சித்தன்கேணிப் பகுதியில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் 3 மாத காலமாக நியமிக்கப்படவில்லை என அப்பகுதியில் உள்ள பொதுமக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன் விளைவாக குறித்த பகுதியில் கோழிப்பண்ணைக் கழிவுகள் நிரம்பிக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார பரிசோதகர் இன்மையால் இவ்வாறு கோழிப்பண்ணைக் கழிவுகள் நிரம்பிக் காணப்படுவதால் குறித்த பிரதேசத்தில் சுகாதார சீர்கேடு அதிகரித்துள்ளதாக பொதுமக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் இறைச்சிக்கு பயன்படுத்தப்பட்ட கோழி இறக்கைக் கழிவுகள் என்பன வீதியில் கொட்டப்பட்டு துர்நாற்றம் வீசுவதாக பொதுமக்களால் தெரிவிக்கப்படுகின்றது.

சுகாதார சீர்கேட்டினால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் இது தொடர்பாக வலிகாமம் மேற்கு பிரதேச சபையிடம் முறையிட்டுள்ளனர்.

இம்முறைப்பாட்டில் தமது பிரதேசத்தில் உள்ள கோழிப்பண்ணைக் கழிவுகள் அகற்றப்படவேண்டும் எனவும் சுகாதார பரிசோதகர் ஒருவரை விரைவில் நியமிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டதாக தெரியவருகிறது.

ஆனால் இதுவரைக்கும் பிரதேசசபையினால் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் இதனால் மக்கள் பலதரப்பட்ட சிரமங்களை எதிர்நோக்குவதுடன் தொற்று நோய்களுக்கும் உள்ளாகுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே இது தொடர்பாக வலிகாமம் மேற்கு பிரதேச சபை கவனத்தில் கொள்ளவேண்டும்.

அத்துடன் தமது பிரதேசத்திற்கு சுகாதார பரிசோதகர் ஒருவரை நியமிக்கும்படி வேண்டுகோள் ஒன்றினை வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்கு பொதுமக்கள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி எஸ். மோகனகுமாரை தொடர்புகொண்டு கேட்ட போது, சித்தன்கேணிப் பகுதிக்கென்று தனியான பொதுச் சுகாதார பரிசோதகர் நியமிக்கப் படவில்லை. ஆனால் கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் இவ்வாறான சுகாதார சீர்கேட்டுப் பிரச்சினைகள் காணப்பட்டதன் காரணமாக 3 மாதங்களுக்கு முன்னர் பதில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் நியமிக்கப்பட்டு கடமையாற்றி வருகின்றார். ஆனால் இது தொடர்பான முறைப்பாடுகள் எவையும் மக்களிடம் இருந்து இதுவரை எனக்கு கிடைக்கவில்லை. முறைப்பாடுகள் கிடைக்கும் பட்சத்தில் அதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை நிகழ்வு

(இருபாலை)

யாழ். நீர்வேலி சி.சி.தமிழ்க் கலவன் பாடசாலையின் சுந்தரமூர்த்தி நாயனார் குரு பூசை எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு பாடசாலை அதிபர் தி.ரவீந்திரநாதன் தலைமையில் பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது ஆசிரியை திருமதி கே.சிவாஜினியின் சிறப்புச் சொற்பொழிவு நடைபெறுவதுடன் கூட்டுப்பிரார்த்தனையும் தொடர்ந்து கலை நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (இ-5-136)



## கலந்துரையாடல்

யாழ்ப்பாண நகர திட்டமிடல் தொடர்பாக பங்காளி நிறுவனங்களுடனான கலந்துரையாடல் எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன் தலைமையில், நகர அபிவிருத்தி அதிகார சபையும் யாழ். மாவட்ட செயலகமும் இணைந்து நடத்தவுள்ள இக் கலந்துரையாடலில் நகர அபிவிருத்தி அதிகார சபை உயர் அதிகாரிகள், தந்திரோபாய நகர திட்டமிடலாளர்கள், வடமாகாண சபை உயர் அதிகாரிகள், திட்டமிடலாளர்கள் உட்பட பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இக் கலந்துரையாடலின் மூலம் யாழ்ப்பாண மாநகரத்திக்கு நீண்டகால தந்திரோபாய பாரிய திட்டங்கள் தயாரிக்கப்படவுள்ளன.

இத் திட்டத் தயாரிப்பின் மூலம் யாழ்ப்பாணத்தை மக்கள் வாழக்கூடிய தரமான நகரமாக மாற்ற முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-9)

## விளையாட்டுவிழா

எவர்சைன் கிட்ஸ் வேல்ட் இன் 10 ஆவது வருடாந்த விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது.

எவர்சைன் கிட்ஸ் வேல்ட் இயக்குநர் செ. ஜெயபாலசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட பீடாதிபதி பேராசிரியர் ச.ஸ்ரீசற்குணராஜா, அவரது பாரியாரும், யாழ். பல்கலைக்கழக மொழியியலும் ஆங்கிலமும் துறைத் தலைவருமான திருமதி. சி.ஸ்ரீசற்குணராஜா ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)



காங்கேசன்துறை யா/ நடேஸ்வராக் கல்லூரியின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்ற போது விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்கப்படுவதையும் பரிசில் பெற்ற மாணவ, மாணவிகள் நிகழ்வின் விருந்தினர்களுடன் நிற்பதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிமாலின் அலுவலகத்திலிருந்த ஜனாதிபதியின் படம் அகற்றம்

எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வாவின் அலுவலகத்தில் மாட்டப்பட்டிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் படம் திடீரென அகற்றப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவராக மைத்திரிபால சிறிசேனவே இருக்கும் நிலையில், கொழும்பு 7 இல் உள்ள எதிர்க்கட்சித் தலைவரின் செயலகத்தில் அவரது படம் மாட்டப்பட்டிருந்தது.

எனினும், நேற்று முன்தினம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர்கள் அங்கு செய்தியாளர் மாநாட்டை நடத்திய போது, மைத்திரிபால சிறிசேனவின் படம் அகற்றப்பட்டு, அங்கு வெற்றிலைச் சின்னத்துடன் கூடிய பதாகை ஒன்று பொருத்தப்பட்டிருந்தது.

மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக மைத்திரிபால சிறிசேன வெளியிட்ட கருத்துக்களை அடுத்து, அவரை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து நீக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

எனினும், கட்சியின் மத்திய செயற்குழுவைக் கூட்ட நீதிமன்றம் மூலம் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினதோ, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினதோ தலைவர் பதவியில் இருந்து மைத்திரிபால சிறிசேனவை நீக்குவதற்குத் தாம் திட்டமிடவில்லை என்று சுசில் பிரேமஜயந்த தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் படம் எதிர்க்கட்சித் தலைவரின் செயலகத்தில் இருந்து அகற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)




# மாகாணசபை முதலமைச்சர்களுக்கு விசேட பாதுகாப்பு எதுவும் இல்லை

## தேர்தல்கள் ஆணையாளர் அறிவிப்பு



(கொழும்பு)

**மாகாணசபை முதலமைச்சர்கள், அமைச்சர்கள், அவைத் தலைவர்களுக்கு விசேட பாதுகாப்பு எதுவும் வழங்கப்பட மாட்டாது எனவும் தற்போது அவர்களுக்குள்ள சிறப் புரிமைகள் மீளப்பெறப்படமாட்டாது எனவும் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.**

தேர்தலில் போட்டியிடும் முனனாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரினதும் பாதுகாப்பு நீக்கபட்டுள்ளது. இது அரசியலமைப்பின் பிரகாரம் எடுக்கப்பட்ட நடவடிக்கையாகும் என்று தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார்.

ராஜகிரியவிலுள்ள தேர்தல்கள் திணைக்களத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் மாநாட்டில் உரையாற்றும் போதே தேர்தல்கள் ஆணையாளர் இவ்வாறு தெரிவிததுள்ளார். இங்கு ஆணையாளர் மேலும் உரையாற்றுகையில், தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சி வேட்பாளர்கள் மக்கள் பேரணிகள், வாகனப் பேரணிகளை நடத்துவது தேர்தல் சட்டங்களை மீறும் செயலாகும்.

இவ்வாறான பேரணிகளை நடத்த சட்டத்தில் இடமில்லை. எனவே இவ்வாறு நடத்தப்படும் பேரணிகளை "சூட்" பண்ணுமாறு அதாவது புகைபடங்களை எடுக்குமாறும், நீதிமன்றங்களில் சமர்ப்பிக்குமாறும் பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இனி இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது பொலிஸாரின் கடப்பாடாகும்.

அதேவேளை பிரதமர், முன்னாள் சபாநாயகர்கள், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் அரசியலமைப்பு சபை உறுப்பினர்களான சம்பந்தன், ஜோன் செனவிரத்ன உட்பட அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்களுக்கான பாதுகாப்பு தொடர்ந்து வழஙகப்படும்.

அத்தோடு மாகாணசபை முதலமைச்சர்கள், அமைச்சர்கள், அவைத் தலைவர்களுக்கு விசேட பாதுகாப்பு எதுவும் வழங்கப்படமாட்டாது. ஆனால் தற் போது அவர்களுக்குள்ள சிறப்புரிமைகள் மீளப்பெறப்பட மாட்டாது. எதிர்காலத்தில் 19ஆவது திருத்தம் முழுமையாக அமுலுக்கு வந்த பின்னர் அந்நிலை மாறும்.

அதேவேளை தேர்தலில் போட்டியிடும் முன்னாள் எம்.பிக்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படமாட்டாது. அவையனைத்தும் மீளப்பெறபபட்டுள்ளது. அரசியலமைப்பின் பிரகாரமே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பாக தான் பொலிஸ்மா அதிபர், தேர்தலுக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபருடனும் பேச்சுவார்த்தைகள் நடத்திய பின்னரே தீர்மானம் எடுக்கப்பட்டது.

அதேவேளை எந்தவொரு வேட்பாளருக்கும் மரண அச்சுறுத்தல்கள் இருக்குமானால், ஏற்கனவே இவ்வாறான அச்சுறுத்தல் தொடர்பில் பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்குமானால் அதனை தொடரவும், பாதுகாப்பை பெற்றுக் கொள்வதற்கும் பொலிஸ் மா அதிபரிடம் விண்ணப்பிக்க வேணடும். அதன் பிரதி எனக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். அத்தோடு நாட்டில் பல இடங்களுக்கு சென்று பிரசாரங்களை மேற்கொள்ளும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள், செயலாளர்களுக்கு பாதுகாப்பு தேவையென்றால் அவர்களும் விண்ணப்பிக்க முடியும்.

உள்ளூர் கண்காணிப்புக் குழுக்களும் மக்களது கண்காணிப்பும் தேர்தல்கள் தொடர்பில் எமது நாட்டில் சிறப்பாகவுள்ளது. ஆனால் வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் தேவையென்ற தோற்றபபாடு நாட்டில் உள்ளது. இதற்கமைய ஐரோப்பிய ஒன்றியத்தின் 70 பேரடங்கிய கண்காணிப்புக் குழுவினர் இங்கு வருகின்றனர்.

சார்க் நாடுகளை சேர்ந்த 30 பேரடங்கிய கண்காணிப்புக் குழுவும் வருகிறது. அதேவேளை பொதுநலவாய நாடுகளின் அமைப்பின் கணகாணிப்பாளர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளோம். இத் தேர்தலில் பௌத்த குருமார் பலர் போட்டியிடுவதால் வாக்களிக்கும் நிலையங்களை விகாரைகளில் அமைப்பது தொடர்பாக நெருக்கடிகள் தோன்றியுள்ளன. எனவே 100-150இறகும் இடையிலான வாக்களிப்பு நிலையங்களை மாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந் நடவடிக்கைகள் இன்னும் முழுமை பெறவில்லை.

இம்முறை 10ஆயிரத்துக்கும் உட்பட்ட இடம்பெயர்ந்தவர்கள் தாம் வாழும் பிரதேசங்களில் வாக்களிப்பதற்கு விண்ணப்பித்துள்ளார்கள். வன்னியில் இடம்பெயர்ந்தவர்களே அதிகம் விண்ணப்பித்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் பெருமளவானோர் இல்லை. புத்தளம், அநுராதபுரம் பிரதேசங்களில் இவர்களுக்கான வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படும். தபால்மூலம் வாக்களி ப்பதற்காக 5 இலட்சத்து 25 ஆயிரம் பேர் விண்ணப்பித்துள்ளார்கள்.

அரச நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளது தொடர்பாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இவை தொடர்பாக விசாரணைகள் நடத்தப்படும்.

சுவரொட்டிகள் பாரிய கட்அவுட்களை அப்புறப்படுத்தும் நடவடிக்கைகள் பொலிஸாரின் உதவியோடு முன்னெடுககப்படுகின்றன. இதற்காக அரசாங்கமே பெரும்தொகை பணத்தை செலவிடுகின்றது. அடுத்த தேர்தலில் கட்அவுட் சுவரொட்டிகளை காட்சிப்படுத்தும் போது அதற்குரியவர்களே அவற்றை அப்புறப்படுத்த வேண்டும என்பதான சட்டத்தை நிறைவேற்றுமாறு கோருவோம். எனவே எதிர்காலத்தில் அரசுக்கு செலவிருக்காது.

வீடு வீடாகச் சென்று பிரசாரம் செய்யலாம், துண்டுப்பிரசுரம் வழங்கலாம். ஆனால் ஆதரவாளர்கள் கூட்டத்தோடு இதனை மேற்கொளவது சட்ட விரோதமாகும் என்றார்.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம்.மொஹமட்டும் கலந்து கொண்டார். (இ-7)

## வெள்ளை வான்களில் சுற்றுலாப் பயணிகள்

(கொழும்பு)

மகிந்தவின் ஆட்சியில் ஆட்கட த்தல்களுக்கு பயன்படுத்தப்பட்ட வெள்ளை வானகள் தற்போது சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச்செல்ல பயன்படுத்தப்படுவதாக பிரதமர் ரணில் விககிரமசிங்க தெரிவித்துள்ளார்.

புதிய நல்லாட்சியில் கிடைத்த நன்மை இதுவே என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார். புதிய ஆட்சி வந்ததன் பின்னர் எவரும் கடத்தப்படவில்லை என்று பிரதமர் தெரிவித்துள்ளார். கட்டானையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பிரசாரக்கூட்டத்தில் உரையாற்றிய ரணில் விக்கிரமசிங்க, வேட்பு மனுதாக்கலின் பின்னர் தமது அரசாங்கத்தில் வாகன பேரணிகள் நடத்தப்படவில்லை என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

முன்னைய ஆட்சியில் மக்கள் நான்கு வேளை சாப்பாட்டுக்கு கஷ்டப்பட்டனர். எனினும் ராஜபக் ஷவின் குடும்பத்தினர் மாத்திரம் நான்கு வேளையில் நிறைவான உணவை உண்டு வந்தனர்.

இதேவேளை பொதுத் தேர்தலுக்கான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு பட்டியலில் போதை வஸ்துக்காரர்களுக்கும் குற்றச்சாட்டுக்கு உள்ளானவர்களுக்குமே அதிகளவில் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக ரணில் தெரிவித்தார். (இ-7)

## 'கோப்' அறிக்கையை வெளியிடுவதற்கு நீதிமன்று இடைக்காலத் தடையுத்தரவு

(கொழும்பு)

மத்திய வங்கியின் முறிகள் விநியோகம் தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள 'கோப்' அறிக்கையினை அச்சிடுதல் மற்றும் விநியோகித்தலுக்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று முன்தினம் முதல் அமுலுக்கு வரும் வகையில் ஜூலை 23 ஆம் திகதி வரையில் இடைக்காலதடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

பிரதியமைச்சரும் சட்டத்தரணியுமான சுஜீவ சேனசிங்கவினால் நேற்று முன்தினம் தாக்கல் செய்யப்பட்ட மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்ப ட்ட போதே, நீதிமன்றம் மேற்படி இடைக்கால தடையுத்தரவை பிறப்பித்தது. பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ள நிலையில் மத்திய வங்கியின் முறிகள் விவகாரம் தொடர்பிலான 'கோப்' அறிக்கை கோப் தலைவரினால் பிரசுரிப் பதும் விநியோகிப்பதும் சட்டத்துக்கு முர ணானது என மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டிருந்தார். இதேவேளை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான டி. இ. டபிள்யூ. குணசேகர 'கோப்' தலைவருக்கான அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்திருப்பதாகவும், அவர் விரும் பினால் நீதிமன்றத்திற்கு நேரில்வந்து இவ்விடயம் குறித்து தனது கருத்துக் களை முன்வைக்க வேண்டுமென வும் சுஜீவ சேனசிங்க, இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டதை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார். மத்திய வங்கியின் முறிகளை அதன் ஆளுநரின் மருமகனுக்கு விநியோகிப்பது தொடர்பில் எவ்வித சட்டப் பிரச்சினைகளும் இல்லாத போதும் இது தர்மத்துடன் தொடர்புபட்ட பிரச்சினை யெனவும் அவர் சுட்டிக்காட்டினார். மேலும் எதிர்கால த்தில் ஸ்தாபிக்கப்படவுள்ள ஐ. தே. க. அரசாங்கம் இவ்விடயம் தொடர் பில் விரிவாக ஆராயுமெனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானின் தொடர் அத்துமீறல்களை இராணுவம் வேடிக்கை பார்க்க மாட்டாது

## இந்தியா கடும் எச்சரிக்கை

(டில்லி)

**பாகிஸ்தானின் அத்துமீறல்களையும், எல்லை தாண்டிய பயங்கரவாதத்தையும் இராணுவத்தினர் வேடிக்கை பார்க்கமாட்டார்கள் என்று இந்தியா எச்சரித்துள்ளது.**

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தின் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியில், இந்தியப் பகுதிகளில் கடந்த 2 நாட்களாக பாகிஸ்தான் இராணுவம் அத்துமீறி தாக்குதல்களை நடத்தியது. இதையடுத்து, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவால், வெளியுறவுத் துறைச் செயலர் ஜெய்சங்கர் ஆகியோர் பாகிஸ்தான் தூதர் அப்துல் பாசித்தை தொடர்பு கொண்டு எல்லைப் பகுதி நிலவரம் குறித்து விவாதித்து கண்டனம் தெரிவித்தனர்.



ஆனால் பாகிஸ்தான் மீது இந்திய இராணுவம தாக்குதல் நடத்தியதாக, இஸ்லாமாபாத்தில் உள்ள இந்தியத் தூதரை அழைத்து பாகிஸ்தான் அரசு கண்டனம் தெரிவித்தது.

இந்நிலையில் எல்லைப் பகுதி நிலவரம் குறித்து, டில்லியில் மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் தலைமையில் நேற்று முன்தினம் ஆலோசனைக் கூட்டம் நடந்தது.

அதில் வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ், பாதுகாப்புத் துறை அமைச்சர் மனோகர் பாரிக்கர், தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவால், வெளியுறவுத் துறைச் செயலர் ஜெய்சங்கர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்திற்கு பின்னர் வெளி யுறவுத் துறைச் செயலர் ஜெய்சங்கர் செய்தியாளர்களிடம் கூறும்போது, "எல்லைப் பகுதியில் அமைதியையும், சமாதானத்தையும் உறுதி செய்வ தற்கான நடவடிக்கைகளை மேற் கொள்வதில் இந்தியா உறுதியுடன் உள்ளது. அதேநேரத்தில், பாகிஸ் தான் தரப்பில் இருந்து அத்துமீறி துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டால், இந்திய இராணுவத்தினர் தக்க பதிலடி கொடுப்பார்கள்.

பாகிஸ்தானின் அத்துமீறல்களையும், எல்லை தாண்டிய பயங்கர வாதத்தையும் இந்திய இராணுவத்தினர் வேடிக்கை பார்க்கமாட்டார்கள். பாகிஸ்தான் அத்துமீறினால் நிலைமை மோசமாகும்.

அதனை முடிவு செய்வது, பாகிஸ்தானின் செயற்பாட்டைப் பொருத்தே. எல் லைப் பகுதியின் நிலவரம் குறித்து பாகிஸ்தான் தூதர் அப்துல் பாசித்தை அஜித் தோவால் கடந்த புதன் கி ழமை இரு முறை தொடர்பு கொண்டு விவாதித்தார். நேற்று முன்தினம் வியாழக் கிழமை ஒரு முறையும் அவர் பேசி இருக்கி றார், நானும் அவருடன் விவாதி த்தேன். ஆனால், இந்தியா அத்து மீறித் தாக்குதல் நடத்துவதாக பாகிஸ் தான் குற்றஞ்சாட்டியுள்ளது.

சர்வதேச விதிகளுக்குப் புறம்பாக, தங்கள் நாட்டுப் பகுதியில் இந்தியாவின் ஆளில்லா உளவு விமானம் பறந்ததாகவும், அதை சுட்டு வீழ்த்தி விட்டதாகவும் பாகிஸ்தான் கூறியுள்ளது.

சுட்டு வீழ்த்தியதாக காட் டப்பட்டுள்ள அந்த விமானம், இந்தியாவில் தயாரிக்கப்பட்டதல்ல. மேலும், இந்திய இராணுவத்தில் அதுபோன்ற உளவு விமானமே இல்லை. அந்த விமானம் சீனாவில் தயாரிக்கப்பட்டது போல தோன்றுகிறது" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## எயிட்ஸ் நோய்க்கு மருந்து; இந்திய வைத்தியர் கடிதம்

இந்திய வைத்தியர் ஒருவர் உலக சுகாதார அமைப்புக்கும் ஐக்கிய நாடுகள் எச்.ஐ.வி. எயிட்ஸ் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபை திட்ட அமைப்புக்கும் ஒரு கடிதம் எழுதியுள்ளார் அதில் எயிட்ஸ் நோய்க்கு மருந்து கண்டுபிடித்து இருப்பதாகவும் அதன் மூலம் 86 எயிட்ஸ் நோயாளிகளை குணப்படுத்தி இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

அசாம் மாநிலத்தை சேர்ந்தவர் தானிராம் பருவா இருதய அறுவை சிகிச்சை நிபுணர். இமயமலை பகுதியில் காணப்படும் ஒருவித மூலிகை தாவரத்தை கொண்டு எயிட்ஸ் நோயை குணப்படுத்த முடியும் என்று தெரிவித்து உள ளார். பிரித்தெடுக்கப்பட்ட அந்த தாவரத்தின் இரசாயன மூலக் கூறுகள் எயிட்ஸ் கிருமிகளுக்கு எதிராக போராடும் திறன் உண்டு எனத்தெரிவித்துள்ளார்.

பருவா கவுகாத்தியில் நடத்திய பத்திரிகையாளர்கள் சந்திப்பில் 86 எயிட்ஸ் நோயாளிகளுக்கு அவ்வித சிகிச்சை அளித்ததாகவும் அவர்களுக்கு எடுத்த சோதனையில் தற்போது எயிட்ஸ் கிருமிகள் இல்லை எனவும் தெரியவந்துள்ளதாக தெரிவித்துள்ளார். தனது ஆய்வை அங்கீகரிக்க கோரி உலக சுகாதார அமைப்புக்கும் ஐக்கிய நாடுகளின் எயிட்ஸ் கட்டுப்பாடு வாரியத்திற்கும் மற்றும் அமெரிக்காவின் தேசிய சுகாதார நிறுவனத்திற்கும் கடிதம் எழுதியுள்ளார்.

எனினும் இந்த வைத்தியர் இதுபோல் கூறுவது இது முதல் முறை இல்லை. 1997 ஆம் ஆண்டு அவர் 32 வயது ஆண் ஒருவருக்கு பன்றியின் இருதயத்தை வைத்து சத்திரசிகிச்சை செய்தார் என 40 நாட்கள் சிறையில் அடைக்கப்பட்டவர் ஆவார். அவ்வாறு இருதயத்தை மாற்றி சிகிச்சை பெற்றவர் 7 நாட்களே உயிருடன் வாழ்ந்தார் என்பது குறிப்பிடதக்கது. (இ-7)

## பிஹார் சட்டப்பேரவைத் தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்தது பா.ஜ.க.

பிஹார் சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் நேற்று முன்தினம் பிரசாரம் தொடங்கப்பட்டது.

பிஹார் சட்டப்பேரவைத் தேர்தல் எதிர்வரும் செப்டெம்பர் அல்லது ஒக்டோபரில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அங்கு இப்போதே தேர்தல் பிரசாரம் சூடு பிடிக்கத் தொடங்கிவிட்டது.

பா.ஜ.கவுக்கு எதிராக ஆளும் ஐக்கிய ஜனதா தளம் தலைமையில் ராஷ்ட்ரீய ஜனதா தளம், காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ் ஆகியவை ஓரணியில் திரண்டுள்ளன. பா.ஜ.க. கூட்டணியில் லோக் ஜனசக்தி, முன்னாள் முதல்வர் ஜிதன்ராம் மாஞ்சி ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இரு அணிகளும் இப்



போதே தேர்தல் பிரசாரத்தை தீவிரப்படுத்தியுள்ளன. பிஹார் முதல்வர் நிதிஷ் குமார், 'ஹர்கர் தஸ்தக்' என்ற பிரசாரத்தை அண்மையில் தொடங்கினார்.

இந்நிலையில் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி நேற்று முன்தினம் தனது பிரசாரத்தை தொடங்கியது. இதையொட்டி பிஹார் தலைநகர் பாட்னாவில் நேற்று முன்தினம் பிரமாண்ட பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் பா.ஜ.க. தேசிய தலைவர் அமித் ஷா, பா.ஜ.க. மூத்த தலைவர சுஷில் குமார் மோடி, லோக் ஜன சக்தி தலைவரும் மத்திய அமைச்சருமான ராம் விலாஸ் பாஸ்வான், முன்னாள் முதல்வர் ஜிதன் ராம் மாஞ்சி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (இ-7)

## முன்கூட்டியே நிலநடுக்கங்களை கண்டுபிடிக்க செயற்கைக்கோள்

### இந்தியா முடிவு!

(டில்லி)

பெரும் சேதங்களை விளைவிக்கும் இயற்கை ஆபத்தான நிலநடுக்கங்களை முன்கூட்டியே கண்காணிக்கும் வகையில், செயற்கைக் கோள் ஒன்றினை விண்ணில் ஏவிட இந்தியா முடிவு செய்துள்ளதாக புவி அறிவியல் அமைச்சகத்தின் செயலர் தெரிவித்துள்ளார்.

இந்தியா மட்டுமல்லாமல் உலகின் வெவ்வேறு பகுதிகளில் உண்டாகும் பூகம்பங்களை முன் கூட்டியே கண்டுபிடிக்கும் இலட்சிய திட்டத் துக்காக, 27 நாடுகளின் புவியியல் மற்றும் பௌதீக அறிவியலாளர்கள், நிலநடுக்க ஆய்வாளர்கள் ஆகியோருடன் இந்தியாவும் இணைந்து பணியாற்றி வருகிறது.

பூகம்பம் ஏற்படுவதற்கு சில விநாடிகளுக்கு முன்பாக அதனை கணித்து, எச்சரிக்க முடியும் என்று விஞ்ஞானிகள் மத்தியில் நம்பிக்கை நிலவுகிறது. அதனால், நிலநடுக்கங்கள் ஏற்படுவதற்கு முன்னதாக பூமி யின் மேற்பரப்பில் ஏற்படும் மாற்றங்களை கண்டுபிடிக்க செயற்கைக்கோள் ஒன்றையும் விண்ணில் செலுத்த இந்தியா திட்டமிட்டு வருகிறது.

இதுபற்றி புவி அறிவியல் அமைச்சகத்தின் செயலர் ஷைலேஷ் நாயக் கூறும்போது, "இந்த முயற்சி வெற்றி அடைந்து, பூகம்ப கணிப்பு மாதிரி ஒன்று உருவாக்கப்பட்டு விட்டால், பூகம்பங்களினால் ஏற்படும் மனித உயிரிழப்பை ஓரளவுக்கு தடுத்து விடமுடியும்.

நிலநடுக்கங்கள் ஏற்படுவதற்கு முன்பாக பூமியின் அடியில் சில இரசாயன மாற்றங்கள் ஏற்படுகின்றன.

பூமியின் மேற்பரப்பில் சில பௌதீக இடமாற்றங்கள் ஏற்படுகின்றன. இதனை சரியாக [illegible] ணர்ந்து ஆய்வு செய்து மாதிரி ஒன்றை உருவாக்கினால், பூகம்பங்கள் வருவதற்கு சிறிது நேரம் முன்னால் கணிப்பது சாத்தியமாகும்.

இதற்காக நாம் 2019 ஆம் ஆண்டு வாக்கில் செயற்கைக் கோள் ஒன்றை செலுத்த முடிவு செய்துள் ளோம். மேலும் வரும் காலங்களில் நிலநடுக்கம் அதிகம் ஏற்படும் இடங்களில் ஆழ்துளை கிணறுகளில் உணர்திறன் அமைப்புகள வைக்கப்படவுள்ளன. இதன் மூலம் இரசாயன மாற்றங்கள், பௌதீக மாற்றங்கள் கணிக்கப்படும்" என அவர் தெரிவித்துள்ளார்.

மகாராஷ்டிரா மாநிலம் கொய்னா நதிப்பள்ளத்தாக்கில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தியாவின் 22 மாநிலங்கள் பல்வேறு அளவுகள் கொண்ட நில நடுக்கங்கள் ஏற்படும் அபாயம் கொண்டுள்ளன. இதனால் கட்டடங்கள் கட்டுமானத்தில் பல புதிய விதி முறைகள் [illegible] என்று தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

## பாரதச் செய்தி

## நாகலாந்தில் துப்பாக்கிச் சண்டையில் ஏழு தீவிரவாதிகள் சுட்டுப்படுகொலை!

(ஹோகிமா)

நாகலாந்து மாநிலத்தில் பெக் மாவ ட்டத்தில் தடை செய்யப்பட்ட நாகலாந்து தேசிய சோசலிஸ்ட் கவுன்சில் அமைப்பைச் சேர்ந்த தீவிரவாதிகள் செயற்பட்டு வருகிறார்கள்.

அவர்களை வேட்டையாடும் பணியில் இராணுவத்தின்கமாண்டோ படை வீரர்கள் ஈடுபடுத்தப்பட்டுள் ளனர். இவான்கு பகுதியில் தீவிர வாதிகள் நடமாட்டம் இருப்பதாக கிடைத்த தகவலைத் தொடர்ந்து கமாண்டோ வீரர்கள் அங்கு சென்று சுற்றி வளைத்தனர்.

உடனே தீவிரவாதிகள் துப்பாக்கியால் சுட்டனர். கமாண்டோ படை வீரர்களும் திருப்பிச்சுட்டனர். இரு தரப்புக்கும் இடையே ஒரு மணி நேரத் துக்கும் மேலாக துப்பாக்கிச் சண்டை நீடித்தது. இதில் 7 தீவிர வாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். மேலும் பொதுமக்கள் 2 பேரும் பலியானார்கள். இராணுவ தரப்பில் அதிகாரி ஒருவருக்கு காலில் குண்டு காயம் ஏற்பட்டது. தீவிரவாதிகள் கொல் லப்பட்ட இடத்தில் இருந்து ஏ.கே. 47 ரக துப்பாக்கிகள் மற்றும் ஏராளமான வெடிபொருட்கள் கைப் பற்றப்பட்டன.


கடந்த மாதம் மணிப்பூரில் இராணுவ வீரர்கள் 18 பேர் தீவிர வாதிகள் தாக்குதலில் பலியானார்கள். இதை யடுத்து மணிப்பூர், நாகலாந்து மாநி லங்களில் தீவிர வாதிகளை இராணுவம் வேட்டையாடி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக மியன்மாரில் செயற்பட்ட தீவிரவாதிகள் முகாம்கள் மீது இராணுவம் தாக் குதல் நடத்தி 50 தீவிரவாதிகளை சுட்டுக் கொன்றது. தற்போது நாகலா ந்தில் 7 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர் குண்டுத் தாக்குதலால் நைஜீரியாவில் 50பேர் மரணம்

**வடகிழக்கு நைஜீரியாவில் அடுத்தடுத்து நிகழ்ந்த குண்டு வெடிப்பு தாக்குதல்களில் நேற்று முன்தினம் மட்டும் 50 இற்கும் அதிகமானோர் பலியாகியுள்ளனர்.**



கானோ மாவட்டத்தின் தலைநகரான கானோ நகரின் மையப்பகுதியில் உள்ள கடைத்தெருவில் ரமழான் பண்டிகையை முன்னிட்டு துணி மற்றும் வீட்டுக்கு தேவையான இதரப் பொருட்களை வாங்க ஏராளமான மக்கள் திரண்டிருந்தனர்.

அப்போது, அங்குள்ள பிரபல செருப்புக்கடை வாசலில் சக்திவாய்ந்த குண்டு வெடித்ததால் பலர் உடல் சிதறி உயிரிழந்தனர். காயங்களுடன் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த மேலும் பலரை காப்பாற்றுவதற்காக சிலர் விரைந்தோடி வந்தனர்.

சம்பவ இடத்துக்கு மிக அருகாமையில் அடுத்தும் ஒரு குண்டு பயங்கரமாக வெடித்தது. இதனால், அந்த இடமே போர்க்களம்போல் காட்சியளித்தது. சாலை நெடுகிலும் மனித உடல்கள் கிழிந்து, சின்னாபின்னமாகி சிதறி கிடந்தன.

தகவல் அறிந்து விரைந்து வந்த பொலிஸாரும், அம்புலன்ஸ் ஊழியர்களும் காயமடைந்தவர்களை வைத்தியசாலைகளுக்கு ஏற்றிச் சென்றனர். இச்சம்பவத்தில் ஐம்பதுக்கும் அதிகமானோர் உயிரிழந்ததாகவும், நூற்றுக்கணக்கானவர்கள் படுகாயங்களுடன் கானோ நகரில் உள்ள பல்வேறு வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருவதாகவும் உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சிகிச்சை பெற்று வருபவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

இஸ்லாமியர்களும், கிறிஸ்தவர்களும் சம விகிதத்தில் வாழும் நைஜீரியாவில் இஸ்லாமிய சட்ட திட்டங்களுக்கு உட் பட்ட ஆட்சியை அமைக்க வேண்டும் என கடந்த 2009 ஆம் ஆண்டில் இரு ந்து தீவிரவாதத்தை ஆயு தமாக கையில் ஏந்தி போகோ ஹறாம் என்ற அமைப்பு போராட்டத்தில் குதித்துள்ளது. இந்த போகோ ஹறாம் தீவிரவாதிகளின் கொலை வெறி தாக்குதல் களுக்கு சுமார் 15 ஆயிரம் அப்பாவி பொது மக்கள் பலியாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)




## சோமாலிய ராணுவத்தாக்குதலில் முப்பது தீவிரவாதிகள் உயிரிழப்பு!


சோமாலியாவின் தெற்கு பகுதியில் கென்யா எல்லையில் அல்-ஷபாப் தீவிரவாதிகள் முகாம்கள் அமைத்துள்ளனர். அல்-கொய்தா தீவிரவாத அமைப்பின் ஒருபிரிவான இவர்கள் கென்யாவிலும், சோமாலியாவிலும் தாக்குதல் நடத்தி பொதுமக்களை கொன்று குவித்து வருகின்றனர்.

எனவே சோமாலியா மற்றும் கென்யா இராணுவ வீரர்கள் இணைந்து கொல்பியோ என்ற இடத்தில் உள்ள அல் - ஷபாப் தீவிரவாதிகளின் மறைவிடங்கள் மற்றும் முகாம்கள் மீது அதிரடி தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதலில் 30 தீவிரவாதிகள் பலியாகினர். 7 ஏ.கே.47 ரக துப்பாக்கிகள் பறிமுதல் செய்யப்பட்டன. பல மறைவிடங்களும், பயிற்சி முகாம்களும், அழிக் கப்பட்டன. இந்த தகவலை கென்யா இராணுவ செய்தி தொடர்பாளர் மேஜர் இம்மானுவேல் சிர்சிர் தெரிவித்துள்ளார்.

கடந்த செப்டெம்பர் 21 ஆம் திகதி கென்பியா தலைநகர் நைரோபியில் வர்த்தக மையத்தில் அல் ஷபாப் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதிலும் பலர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சிறையில் ஒபாமா!



அமெரிக்க வரலாற்றிலேயே முதன்முறையாக ஜனாதிபதி ஒபாமா நேற்று சிறை சென்றுள்ளார்.

உலக சிறை கைதிகளில் நான்கில் ஒரு பகுதியினர் அமெரிக்காவில் உள்ள சிறைகளுக்குள் அடைபட்டிருக்கும் நிலையில் சிறை கைதிகளின் அடிப்படை வசதி உள்ளிட்ட அம்சங்களை ஆய்வு செய்து, சீர்திருத்தம் செய்யும் நோக்கில் ஒக்லாஹாமா சிறைச்சாலைக்கு ஜனாதிபதி ஒபாமா நேற்று திடீர் விஜயம் செய்தார்.

எல் ரெனோ சிறைக்கு அதிகாரிகள் புடைசூழ வந்த ஒபாமா, 'பி' பிரிவு கட்டடங்களை சுற்றிப் பார்த்தார். போதைப் பொருள் கடத்தல் வழக்கில் கைதாகி அங்கு அடைக்கப்பட்டிருக்கும் கைதிகளை அவர் சந்தித்து பேசினார்.

பின்னர் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த அவர், குற்றங்களை கட்டுப்படுத்தவும், குற்றம் செய்பவர்களை சீர்திருத்தவும் சிறைச்சாலைகள் தான் சிறந்த தீர்வா? என்பதைப் பற்றி நாம் யோசிக்க வேண்டியுள்ளது.

வன்முறையற்ற சாதாரண குற்றங்களுக்கும் 20 ஆண்டு, 30 ஆண்டு மற்றும் ஆயுள் சிறை தண்டனை அளிப்பதன் மூலம் இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு விட இயலுமா? என்பது தொடர்பாகவும் நாம் சீராய்வு செய்ய வேண்டியுள்ளது என்று தெரிவித்தார்.

கைதிகளுடன்பேசிய அனுபவம் தொடர்பாக குறிப்பிட்ட ஒபாமா, இவர்களில் நிறைய பேர் இளைஞர்களாக உள்ளனர். ஏனைய நாடுகளில் இவ்வளவு இளம் குற்றவாளிகள் கைதிகளாக இல்லை. முட்டாள்தனமான காரியங்களை செய்து விட்டு, இங்கு குற்றவாளிகளாக இவர்கள் தண்டனை அனுபவித்து வருகிறார்கள். இவர்கள் செய்தசில முட்டாள்தனங்களை நானும், நீங்களும் (பத்திரிகையாளர்கள்) செய்ததுண்டு.

இந்த ஆண்டுக்குள் அர்த்தமுள்ள சிறை சீர்திருத்த சட்டத்தை கொண்டுவர தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார்.

அமெரிக்க ஜனாதிபதியாக தனது பதவி காலத்தில் முதன்முறையாக சிறைச்சாலைக்கு சென்று பார்வையிட்டவர் ஒபாமாதான் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இராணுவ அலுவலகங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 4 கடற்படை வீரர்கள் உயிரிழப்பு


(வோஷிங்டன்)

அமெரிக்காவில் இராணுவ அலுவலகங்கள் மீது நேற்று முன்தினம் நடத்தப்பட்ட துப்பாக்கி சூட்டுத் தாக்குதலில் 4 கடற்படை வீரர்கள் கொல்லப்பட்டனர்.

பாதுகாப்பு படையினர் நடத்திய பதில் தாக்குதலில் துப்பாக்கி சூடு நடத்தியவரும் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அமெரிக்காவின் டென்னசி மாகாணத்தில் உள்ள சாத்தநூகாவில் உள்ள இராணுவ அலுவலகம் மற்றும் கடற்படை மையம் மீது தாக்குதல் நடத்தப்பட்டு உள்ளது.

மர்மநபர் முதலில் அப்பகுதியில் உள்ள இராணுவத்திற்கு ஆள்சேர்க்கும் முகாமிலும், இரண்டாவது கடற்படை மையம் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளார். இராணுவத்திற்கு ஆள்சேர்க்கும் மையத்தில் இருந்து, 10 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கடற்படை மையத்திற்கு சென்று மர்மநபர் நடத்திய சரமாரியான துப்பாக்கி சூட்டில் 4 கடற்படை வீரர்கள் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



உடனடியாக மர்மநபரை சுற்றிவளைத்த பாதுகாப்பு படையினர் தாக்குதல் நடத்தினர். பாதுகாப்பு படையினர் நடத்திய தாக்குதலில் தாக்குதல் நடத்தியவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

இச்சம்பவம் அமெரிக்காவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. காயம் அடைந்தவர்கள் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். வைத்தியசாலையில் அவர்களுக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

துப்பாக்கி சூடு நடத்திய நபர் மத்திய கிழக்கு நாடுகளில் பிறந்தவர் என்றும், அவருடைய பெயர் முகமது யூசுப் (வயது-24) என்று அமெரிக்காவின் புலனாய்வு பிரிவு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறு செய்ததைப் பற்றி கவலைப்பட வேண்டாம். இரண்டாவது தடவையும் அதே தவறை செய்யா திருத்தல் பற்றியே கவலைப்பட வேண்டும். –ஆலன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## குருநாகலில் சிவாஜிலிங்கம் வெற்றி; மகிந்த ராஜபக்ஷ படுதோல்வி

எதிலும் ஒரு வித்தியாசம் தேவை என்று நினைப்பவர்கள் இருக்கவே செய்கின்றனர். அதிலும் அரசியலில் இத்தகையவர்கள் தங்கள் வாழ்வுக்குப் பின்னரும் பேசப்படுகின்றனர்.

இந்த நாட்டின் பிரதமராக இருந்த தகநாயக்க அவர்கள் ஒரு முறை பாராளுமன்றத்திற்கு கோவணத்துடன் சென்றார். பாராளுமன்றத்தில் ஒரே பரபரப்பு. வரவுசெலவுத் திட்டத்தில் சீத்தைத்துணியின் விலை உயர்த்தப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் அப்படி ஒரு முடிவை தகநாயக்க செய்தார்.

அடங்காத் தமிழன் சுந்தரலிங்கம் பாராளுமன்றத்தில் சுவப்பாடு போட்டபோது அவரை வெளியேறுமாறு சபாநாயகர் உத்தரவிட்டார். எனினும் அதனை அடங்காத் தமிழன் சுந்தரலிங்கம் பொருட்படுத்தவில்லை. சபாநாயகரின் உத்தரவை நிறைவேற்ற பாராளுமன்ற சேவகர்கள் சுந்தரலிங்கத்தை அவர் இருந்த கதிரையோடு தூக்கிச் சென்று வெளியில் வைத்தனர்.

எனினும் சுந்தரலிங்கத்தின் திமிறல் தணியவில்லை. சில நிமிடங்கள் கழிந்த பின் மீண்டும் பாராளுமன்றத்திற்குள் வருமாறு சுந்தரலிங்கத்தை சபாநாயகர் அழைத்தார். சுந்தரலிங்கம் விடவில்லை. நானா வெளியில் வந்தேன். என்னைத் தூக்கிக் கொண்டு வந்தது போல தூக்கிச் சென்று உள்ளே இருத்துங்கள் என்றார். என்னசெய்வது! மீளவும் கதிரையோடு சுந்தரலிங்கத்தை தூக்கிச் சென்று பாராளுமன்றத்தில் இருத்தினர்.

அண்மைக்காலத்தில் அமைச்சராக இருந்த மேர்வின் சில்வா அரச உத்தியோகத்தர் ஒருவரை மரத்தில் கட்டி வைத்தார். இதுபோல வடமேல் மாகாண சபை உறுப்பினர் ஒருவர் ஆசிரியை ஒருவரை முழந்தாளில் இருக்கவைத்து தண்டனை கொடுத்தார்.

இதுபோல ஏகப்பட்ட சம்பவங்கள் உலகம் முழுவதிலும் உண்டு. இந்த வித்தியாசங்களில் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கமும் ஒருவர். வடக்கு மாகாண சபையின் செங்கோலைத் தூக்கி எறிந்து அதனை உடைத்து வடக்கு மாகாணத்தில் செங்கோலை உடைத்த முதல் மாகாண சபை உறுப்பினர் என்ற பெயரை தனதாக்கிக் கொண்டார். இப்போது பாராளுமன்றப் பொதுத் தேர்தல்-2015இல் சிவாஜிலிங்கம் குருநாகல் மாவட்டத்தில் வேட்பாளராகக் களமிறங்கியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, குருநாகலில் போட்டியிடுவதால் அவரைத் தோற்கடிப்பதற்காகவே குருநாகலில் தான் போட்டியிடுவதாகவும் சிவாஜிலிங்கம் அறிவித்துள்ளார். வித்தியாசம் என்பதில் இதுவே முதற்தரமானது.

குருநாகலில் தான் போட்டியிடுவதன் மூலம், **குருநாகலில் சிவாஜிலிங்கம் அமோக வெற்றி; முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ படுதோல்வி** என்ற தேர்தல் முடிவை சிவாஜிலிங்கம் எதிர்பார்க்கிறார் போலும்.

ஐயா! வேண்டாம் ஐயா! குருநாகலுக்குச் சென்று மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக நீங்கள் (சிவாஜிலிங்கம்) போட்டியிட்டால், அது வேறுவிதமாகப் பொருள்படும். அதாவது ஒரு தமிழன் இந்த நாட்டில் எங்கும் தேர்தலில் போட்டியிட முடியும். அந்தளவிற்கு சுதந்திரம், உரிமை, ஜனநாயகம் இலங்கையில் உச்சமாகியுள்ளது என்பது ஒரு அர்த்தம்.

மற்றையது மகிந்தவை எதிர்த்து சிவாஜிலிங்கம் போட்டியிடும் அளவில் ஜனாதிபதி மைத்திரி நாட்டை பழுதாக்கிவிட்டார் என்ற பிரசாரத்தின் ஊடாக அதிகளவு வாக்குகளை மகிந்த பெறுவார். சிவாஜிலிங்கத்துக்கு எதிரான மகிந்தவின் பிரசாரத்தால் பயம் கொண்ட; குருநாகலில் வாழும் தமிழ் மக்கள் தங்கள் வாக்குகள் முழுவதையும் மகிந்தவுக்கு அளித்து தங்கள் பாதுகாப்பை உறுதி செய்வர். என்ன செய்வது மகிந்தவை வீழ்த்தப் போய் அவரைத் தூக்கி விட்டதாக நிலைமை மாறும்.

ஏதோ! வித்தியாசம் என்று ஆறுதல் அடைவதைத் தவிர, இதுவிடயத்தில் வேறு என்னதான் நாம் செய்ய முடியும்.

# அனைத்து வேட்பாளர்களும் சமமாக நடத்தப்பட வேண்டும்

## தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

பாராளுமன்ற தேர்தலுக்காக 6 ஆயிரத்து 151 வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிட முன்வந்துள்ளனர். அவர்களை வரையும் ஒரே மாதிரி கவனிப்பது தேர்தல்கள் செயலகத்தின் கடமையாகும் என தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

தேர்தல்கள் செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே தேர்தல்கள் ஆணையாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தற்போது வேட்பாளர்களாகவுள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு மீளப்பெறப்பட்டுள்ளது என்ற ஒரு குற்றச்சாட்டு தற்போது நிலவி வருகிறது. அது தனிப்பட்ட கட்சிகளை கருத்திற் கொண்டோ அல்லது பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர்களையோ தற்போதைய உறுப்பினர்களையோ கருத்திற் கொண்டு செய்யப்பட்டதில்லை. இது ஜூன் மாதம் 30ஆம் திகதி தேர்தல் ஆணையாளரான நானும் பொலிஸ்மா அதிபரும் நீண்ட கலந்துரையாடலில் ஈடுபட்ட பின்னர் எடுக்கப்பட்ட முடிவாகும். இதன்படி பதவி இல்லாதவர்கள் பாதுகாப்பினை பெற்றுக் கொள்ள முடியாது.

இதன்படி ஜூலை மாதம் 02 ஆம் திகதி அனைத்து கட்சியின் செயலாளர்களுக்கும் தகவல் அறிவிக்கப்பட்டது. இது தொடர்பில் அவர்கள் அச்சமயத்தில் எதிர்ப்பினை வெளியிடவில்லை. இது தொடர்பில்என்னையோ பொலிஸ்மா அதிபரையோ குற்றஞ்சாட்ட முடியாது. யாராவது ஒரு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருக்கோ தற்போதய பாராளுமன்ற உறுப்பினருக்கோ தங்களுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் என குறித்து முறையிட்டால் சட்டம் மற்றும் சமாதானம் தொடர்பான அமைச்சின் செயலாளருக்கும் எனக்கும் கடிதம் அனுப்பி அதன் பிரதிகள் கிடைக்கப் பெற்ற பின்னர் புலனாய்வுத் துறையும் அவர்களுக்குரிய அச்சுறுத்தலை உறுதிப்படுத்தினால் அவர்களுக்கான பாதுகாப்பு வழங்கப்படும்.

பிரதான அரசியல் கட்சிகள், சிறு கட்சிகள் என்று எவ்வித வேறுபாடும் இல்லை. கட்சியின் தலைவர்கள் செயலாளர்கள் இது குறித்து சொன்னால் ஆராய்ந்து பார்க்கப்படும். தற்போதைய ஜனாதிபதி, முன்னாள் ஜனாதிபதி ஆகியோருக்கான பாதுகாப்பானது அவர்கள் வெவ்வேறு அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள் என்பதற்காக அவர்களுக்குரிய பாதுகாப்பு எக்காரணம் கொண்டும் குறைக்கப்பட மாட்டாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-11)

## இனவாதக் கட்சிகளை தடை செய்ய வேண்டும்

### சுமங்கல தேரர் தெரிவிப்பு

இனவாத அரசியல் கட்சிகள் தடை செய்யப்பட வேண்டுமென ரன்கிரி தம்புளு பீடாதிபதி இனாமலுவே சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், தேரரை சந்தித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். சில இனவாத அரசியல் கட்சிகள் நாட்டில் இனவாதத்தை தூண்டி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். அரசியல் கட்சிகள் அனைத்து மதத்தவரையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டுமென தெரிவித்துள்ளார்.

தேசிய நல்லிணக்கம் பற்றி பேசப்படுவதாகவும் அது பாராளுமன்றிலிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். இனவாத அரசியல் கட்சிகளை தடை செய்யாது தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் பிரதான அரசியல் கட்சிகள் பல்வேறு இன மற்றும் மத சமூகத்தவரை உள்ளடக்கியதாகக் காணப்பட்டதாகவும் தற்போது சில அரசியல் கட்சிகள் இனத்துவ மதத்துவ அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இவ்வாறான கட்சிகள் நாட்டின் நல்லிணக்கத்தையும் அபிவிருத்தியையும் பாதிக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## நோயாளர்களுக்கான வாராந்த சிகிச்சை

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் தொற்றா நோய்களுக்கான வாராந்த சிகிச்சை பிரதி சனிக்கிழமைகளில் காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணிவரை நடைபெற்று வருகின்றது. தொற்றா நோய்களின் தாக்கம் நடுத்தர வயதினரிடையே அதிகரித்து வருவது அண்மைக்காலங்களில் அவதானிக்கப்பட்டுள்ளது.

எனவே அரசாங்க ஊழியர்கள் உட்பட அனைத்து பொதுமக்களும் இச்சிகிச்சை நிலையத்தில் தங்களை பரிசோதித்து பயன் பெறுமாறு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் வி.ஜெயராஜா அறிவித்துள்ளார். (இ-3)

## அருள் ஒளி வெளியீடு

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தினால் வெளியிடப்படும் மாதாந்த ஆன்மீக மலரான அருள் ஒளி வெளிவந்துள்ளது.

வைகாசி மாதத்திற்குரிய மாதாந்த இதழ் தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்க பொன்விழா குறித்த சிறப்பு மலராக வெளிவந்துள்ளது.

உள்ளூர் சந்தாவாக 1000 ரூபாயும் வெளிநாடுகளுக்கு 2500 ரூபாயும் செலுத்தி சந்தா தாரராக இணைந்து கொள்ள முடியும் என மலரின் நிர்வாக சபைத் தலைவர் ஆறு திருமுருகன் அறிவித்துள்ளார். (இ-3)


## நூல்வெளியீட்டு விழா

இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதனின் பதிவும் பகிர்வும் நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். இராமநாதன் கல்லூரியின் அருணாசலம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான தலைவர் ஆறுதிருமுருகன் தலைமையில் நடைபெறும் இந்நூல் வெளியீட்டில் யாழ்.அரச அதிபர் நா.வேதநாயகன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

வெளியீட்டுரையை பேராசிரியர் வி.பி.சிவநாதன் நிகழ்த்துவார் கருத்துரைகளை பிஷப் சௌந்தரம் ஊடகக் கற்கை மையப் பணிப்பாளர் அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை, கிழக்குப் பல்கலைக் கழகப் பேராசிரியர் செ.யோகராசா ஆகியோர் வழங்கவுள்ளனர். (இ-3)

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



முழுச் சுயநலத்துடனேயே நீங்கள் மக்களுக்கு உதவி செய்து சத்கர்மா சம்பாதிக்கலாம். நீங்கள் புண்ணியம் சம்பாதிக்கத்தான் மற்றவர்களுக்கு உதவி செய்கிறீர்கள் என்று தெளிவாக உணர்ந்தே செய்யலாம். சுயநலமற்றவராக இருக்க வேண்டியது இல்லை.

ஒருவேளை உங்கள் கண்பார்வை மிகவும் மோசமாக இருந்தால் ஒரு கண் வைத்தியசாலைக்குச் சென்று தேவையுள்ளவர்களுக்கு மருத்துவச் செலவிற்கு பணம் கொடுக்கலாம் அல்லது அங்கே ஏதேனும் சேவை செய்யலாம்.

உங்கள் கண்பார்வை சீராகவேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் இதைச் செய்தால் உங்கள் கண்பார்வையில் முன்னேற்றம் தெரியும். இவ்விதமாகத் தான் கர்மா வேலை செய்கிறது. நான் என்ற உணர்ச்சி உள்ளவரை சுயநலமான முறையில்தான் உங்களால் நடந்து கொள்ளமுடியும்.

தயவுசெய்து சரியாகப் புரிந்துகொள்ளுங்கள். நாங்கள் உங்களை சுயநலத்திலிருந்து விடுதலை அடையும்படி கூறவில்லை. சுயநலம் உள்ளது என்பதைப் பற்றி விழிப்புணர்வோடு இருக்கும்படி மட்டுமே கூறுகிறோம். அகத்திலிருந்து விடுதலை அளிக்கவேண்டியது என் வேலை. உங்களால் அதைச் செய்ய முடியாது.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்



நம்மை ஆரோக்கியமாக வைத்திருக்க மிகவும் எளிய வழி பிறரது ஆரோக்கியத்தைக் கவனித்துக்கொள்வமே நாம் மகிழ்ச்சியாக இருப்பதற்கு மிக எளிய வழி பிறரை மகிழ்ச்சியுறச் செய்வதே.

ஆசை இருக்கும் வரை உண்மையான இன்பம் வரமுடியாது.

ஒரு இலட்சியத்தை எடுத்துக்கொள்ளுங்கள். அதையே உங்கள் வாழ்க்கையாகக் கொள்ளுங்கள். அதையே நினையுங்கள், அதையே கனவு காணுங்கள், அந்த இலட்சியத்திற்காகவே வாழுங்கள். மூளை, தசைகள், நரம்புகள் என்று உங்கள் உடலின் ஒவ்வொரு பகுதியும் அந்த இலட்சியத்தால் நிறையட்டும். பிற கருத்துக்கள் அனைத்தையும் அடியோடு விட்டுவிடுங்கள். வெற்றிக்குவழி இதுவே.


இந்த உலகில் முன்னேற்றம் என்ற ஒன்று இருக்க முடியுமானால் அது போட்டியால் வரமுடியாது. மனதைக் கட்டுப்படுத்துவதாலேயே முடியும்.

எவ்வாறு தட்ட வேண்டும், தேவையான உந்துதலை எப்படி அளிக்க வேண்டும் என்பது மட்டும் நமக்குத் தெரியுமானால் உலகம் தனது இரகசியங்களை அளிக்கத் தயாராக இருக்கிறது. அதற்கான வலிமையும் வேகமும் ஒருமைப்பாட்டின் மூலமே கிடைக்கிறது.

மந்திரங்கள் எனப்படும் சில புனிதமான சொற்கள் உள்ளன. குறிப்பிட்ட விதிகளைப் பின்பற்றி அவற்றை ஜெபித்தால் அசாதாரண ஆற்றல்களைக் கொடுக்க வல்லவை அவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணக் கல்லூரியை வீழ்த்தியது கிளிநொச்சி மகா வித்தியாலய அணி



பரபரப்பான துடுப்பாட்டப் போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரியை ஒரு ஓட்டத்தால் வெற்றிபெற்றது கிளிநொச்சி மகா வித்தியாலய அணி.

அகில இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தால் நடத்தப்பட்டு வரும் 17 அகவைப் பிரிவினருக்கிடையிலான 50 பந்துப் பரிமாற்றங்களைக்கொண்ட இப்போட்டி கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி மகா வித்தியாலய அணி 27.4 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 105 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

துடுப்பாட்டத்தில் கிளிநொச்சி மகா வித்தியாலய அணி 27.4 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 105 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

துடுப்பாட்டத்தில் கிளிநொச்சி மகா வித்தியாலய அணித்தலைவர் கஜீபன் 23 ஓட்டங்களையும் டிலக்சன் 15 ஓட்டங்களையும் அதிகமாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் யாழ்ப்பாணக் கல்லூரி சார்பாக வி.ஜே.வி. கொட்பிறி 5 இலக்குகளையும் நிலக்ஸன் 3 இலக்குகளையும் சுதர்சன் ஒரு இலக்கினையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 106 ஓட்டங்களை நோக்கி ஆடிய யாழ்ப்பாணக் கல்லூரி அணி 32.1 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து 105 ஓட்டங்களை மட்டும் பெற்று ஒரு ஓட்டத்தால் தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி சார்பாக டனிஸ்ரன் சிறப்பாக துடுப்பெடுத்தாடி 51 ஓட்டங்களையும் வி.ஜே.வி. கொட்பிறி 51 ஓட்டங்களையும் அதிகமாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் கிளிநொச்சி மகா வித்தியாலயம் சார்பாக சிறப்பாகச் செயற்பட்ட மு.நிதுசன் 5 இலக்குகளையும் ஜ.மிதுசன் 2 இலக்குகளையும் கஜீபன் ஒரு இலக்கினையும் வீழ்த்தினர். (கு)


# கரப்பந்தாட்ட தொடர் இன்று ஆரம்பம்



வடக்கு, மலையக விளையாட்டு ஒன்றியம் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்திலும், ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்திலும் இடம்பெறவுள்ளன.

ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ள ஆண்களுக்கான தொடரில் யாழ்.மாவட்டத்திலிருந்து சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி அணியும் புத்தூர் சோமாஸ்கந்தக்கல்லூரி அணியும், வயாவிளான் மத்திய மகா வித்தியாலய அணியும் கலந்து கொள்கின்ற அதேநேரம் ஆவரங்கால் இந்து இளைஞர் மைதானத்தில் ஆரம்பமாகும் பெண்கள் பிரிவினருக்கான ஆட்டத்தில் யாழ்.மாவட்டத்திலிருந்து வயாவிளான் மத்திய மகாவித்தியாலய அணியும், புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரி அணியும், தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி அணியும் கலந்து கொள்ளவுள்ளன.

ஆவரங்கால் மத்தி விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று காலை 9 மணிக்கு இந்தத் தொடருக்கான தொடக்க விழாக்கள் நடைபெறவுள்ளன. (க)



வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் அண்மையில் நடத்தப்பட்ட கராத்தே (ரக்குவாண்டு) போட்டியில் வெற்றி பெற்ற C.S.D வீரர்களுடன் பொறுப்பாசிரியர் மற்றும் பிரதம பயிற்சி ஆசிரியர் சென் சே. விஜயராஜ் ஆகியோரை படத்தில் காணலாம்.



புத்தூரில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் மானிப்பாய் றெட்றேஞ்சர்ஸ் கழகத்தை 1:0 என்ற கோல் கணக்கில் குருநகர் பாடும்மீன் வீழ்த்தியது.

# சென்னை அணி நிர்வாகம் டோனியிடம் ஒப்படைக்க முடிவு




சென்னை அணி நிர்வாகத்தை டோனியிடம் ஒப்படைப்பது தொடர்பாக கிரிக்கெட் வாரியம் ஆலோசனை நடத்தி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐ.பி.எல். கிரிக்கெட்டில் நடந்த சூதாட்டம் தொடர்பாக விசாரணை நடத்த உச்சநீதிமன்றம் நியமித்த லோதா கமிட்டி குழு, தண்டனையை அறிவித்தது.

இதில் சென்னை சுப்பர் கிங்ஸ், ராஜஸ்தான் ராயல்ஸ் அணியை சேர்ந்த நிர்வாகிகள் சூதாட்டத்தில் ஈடுபட்டதால் அந்த அணிகளுக்கு 2 ஆண்டுகள் விளையாட தடை விதித்தது.

இதனால் 2016 ஐ.பி.எல். போட்டியில் இந்த 2 முன்னணி அணிகள் பங்கேற்க முடியாத சூழ்நிலை நிலவுகிறது.

இந்த நிலையில் இந்திய கிரிக்கெட் வாரியம், சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் நிர்வாகத்தை நிர்வகிக்க அணித்தலைவர் டோனியிடம் கேட்க முடிவு செய்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏனெனில் சென்னை அணி ஐ.பி.எல்.லில் அசத்தி வருகிறது. இந்த அணி விளையாடாவிட்டால் ரசிகர்கள் பெரும் ஏமாற்றம் அடைவார்கள்.

மேலும் சென்னை அணியின் உரிமையாளரான இந்திய சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் துணைதலைவராக டோனி உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வர்ணம் பூசிய நரியே...

அநுராதபுரத்தில் நேற்று இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதலாவது தேர்தல் பிரசார கூட்டத்திலேயே அவர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரபால சிறிசேன மீது குற்றம் சுமத்த முடியாது. காரணம் அவரை ஆட்சிக்கு கொண்டு வந்த ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு அவர் ஐந்து ஆண்டு காலம் விசுவாசமாக இருப்பார். அதன் பிரதிபலிப்பே இதுவாகும்.

நாங்கள் இந்த தேர்தல் பிரசாரத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நம்பி ஆரம்பிக்கவில்லை. நாட்டு மக்களை நம்பியே நாங்கள் தேர்தல் பிரசாரங்களை முன்னெடுத்தோம். நுகேகொடையில் ஆரம்பித்த கூட்டம் முதல் இன்று நீங்கள் எம்மோடு இருக்கின்றீர்கள். இந்த மக்கள் கூட்டத்தை பார்க்கும் போது எங்கள் வெற்றி எந்தளவில் இருக்கும் என்பது புலப்படுகின்றது என்று தெரிவித்தார். (எ-11)

## ஜனாதிபதியின்...

இதையடுத்தே, தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய, மைத்திரிபால சிறிசேனவின் உரையை திரும்பத் திரும்ப ஒளிபரப்பக் கூடாது என்று இலத்திரனியல் ஊடகங்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

தேர்தலின் போது, எந்தவொரு வேட்பாளரையோ, அரசியல் கட்சியையோ ஊக்குவிக்கும் வகையில், இன்னொரு கட்சியை சாடும் வகையில் வெளியிடப்பட்ட எந்தவொரு உரை அல்லது அறிக்கை திரும்பத் திரும்ப ஒளிபரப்புவது அல்லது ஒலிபரப்புவது சட்டவிரோதமானது என்றும் தேர்தல் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது. (எ-11)

## தேர்தல் களத்தில் பிக்குகள்...

றத் தேர்தலில் எத்தனை வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படும், எங்கெங்கு அமைக்கப்படும என்பது குறித்து இறுதியான தீர்மானம் எடுக்கப்படவில்லை. இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் பொது பல சேனா 17 மாவட்டங்களில் போட்டியிடுகிறது. ஏனைய அரசியல் கட்சிகளும் பௌத்த பிக்குகளை வேட்பாளர்களாக நிறுத்தியுள்ளன. (எ-11)

## ரணிலுக்கு 15...

ஆகும்.

மக்கள் விடுதலை முன்னணி தலைவர் அநுரகுமார திஸாநாயக்க கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுவதோடு அவருக்கு கிடைத்துள்ள விருப்பு 10.

இதேவேளை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு கிடைத்துள்ள விருப்பு 16.

அவர் குருநாகல் மாவட்டத்தில் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## நான் தேசத் துரோகியாம்...

இந்த போராட்டத்தை ஆரம்பித்துள்ளோம். கட்சியை காப்பாற்ற எதையும் இழப்பேன் என்பதை உறுதியாக கூற விரும்புகின்றேன். ஜனாதிபதி தேர்தலின் போது எனக்கு சர்வதேச அழுத்தங்கள் இருந்தன.

**காட்டி கொடுத்தார்கள்**

பிரபாகரனிடம் மண்டியிட்டவர்கள்தான் தற்போது ஆட்சியில் உள்ளார்கள். நாட்டை காட்டி கொடுக்க எதை வேண்டுமாலும் செய்வார்கள். ஜே.ஆர். காலத்தில் புலிகளுக்கு ஆயுதங்களை வழங்கினார்கள். இந்த காலப்பகுதியில் பல பொலிஸ் அதிகாரிகள் கொலை செய்யப்பட்டார்கள்.

இவ்வாறு வரலாற்றை கூறி எந்தவித பயனும் இல்லை. ஆனால் அனைத்தையும் ஞாபகம் வைத்துகொள்ள வேண்டும். கடந்த ஆட்சியில் சந்திரிக்கா நாட்டை பிளவுப்படுத்த சதிசெய்தார். எல்லோருக்கும் ஞாபகம் இருக்கும் என நம்புகின்றேன். ஆனால் எனது ஆட்சியில் இவ்வாறு எந்த பிழையும் நடக்க இடம் கொடுக்கவில்லை. நாட்டுக்கும் மக்களுக்கும் துரோகம் செய்யவில்லை.

தற்போதைய ஆட்சியில் நாட்டுக்கு துரோகமிழைத்தவர்கள் கூடவே இருக்க எனக்கு விரல் நீட்டி கதைக்கின்றார்கள்.

**100 நாட்கள்தான் போனது**

நாங்கள் ஆட்சிக்கு வந்து நாட்டை அபிவிருத்தி செய்ய நான்கு வருடங்கள் முடிவடைந்தன. ஆனால் இவர்களின் நல்லாட்சியில் நாட்டை பின்னோக்கி கொண்டுச் செல்ல 100 நாட்கள் மாத்திரமே போனது.

ஆறு மாதத்திலேயே இந்த ஆட்சி இவ்வாறு இருக்கின்றது என்றால் ஐந்து வருடத்தில் என்ன நடக்கப்போகின்றது.

**வடக்கில் பயங்கர நிலை**

வடக்கில் தற்போது பெண் பிள்ளைகள் வீதியில் சுதந்திரமாக நடமாட முடியாமல் உள்ளது. தெற்கில் இருந்து வடக்கு கிழக்குக்கு செல்ல மக்கள் அச்சம் கொள்கின்றனர். அவ்வாறான பயங்கரமான நிலை வடக்கில் ஏற்பட்டுள்ளது. இது பயங்கரவாதம் ஆரம்பமாகுவதற்கான நிலையாகும்.

நான் எனது ஆட்சியில் மேற்கொண்ட சகல அபிவிருத்திகளையும் நிறுத்தியுள்ளார்கள். 100 நாட்களில் மக்களுக்கு அநியாயம் செய்துள்ளார்கள் என்றார். (எ-11,12)

## துறைமுக நகரத்...

என்பதே அவரது முதன்மையான கோரிக்கையாக இருந்தது.

எமது அரசாங்கத்திடம் அந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது போலவே இப்போதைய அரசாங்கத்திடமும் நிச்சயம் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கும்.

துறைமுக நகரத் திட்டம் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் என்பதே அவர் கூறிய காரணம்.

இந்தியாவின் பாதுகாப்புக்கு கொழும்பு துறைமுக நகரத் திட்டத்தினால் அச்சுறுத்தல் ஏதும் ஏற்படாது என்று முன்னைய அரசாங்கம் உத்தரவாதம் அளித்தது.

அந்தக் கோரிக்கையை தற்போதைய அரசாங்கம் எவ்வாறு எதிர்கொள்கிறது என்று எனக்குத் தெரியவில்லை என்றும் அவர் கூறியுள்ளார். (எ-11)

## 2016...

தொடர்ந்து உரையாற்றுகையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது அரசியல் பயணத்தை முடிக்க விரும்புகிறது.

எம்மைப் பொறுத்தவரை எமது அரசியல் பயணத்தை தொடர்ந்தும் நீடிக்க முடியாது.

எமது அரசியல் பயணத்தை முடிக்க விரும்புகிறோம். தொடர்ந்தும் நீட்டிக் கொண்டு போக நாம் விரும்பவில்லை. வடக்கு கிழக்கிலுள்ள தமிழ் மக்கள் நடைபெறவுள்ள தேர்தலில் உயர்ந்த வெற்றியொன்றை கூட்டமைப்புக்கு பெற்றுக்கொடுக்க வேண்டும். அவ்வாறு தருவார்களானால் 2016ஆம் ஆண்டுக்குள் எமது மக்களின் பிரச்சினைக்கான அரசியல் தீர்வொன்றை கண்டே தீருவோம். அதற்கு மக்கள் ஆதரவு எமக்கு வேண்டும் என்றார். (எ-11)

## புங்குடுதீவு மகா வித்தியாலய அதிபர் காலமானார்

புங்குடுதீவு மகா வித்தியாலய அதிபர் சதாசிவம் கணேஸ்வரன் (வயது 51) மாரடைப்பால் நேற்று முன்தினம் காலமானார்.

கொழும்பிற்கு செயலமர்வு ஒன்றுக்காகச் சென்ற சமயம் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. புங்குடுதீவு மகா வித்தியாலய மாணவி சி. வித்தியாவின் மரணத்தின் பின்னர், கொலை யாளிகளை கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு அதிபர் பல்வேறு வழிகளி லும் முயற்சிகளை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

## மகிந்தவின் சலுகை...

ஜனாதிபதி என்ற பதவிக்கு வழங்கப்பட்டுள்ள விசேஷ சலுகைகள் அரசியல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதை அனுமதிக்க முடியாதென்று கூறியிருக்கும் அவர் இது தொடர்பாக புகார் செய்தபோது தன்னால் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்க முடியா தென்று தேர்தல் ஆணையாளர் கூறியுள்ளதாகவும் தெரிவித்தார். (எ-11)


### காணி விற்பனைக்கு

யாழ் வட்டுக்கோட்டையில் அரச தள வைத்தியசாலைக்கு அண்மையில் பஸ் போக்குவரத்து பிரதான வீதியில் இருந்து 3வது காணியாக அமைந்த 9.36 பரப்பு நல்ல குடியிருப்புக்காணி விற்பனைக்கு.

முழு காணியின் விலை 18 இலட்சம் (1164)

தொடர்பு 0773686142

### வேலை ஆட்கள் தேவை

எமது ஸ்தாபனத்திற்கு வேலை ஆட்கள் தேவை. ஆரம்ப வேதனமாக ரூபா 12000/= வழங்கப்படும். வயது 18 தொடக்கம் 23 வரை- ஆண்கள் மட்டும். யாழ் நகரிலிருந்து ஐந்து கிலோமீற்றருக்கு உட்பட்டவர்களும், கணனி அறிவுடையவர்களும் விரும்பத்தக்கது. கிங்ஸ் எலெக்ரோனிக்ஸ்

T.P - 021 222 3857 நம் 11-A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (1170)


## மரண அறிவித்தல்

### பத்மநாதன் பாவலன்



பளை நகரம், பளையைப் பிறப்பிடமாகவும், 1ம் கட்டை, பருத்தித்துறையை நிரந்தர முகவரியாகக் கொண்டவரும், லண்டனில் வசித்து வந்தவருமான செல்வன் பத்மநாதன் பாவலன் 05-07-2015 அன்று லண்டனில் அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை பத்மநாதன் ( முன்னாள் கிராம உத்தியோகத்தர்-பளை) - பரமேஸ்வரி (ஓய்வுபெற்ற மே. பா.கு.சு.சே.உத்தியோகத்தர்-பருத்தித்துறை) தம்பதிகளின் அன்பு மகனும் பாரதி, பானுகோபன் ஆகியோரது சகோதரனும் பூங்குன்றனின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை 19.07.2015 ஞாயிற்றுக் கிழமை காலை 8.00 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று 11 மணிக்கு பூதவுடல் தகனக் கிரியைக்காகப் பருத்தித்துறை சுப்பர் மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"ஆனந்தபவனம்"
1ம் கட்டை ஒழுங்கை,
பருத்தித்துறை.
(வலயக்கல்வி அலுவலக ஒழுங்கை)
Cont.No: 0776685086

தகவல்:
அன்னை-சுதன்
அண்ணி-பத்ராதி
மற்றும் குடும்பத்தினர்.

(1163)

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 16 - 10 - 1964

மறைவு 16 - 07 - 2015

### அமரர் சதாசிவம் கணேஸ்வரன்

எமது வித்தியாலய முதல்வர் திரு.சதாசிவம் கணேஸ்வரன் அவர்கள் 16.07.2015 அன்று இறைபதம் அடைந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(1167)

பாடசாலை சமூகம்
யா/புங்குடுதீவு ம.வி

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் திருமதி தவமணி கந்தசாமி



எமது நண்பரும் திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழக உறுப்பினருமான லயன்ஸ் K.சபாநாதன் அவர்களின் அன்புத் தாயார் இறைபதம் எய்தியமையிட்டு அவர் குடும்பத்தின் துயரில் நாமும் துயர் அடைகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

பிரிவின் துயரில்
திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழகம்,
யாழ்ப்பாணம்.

(1172)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் தேசத்...

மேலும் வடக்கு கிழக்கில் மிகவும் பயங்கரமான நிலை காணப்படுகின்றது. மக்கள் அங்கு செல்ல மிகுந்த அச்சம் கொள்கின்றனர்.

**நான் தேசத் துரோகியாம்**

கடந்த ஆறு மாத காலத்தில் எனக்கு எதிராக பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. நான் அரசியலில் இருந்த காலம் முதல் வீட்டுக்கு செல்லும் வரை இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் முன்வைத்தது இல்லை. என்னை ஒரு குற்றவாளியாகவும்தேசத்துரோகியாகவும் உருவகித்தனர். ஆனால் நாட்டு மக்களுக்கு தெரியும்நான் யார் என்று.

**பயங்கரவாதம்**

நாட்டில் பயங்கரவாதம் காணப்பட்ட போது எத்தனை சடலங்கள் வந்து இங்கு விழுந்தன. இரத்தஆறு ஓடியது. இந்த இரத்தம் தான் என்னை துடிதுடிக்க வைத்தது.

நான் ஆட்சிக்கு வரும் போது நாடு இருந்த நிலையும் தற்போதைய நிலையையும்நீங்கள்காண முடியும்.

வீதி அபிவிருத்தி, மின்சாரம் பாடசாலை, கல்வி, மருத்துவம் என சகலத் துறைகளையும் அபிவிருத்தி செய்தேன். நாட்டையே சுத்தம் செய்தேன்.

இதனால் தான் உலகவரலாற்றில் மிக விரைவாக அபிவிருத்தி அடைந்து வரும் நகரமாக கொழும்பு நகரை மாற்றியமைத்தேன்.

**வடக்குக்கு ரயில் சேவை**

25 வருடங்களுக்கு மேல் வடக்குக்கு ரயில் செல்லவில்லை. அங்குள்ள பிள்ளைகளுக்கு ரயில் என்றால் என்னவென்று தெரியாது. பீப்பாய்களை காட்டி இதுவே ரயில் என்பார்கள்.

இதுபோன்றே நாகதீபம் என்றால் எப்படி இருக்கும்என்று நமக்கு தெரியாது. இலங்கை புற உருவ படத்தில் தான் நாக தீபத்தை பார்த்து இருப்போம். ஆனால் இவற்றையெல்லாம் மாற்றிமைத்துள்ளேன் பயங்கரவாதத்தை ஒழித்து பல அபிவிருத்திகளைசெய்தஎன்னை நாட்டை பாதாளத்துக்கு கொண்டு சென்றேன் என்றார்கள்.

**கட்சியை கட்டியெழுப்புவேன்**

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை கட்டியெழுப்பவதைவேண்டுமென்றாலும் செய்வேன். அதற்காக தான்

23ஆம் பக்கம் பார்க்க

# ஜனாதி...

மைத்திரிபால சிறிசேனவை பாதுகாக்கும் பொறுப்பு எமக்கு உள்ளது. அதனை நாம் செய்தே ஆக வேண்டும் என தெரிவித்தார். (எ-11)

**விற்பனைக்கு**
நவக்கிரி சந்தி புத்தூரில்
புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சகல
வசதியுடன் வீடும்
மூன்று கடையும் உடனடியாக
விற்பனைக்குண்டு (1150)
தொடர்பு 0776607851













Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.07.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.